சக்தி

மாத வெளியீடு

•

சாரத்திரன்

ஹிந்துக்களும் குரானும்	... மகாத்மா காந்தி	1
சுதந்தரப் பிரதிக்ஞை	... சுப்பு	3
எது நல்ல நடை?	... சுப. நாராயணன்	6
வாழ்க்கையில்...	... உதயசங்கர்	10
இரவல் ரத்தம்	... 'லக்ஷ்மி'	14
ஜான் லிவெலின் ஜாய்	... 'பதி'	20
அஸ்ஸாமின் கதி என்ன?	... ஜே. எச். டிலேயர்கான்	24
குங்குமப் பொட்டு	... தமிழ் வாணன்	29
காய்கறியும் ஆரோக்கியமும்	... ஹெலன் எட்வர்டு	45
சோவியத் குடியரசில்...	... அரசியல்வாதி	49
ஒரு கதை	... மாக்ஸிம் கார்க்கி	53
மார்க்ஸீயம்	... ரா. ஹாலாஸ்யநாதன்	61
தீப்பெட்டி	... எம். ராமானந்த ஹலேரி	65
சீனாவில் இலக்கியப் புரட்சி	... லின் யூடாங்	67
எண்ணெய் நெய்யாகுமா?	... ப. வெ. வேங்கடு...	71
ஒரே வழி	... ராஜாஜி	76
புத்தக உலகம்	... காரா : ராமையா	78

முதலியவை

*

விய — மாசி

மலர் 13 — சக்தி — இதழ் 11

அணா 8



88868

இந்தப் படம் கும்பகோணம் மகாமகத் திருவிழாவை ஞாபகப்படுத்துகிறது. கும்பகோணம் மகாமகத்தைப் போலவே கும்பகோணம் வெற்றிலையும் பெயர்பெற்றது. அந்த வெற்றிலைக்கு உகந்த, உயர்ந்த பாக்குத்தூள்

அசோகா

→ பாக்குத்தூள் ←

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

SRB
வாலாயமான பழைய கடை!
ஆகாய வீதியில் அந்திவானத்தின் அழகிய வர்ணங்களை அப்படியே
பிடித்து அடைத்தாற்போல் பல நூதன பட்டு ஜவுளி தினுசுகள்
தற்சமயம் ஏராளமாய் கைவசம் குவிந்துள்ளன
நேரில் வந்து பாருங்கள்!
S. R. B. குப்புசாமி அய்யர் & சன்
(பழைய விலாசம்) S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்
No. 117, நயினியப்ப நாய்க்கன் தெருவு, P. T. மதருஸ்
No. 230, கீழமாரெட் வீதி, மதுரை

கொஞ்சம் பொருள் அதிகமாய்ப் பயன் படும்படிச் செய்வது.

AC93TM



பிரசினை: 9 தீக்குச்சிகளைக் கொண்டு 5 முக்கோணங்கள் அமைக்கவும்.



விடை. படத்தில் காட்டியுள்ளபடி ௯ தீக்குச்சிகளை அமைக்கவும். ஐந்தாவது முக்கோணம் நிழலுருவமாய் அமைக்கப்பட்டுள்ள தீக்குச்சிகளினால் உண்டாகிறது.

தற்போதைய விலைவாசிகள் இருந்து கொண்டிருக்கிற வரையில்—உணவு விஷயத்திலாகிலும், துணி விஷயத்திலாகிலும், கல்வி விஷயத்திலாகிலும் ஒரு திட்டத்தை அனுசரிக்காமல் காரியங்களைக் கண்டபடி செய்யும் பட்சத்தில் கொஞ்சப் பொருள் அதிகமாய்ப் பயன்படும்படி செய்யமுடியாது. குடும்பத்தின் வரவு செலவு திட்டத்தைச்

சீர்குலைக்கும் அவசரமான சந்தர்ப்பங்களைச் சமாளிக்க ஏன் ஒரு திட்டம் வகுக்கக்கூடாது? நீர் இடைவிடாமல், ஒழுங்காகச் சேமித்து வருவீரானால், உம்மிடம் எப்போதும் ஒரு சேமநிதி இருக்கும். இத்தகைய சேமிப்புகளை வட்டிக்குப் போட்டு வைப்பதற்கான சிறந்த சாதனங்கள் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளுமேயாகும்

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நேஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா மிருந்தாலுஞ்சரி மைனரா யிருந்தாலுஞ்சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்மெண்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸுகளிலாவது கவர்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!

நீங்கள் நேரில் வந்து பரீக்ஷை செய்யுங்கள்

முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானுல் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானுல் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்கு கவலே வேண்டியதில்லே. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS

விய
மலர் 13

சக்தி

மாசி
இதழ் 11

மெய்ப் பொருள் காண்பது அறிவு

●

ஹிந்துக்களும் குரானும்

மகாத்மா காந்தி

முஸ்லிம் அல்லாதவர்கள் குரான் ஓதுவது தவறு என்றும், ஹிந்து வேதங்களுடன் குரானை யும் ஓதுவது தவறு என்றும், முஸ்லிம் அல்லாதவர் குரானுக்கு வியாக்கியானம் கூறுவது முஸ் லிம்களுக்குப் பிடிக்கவில்லை என்றும் சிலர் என்னிடம் கூறி னார்கள். நான், கடவுள் பக்தி யில் சிறந்த முஸ்லிம் அம்மையார் ரெய்கானு டயாப்ஜியின் வேண்டு கோளின் பேரிலேயே குரானி லிருந்து சில சுலோகங்களை என் னுடைய பிரார்த்தனையில் சேர்த் துக்கொண் டிருக்கிறேன். அல்லாவின் திருநாமத்தைக்கூட முஸ்லிம் அல்லாதவர்கள் உச்ச ரிக்கக் கூடாது என்று கூறுவது மதப் பொறுமை யின்மையின் சிகர மாகும் அல்லவா? குரா னுக்கு நான் வியாக்கியானம் கூறக் கூடாது என்று கூறுகிறார் களே, அதற்கு ஏற்கெனவே நான்கு வியாக்கியானங்கள் ஆதி காலத்தி லிருந்தே ஏற்பட் டிருக் கின்றன. அவற்றுள் எது சரி, எது தவறு என்று கூற முடி யுமா? இங்குள்ள முஸ்லிம் மதக் குருக்கள், முஸ்லிம் அல்லாதவர் கள் குரானை ஓதவோ, அர்த்தப் படுத்தவோ கூடாது என்று எண்ணுவார்க ளானல், அதை அவர்கள் பகிரங்கமாகச் சொல் லட்டும். அப்படிச் சொன்னால் நிலைமை சிக்கலாகிவிடும். ஆனல், அதற்கும் நான் தயாராக இருக் கிறேன்.

நான் குரானை ஓதும் விஷயத் தில் எனக்கு எவ்வித அரசியல் நோக்கமும் கிடையாது. ஹிந்துக்களை நல்ல ஹிந்துக் களாக ஆக்கவும், முஸ்லிம்களை நல்ல முஸ்லிம்களாக ஆக்கவும், கிறிஸ்தவர்களை நல்ல கிறிஸ்தவர் களாக ஆக்கவும் நான் எப்பொழு தும் முயன்று வருகிறேன். நான் யாரையும் தம்முடைய மதத்தை விட்டுவிடும்படியாக ஒருபொழு தும் கூறியதில்லை. உலகத்தி லுள்ள சகல மத சாஸ்திரங்களி லிருந்தும் சுலோகங்களை என்னுடைய பிரார்த்தனையில் சேர்த்துக்கொள் ளும் அளவுக்கு, என்னுடைய மதமானது பரந்த நோக்க முடையதாகும்.

இப்பொழுது இங்கே அக்கிரமம் செய்த முஸ்லிம்களுக்கு விரோதமாக ஹிந்துக்கள் தொடர்ந்திருக்கும் வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவை சமா

தானம் உண்டாவதற்குத் தடையாக இருக்குமென்றும் சிலர் கூறுகிறார்கள். கோர்ட்டுகளில் வழக்குத் தொடர்வது எனக்குப் பிரியமில்லாத காரியம்தான். ஆனால், அக்கிரமிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கூறுகிறவர்களுக்கு நான் அநுதாபம் காட்டாமல் இருக்க முடியவில்லை. கொலை செய்தவர்களைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளலாம். ஆனால், அதற்காகக் கொலையாளிகளைத் தண்டிக்கக் கூடாது என்று சர்க்காரிடம் சொல்ல முடியாது. கோர்ட்டில் வழக்கு நடக்காமல் இருக்கும்படி செய்வதற்குரிய சரியான வழி யாதெனில், குற்றம் செய்தவர்கள் பகிரங்கமாகக் குற்றத்தை ஒப்புக்கொண்டு, ஜனங்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பது ஒன்றுதான். அந்த மாதிரிச் செய்வதற்காக முஸ்லிம்கள் உழைப்பார்களானால், அதற்கு என்னால் இயன்ற உதவி முழுவதும் செய்யத் தயாராகஇருக்கிறேன்.

[பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதன் சாரம்.]

*

உணர்வு மரப்பு

இதுவரையில் ரண சிகிச்சையின்போது, உணர்வு மரப்புக்காகக் கையாளப்பட்டு வருகிற மருந்து 'க்ளோரோஃபாம்' ஒன்றுதான். ஆனால், இதை உபயோகப்படுத்துவதில் அநுபவமும் திறமையும் வேண்டும். அளவுக்கு அதிகமாகவோ, குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் நோயாளியை அந்த மயக்க மருந்தின் வசப்படுத்தி வைத்திருந்தாலோ எதிர்பாராத அசந்தர்ப்பம் நேர்தல் கூடும். மேலும், இது சுவாசகோசத்தையும் மூளையையும் பாதிக்கிறது.

ஆகவே, உணர்வு மரப்புக்காக மருந்துகள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் பல சிறந்த விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கின்றனர். சமீப காலத்தில் மெல்பான் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் உணர்வு மரப்புக்கு ஒரு முறையைக் கண்டுபிடித்துள்ளனர்.

அம் முறை இன்ஜக்ஷன் மூலம் மருந்தை உடலுக்குள் சேர்ப்பதல்ல; மூச்சை உள் இழுக்கும்பொழுது, உட்கொள்ளும் க்ளோரோஃபாம் போன்றதுமல்ல. மின்சாரப் பொறிகளின் மூலம் உணர்வை மரக்கச் செய்வதுதான் இது. முதலில், நாய் முதலிய மிருகங்களிடம் இம் முறை வெற்றிகரமாகக் கையாளப்பட்டது. விஞ்ஞான, தொழில் முன்னேற்றத்துக்கான ஆராய்ச்சிக் குழுவின் கருத்துக் கிணங்க, இந்த மின்சார உணர்வு மரப்புக் கருவி செய்யப் பட்டது. இந்தக் கருவி பார்ப்பதற்கு ரேடியோவைப்போல் தோன்றுகிறது. இதனுடைய சிறந்த குணம் என்னவெனில், மற்ற மரப்பு மருந்துகள்போல் அல்லாமல், பொத்தானை அழுத்திய மாத்திரத்தில் நோயாளி மீண்டும் உணர்வு பெறுவதுதான்.

இந்த உணர்வு மரப்புக் கருவியை உபயோகப்படுத்திய பிறகு, உணர்வு மீண்டதும்,முன் போலவே நோயாளியின் மூளை சரியாக வேலை செய்கிறதா அல்லது இம் முறையால் மூளை வேலை பாதிக்கப்படுகிறதா என்று பரிசோதித்தனர். நோயாளி ஆழ்ந்த உறக்கத்தினின்றும் எழுந்ததுபோல் இருக்கிறானே ஒழிய, வேறு ஒருவித மாறுதலும் இல்லை என்று பரிசோதனையின் மூலம் தெரிந்தது.

இந்த முறை உடலையும், மூளையையும் பாதிக்காமல் உணர்வை மட்டும் மரத்துப்போகச் செய்வதால், வருங்காலத்தில் மருத்துவர்கள் ரண சிகிச்சைக்கு இதையே விரும்பிக் கையாளுவர் என்பது திண்ணம்.

சுதந்தரப் பிரதிக்ஞை

●

கொத்தமங்கலம் சுப்பு

மண்மிசை வந்த மக்களெல் லோரும்
எண்சா ணுடலம் எடுத்தோர் யாவரும்
உண்ண உடுக்க உரைக்க நினைக்க
எண்ணிய காரியம் எளிதில் இயற்ற
இதந்தரு செல்வம் யாவும் எய்திடச்
சுதந்தர முடையோர் என்று துணிந்தோம்

எந்நாட் டவர்க்கும் இயல்பி னமைந்தது
இந்நாட் டவர்க்கும் ஏற்றதே யாகலின்
பாரத நாடாம் பழம்பெரு நாடிதில்
சீருடன் பிறந்த செல்வர்கள் யாவரும்
உழைப்பின் பலனை உறுதுணை கொண்டு
தழைத்து வாழத் தகுதி யுடையோம்

எம்முடை முயற்சி ஈந்திடும் பலனை
எம்மவர் நுகர்வதற் கிடையூ ருகி
எவர்தடுத் தாலும் எவர்பறித் தாலும்
அவருடை அரசை அடியொடு மாற்ற
ஒட்டியொ ழிக்க உரிமைகள் உடையோம்
நாட்டிற் கிதுவே நலமெனக் கண்டோம்

இந்திய நாட்டில் இன்றுள அந்நிய
இங்கிலிஷ் ஆட்சி இங்குள மக்களின்
சுதந்தர மதனைத் துடைத்தது மன்றிச்
சூதறி யாரைச் சுரண்டி வழித்து
அரசிய லழித்து அருங்கலை யழித்து
ஆத்தும ஞானமும் அழித்தா ராதலின்
அவர்தம் உறவை அறவே யொழித்து
அருமைச் சுதந்தரம் அடைய எழுந்தோம்
புனிதம் நிறைபரி பூரண சுதந்தரம்
இனிதே யடைய எழுந்தோம் துணிந்தோம்

அதற்கு

பாரத நாட்டுப் பண்புடை மக்கள்
பலாத் காரமாம் பாதையை மிதியோம்
சாந்த பூமியில் தழைத்து வளர்ந்து
தாரணி யுள்ளார் யாரும் வியக்கத்
தட்டி யெழுப்பித் தனிநெறி காட்டித்
தன்னம் பிக்கை தந்த தாரகம்
சுயராஜ் யத்தின் சுடரைக் கண்முன்
தோன்றச் செய்த சுத்தசாத் விகம்
ஒன்றே நெறியென அன்றும் இன்றும்
என்றுங் கண்டோம் எங்குங் கண்டோம்

ஆதலின்

அஹிம்சை யென்னும் அறநெறி யதனில்
அத்தன் அளித்த ஆயுத மாகச்
சத்திய மதனைத் தாங்கி நடக்கும்
பக்தர்கள் கூட்டிப் படைகொடு சென்று
விர சுந்தரப் போரை நடத்திப்
பூரண சுதந்தரம் பெறுவோ மென்றே
ஆணைக ளிட்டோம்! ஆணைக ளிட்டோம்!
அறிவு சாக்ஷியாய் ஆணைக ளிட்டோம்!
இன்றும் புதிதாய் இட்டோம் ஆணை!
எம்முடல் உயிர்பொருள் இறைமே லாணை!

இனி

நாட்டுப் போரை நன்கு நடத்தக்
காட்டினன் ஓர்வழி காந்தியெம் பெருமான்
சாந்த வழியதாம் காந்தி வழிக்குச்
சம்மதந் தந்தது காங்கிரஸ் அதனால்
கதரும் உறவும் கனிந்து வளர்ந்து
விதவித மானபல் வேற்றுமை யகற்றி
வேண்டாப் பூசலின் வேரைக் களைந்து
தீண்டா மைதனைத் தீயினி லிட்டு
ஆக்கத் துக்கென் றறிஞன் வகுத்த
அருமைத் திட்டம் அதைநிறை வேற்றி
நாட்டின ரெல்லாம் நட்புடன் வாழக்
கூட்டிடும் வழியே குறியெனக் கொண்டோம்



உங்களுக்காகத் தயாரிக்கப்படும்
'வெஸ்ட் எண்ட்' கடிகாரங்கள்!
கடிகாரம் ஓடுவதற்கு சக்தி அளிக்கும் மெயின்ஸ்பிரிங் மெல்லிய டெம்பர் ஏற்றிய உருக்கில் செய்யப்பட்டு கோப்பைக்குள் பலமாகச் சுற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுருள் பிரியும் பொழுது அதன் சக்தி கடிகாரத்தின் உள்ளேயிருக்கும் பற் சக்கரங்கள் மூலம் எஸ்கேப் வீலுக்குச் செல்லுகிறது. நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட இந்த மெயின்ஸ்பிரிங்குகள், வெஸ்ட் எண்ட் கடிகாரங்களின் இதர பாகங்களைப் போல் சிறந்தது என பல நுணுக்கமான பரிசிலனைகள் மூலம் உறுதி கூறுகிறோம்.
போதிய அளவு இறக்குமதியின்மையால் விளம்பரம் செய்துள்ள எல்லா வகைகளும் சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் இருப்பதற்குத் தகுந்தாற்போல் ஒவ்வொருவரையும் திருப்தி செய்ய முயற்சிக்கிறோம்.
வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி
12
3
9
சேகண்டஸ் டோனு
ரோல்ட் கோல்ட், 20 மைக்ரோன் ரகம் ரூ. 85
9-காரட் சொக்கத் தங்கம் ... ... ரூ. 135
1
2
3
4
5
7
8
9
10
11
12
சேகண்டஸ் மாடர்ன்
நிக்கல் வெள்ளி ... ... ரூ. 61
ரேடியம் முள்ளும், எழுத்துக்களுமுள்ளவை
எந்த ரகத்துக்கும் ரூ. 3/- அதிகம்
W
WEST END WATCH CO.
BOMBAY CALCUTTA

இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : மாயவரம் — சென்ட்ரல் ஆபீஸ் : சென்னை

1946ளு டிசம்பர்மீ 31-ந் தேதிய சுருக்கமான கணக்கு விபரம்

பொறுப்புகள்

செலுத்தப்பட்ட மூலதனம்				18,75,000	0	0
க்ஷேம நிதி				7,75,000	0	0
அவசர கால நிதி				16,525	13	11
வரிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது				76,182	15	0
டிபாஸிட்டுகளும் பொறுப்புகளும்				5,49,01,266	3	3
வசூல் பில்களும் கமர்ஷியல் கிரெடிட்களும்				39,00,258	12	2
கொடுக்கப்பட வேண்டிய டிராப்டுகளும் தந்திகளும்				2,99,196	2	8
சில்லரை இனங்கள்				79,311	0	3
பிராஞ்ச் அட்ஜஸ்ட்மெண்டுகள்				17,26,806	10	8
லாப நஷ்டக் கணக்கு						
முன் கணக்கு விபரப்படி	3588	7	1			
இவ் வருஷ நிகர லாபம்	**8,14,606**	**11**	**3**			
	8,18,195	2	4			
30-6-1946 கணக்குப்படி ஒதுக்கிய தொகை	3,86,469	1	0			
				4,31,726	1	4
				6,40,81,273	11	3

ஆஸ்திகள்

கடன்கள் இதர அட்வான்சுகள்				3,23,61,983	6	8
பாங்கிக் கட்டிடங்கள்				1,98,510	10	0
இரும்புப் பெட்டிகள் மரதளவாடங்கள்				1,05,425	13	8
புத்தகங்கள் ஸ்டேஷனரி சாமான்கள்				53,684	15	1
வசூல் பில்களும் கமர்ஷியல் கிரெடிட்டுகளும்				39,00,258	12	2
சில்லரை இனங்கள்				6.75,515	14	5
முதலீடுகள் (சர்க்கார் பத்திரங்கள் முதலியவை)				1,56,74,768	3	0
கைவசமுள்ள ரொக்கம்	59,49.363	11	10			
பாங்கிகளில் இருப்பு	51,61,762	4	5			
				1,11,11,126	0	3
				6,40,81,273	11	3

P. S. சுப்ரமணிய ஐயர் அண்ட் கம்பெனி
ரிஜிஸ்டர்ட் அக்கௌன்டன்ட் அன்ட் ஆடிட்டர்ஸ்

S. N. N. சங்கரலிங்க ஐயர்
மானேஜிங் டைரக்டர்

இங்கிலீஷ் ஆட்சி தன்னை யொழிக்க
எழுந்தே ஆணை இட்டோ மாயினும்
ஆங்கில மக்களும் அதிகா ரிகளும்
அனைவரும் எமது அன்புக் குரியோர்
சாதி ஹிந்துவும் அரிஜன மக்களும்
பேதமொழிந்து பிரியமாய் வாழ
இடையூ ருகும் இம்சைப் பிணியை
இன்னே விரட்டி இன்புறச் செய்வோம்
அரசியல் ஒன்றே தேசம் ஒன்றே
ஆக்கப் பொருளா தாரமும் ஒன்றே
ஆகலின் இந்தியர் அனைவரும் ஒன்றாய்
அன்பு கலந்து வாழ்வோம் என்றும்

இந்திய நாட்டில் இருந்து வாழும்
எண்ணருங் கோடி ஏழைகட் கெல்லாம்
ஏற்றந் தருவது ராட்டையுங் கதரும்
என்பது கண்டோம் இதுமுதல் நாங்கள்
என்றும் கதரே இழைத்து உடுப்போம்
ஏழைக் குடிலில் இயற்றும் பொருளே
இயன்ற மட்டில் ஏற்று மகிழ்வோம்
தேகம் பொருளும் ஜீவனும் இந்த
தேசத் திற்கா மாசறு போரில்
தியாகம் செய்த சிலர் தம்மைச்
சிரமேற் கொண்டு மறவா திருப்போம்
அன்னவர் தங்கள் ஆவி யீந்தது
மன்னு சுதந்தர மதற்கே யாதலின்
சுதந்தரத் தேவி தோன்றும் வரையாம்
சோறும் சுகமும் துலுங்கருதே யிதாம்
கண்ணுள் மணியாய்க் காத்து வளர்த்த
காங்கிர ஸுக்குக் கட்டுப் படுவோம்
பணிவோம் எம்மைப் பணிக்கும் போதில்
பாய்வோம் சுதந்தரப் போரில் என்றே
பாரத மக்கள் பகர்ந்தோம் ஆணை !
பாருங் கடலும் படைப்பெலாம் ஆணை !



எது நல்ல நடை?

சுப. நாராயணன்

நல்ல நடத்தையைப் போலவே, நல்ல நடையும் தானாக உண்டாகவேண்டிய ஒன்று. ஒருவர் சொல்லிக் கொடுத்து மற்றவர் கற்றுக் கொள்ளக்கூடிய தல்ல. தொடக்கத்தில், மற்றவர்களுடைய உதவி நமக்கு வழிகாட்ட முடியும். மற்றவர்களை ஓரளவு நாம் பின்பற்றக்கூடச் செய்வோம். ஆனால், நமக்கு நம்மிடத்தில் தன் நம்பிக்கை யிருந்தால், மற்றவர்களுக்குச் சொல்லவேண்டிய விஷயம் நம்மிடம் இருப்பதாக நான் திடமாக உணர்ந்தால், நமக்கு ஒரு விதமான குறிக்கோள் உண்டாகிவிடுகிறது. அதை அடைய வேண்டுமென்ற ஆசை தீவிரமாகத் தீவிரமாக, நமக்கென்று உரிய ஒரு தனி நடை நம் எழுத்தில் உண்டாகிவிடுகிறது. நடை ஸ்திரப்பட்டதும், அது நமது நடத்தையை மறைமுகமாக உருவப்படுத்துகிறது. நடத்தையின் உருவம் திட்டம் பெறத் திட்டம் பெற, அதில் அழுத்தமும், உறுதியும் உண்டாகின்றன. இப்படிப்பட்ட அழுத்தமான நடத்தை உடையவர்களுடைய எழுத்து வன்மை மகா சக்தி வாய்ந்தது. மக்களின் வாழ்வை மாற்றி அமைக்கக்கூடிய திறமை வாய்ந்த பெரியார்களுடைய சொந்த வாழ்க்கை நடத்தையும், எழுத்து நடையும் தனிச் சிறப்பும், கவர்ச்சியும், அழுத்தமும் பெற்றிருப்பது அன்றும், இன்றும் என்றும் நேரே காணக்கூடிய அன்றாட உண்மை.

சில மாதங்களுக்கு முன், சிங்கப்பூரி லிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதை எழுதியவன் என் தம்பி—உறவிலும், தொழிலிலும். எனது எழுத்து முயற்சிகளைப் பற்றிப் பாராட்டிவிட்டுக் கடைசியில் பின் கண்ட கருத்துப்பட எழுதியிருந்தான்: "உங்கள்......நூல் பாட புத்தகமாக வைக்கத் தகுந்தது. உங்கள் கட்டுரைகள் அரிய கருத்துக்களைப் புது முறையில் தெளிவாகச் சொல்லுகின்றன. சக்தியில் அருமையான விஷயங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால், நடை அழகு என்பது அறவே இல்லை! இலக்கண வரம்பும் இல்லை! ஏன் இப்படி? உங்களுக்கு அழகான நடை எழுத வராதா, என்ன?"

தம்பியின் கடிதத்துக்கு உடனே பதில் எழுதக் கூட வில்லை. படித்த பையன் ஆகையால், ஆதாரங் காட்டி, விளக்கிச் சொன்னால்தான் ஒப்புக்கொள்வான். இல்லாவிட்டால், என் மேல் அவன் வைத்திருக்கும் கொஞ்ச நஞ்ச மதிப்பும் போய் விடும். தம்பியா யிருந்தாலும், அவன் என்னை மதிப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

மேற்படித் தம்பி வயதுப் பையனாய்ச் சிங்கப்பூரி லிருந்து வந்த காலத்தில், நடை அழகைப்பற்றி அவனைப் போலவே நானும் எண்ணிவந்தது எனக்கு இன்றும் நினைவிருக்கிறது.

நடத்தையின் வெளிப்பாடுதான் நடை என்று நான் நம்புகிறேன். நல்ல, திடமான

"உங்களுக்கும் எனக்கும் வேண்டியது புரிகிற நடைதான். புரிகிற நடை நல்ல நடையாய் இல்லாமல் இருக்க முடியாது."

நடத்தை திடுதிப்பென்று வந்து விடுவதல்ல. நாளுக்கு நாள் வளர்ந்து, பண்பட்டு உருத்தேற வேண்டும். நடையும் அப்படித் தான். முதலில், சொல்வதற்கு விஷயம் இருக்க வேண்டும். அந்த விஷயத்தைப் பற்றிய இனவிஷயங்களை யெல்லாம் கூடியவரை தெரிந்துகொண் டிருக்க வேண்டும். நமக்கு நாமே விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தெளிவாகப் புரிந்து கொண்டால், சிந்திக்கும் மனிதன் ஒரு முடிவுக்கு வராமல் இருக்க மாட்டான். வந்த முடிவில் அழுத்தமான, அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தால், அதை மற்றவர்களுக்கும் சொல்லித் தீர வேண்டும் என்ற ஆசை தடுக்க முடியாதபடி அவன் மனத்தில் எழும். இப்படிப்பட்டவன் எழுதுகிறபோதும், பேசுகிற போதும் நாம் அப்படியே லயித்து விடுகிறோம். இந்த லயிப்பு, வெறும் குரல் சஞ்சார வித்தையாலோ, வெறும் சொல்லடுக்கு ஆச்சரியக் குறி வித்தையாலோ மட்டும் உண்டாகாமல், அவன் சொன்னதை அப்படியே சொன்னது சொன்னபடி நாமும் புரிந்து கொண்டதனால் உண்டானதானால், எழுதியவன் அல்லது பேசியவன் மீது நமக்கு ஏற்படுகிற மதிப்பும், மரியாதையும் நிரந்தரமானதாய் விடுகிறது. எழுதியவனுடைய நடத்தை அழுத்தம் அவனது எழுத்து நடையில் பிரதிபலிக்கிறது. அதைப் படிக்கும் நம்மை அது தன் வசப்படுத்தி, நம்முடைய நடத்தையிலும், நடையிலும் மாறுதல் உண்டாகச் செய்கிறது.

நல்ல நடை இப்படித்தான் இருக்கும்; இப்படித்தான் பயன் தரும். பயன் தருவது அழகாயிராமல் இருக்கமுடியாது. அழகு பொருத்தமாயிருப்பது. பொருத்தம், அழகு ஆகியவை விஷயத்துக்கும், சந்தர்ப்பத்துக்கும், யாருக்காகப் பேசுகிறோமோ, எழுதுகிறோமோ அவர்களது தேவை, தகுதி முதலிய பல விஷயங்களைப் பொறுத்தும் மாறுபாடடைவது இயல்பு—தடுக்க முடியாதது.

நடையைப்பற்றிப் பலர் சொல்லியிருக்கிறார்கள். ஒரு சிலவற்றை இங்கே குறிப்பாய் எடுத்துக் காட்டலாம்;

சாமுவேல் பட்லர் சொல்வது:

தனது நடையைப் பற்றி நிரம்பக் கொஞ்ச அளவிலேனும் சிரமம் எடுத்துக்கொண்டு, அதே சமயத்தில் தடங்கலில்லாமல் படிக்கக்கூடிய முறையில் எழுதியுள்ள ஓர் எழுத்தாளனையும் இது வரை நான் அறியேன்...

ந்யூமன், ஆர். எல். ஸ்டீவன்சன் போன்றவர்கள், நடை என்று அவர்கள் கூறியதை முன்னேற்பாட்டு முயற்சியாகக் கைவரப் பண்ணிக் கொள்ளக் கடிதின் முயன்று வந்ததாகத் தெரிகிறது. தங்களது எழுத்துக்களுக்கு ஏதாவது பெருமதிப்பு ஏற்பட வேண்டுமானால், அதற்கு முன்னால் தாங்கள் கற்று அமைத்துக்கொள்ள வேண்டிய ஒன்றாக இதை அவர்கள் மதித்து வந்திருக்கிறார்கள். சகலரும் அறியச் சொல்ல விரும்புகிறேன்: எனது நடையைப் பற்றி, ஒரு போதும், மிக அற்ப முறையில்கூட, நான் சிரமம் எடுத்துக்கொண்டதில்லை. அதைப்பற்றி நினைத்ததே இல்லை. சும்மா சாதாரணமாய், எளிய முறையில், நேரடியாய் எழுதுவதில்தான் எனக்கு நம்பிக்கை. அதுதான் சரி என்று நினைக்கிறேன். இப்படிச் செய்வது ஒரு விதமான நடையா அல்லவா

என்று எனக்குத் தெரியாது; அப்படித் தெரியவும் வேண்டிய தில்லை. தனக்கும், தன் வாசகருக்கும் நஷ்டம் உண்டாக்காமல் ஒருவன் எப்படித் தனது நடையைப் பற்றிக் கவனிக்க முடியு மென்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

இன்று உயிரோ டிருக்கும் ஆங்கில எழுத்தாளர் அனைவருள்ளும் தலைசிறந்தவர் ஜார்ஜ் பெர்னார்டு ஷா என்கிறார் சி. இ. எம். ஜோட். அப்படிப்பட்ட ஷா சொல்வது:

"உண்மையான, சொந்தநடையை அப்படிப்பட்ட ஒரு நடையை உண்டாக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் ஒருபோதும் அடைய முடியாது. ...அழுத்திச் சொல்வதைச் சரியாய்ச் சொல்லுவதே நடையின் தொடக்கமும் முடிவும். அழுத்திச் சொல்வதற்கு ஒன்றும் இல்லாதவ னிடத்தில் நடை இராது —இருக்கவும்முடியாது. ஏதாவது ஒன்றை வற்புறுத்திச் சொல்ல வேண்டியவனாயிருக்கிறவன் அப்படிச் சொல்ல வேண்டிய விஷயத்தின் முக்கியத்துவம், அதில் அவனுக்குள்ள திட நம்பிக்கை ஆகியவைகளின் திட்டத்துக் கேற்பத் தனது நடையிலும், ஆற்றல் காட்டுவான். அழுத்திச் சொல்வதைச் சொல்லி முடிந்த பிறகு, அவன் சொன்னது சரியல்ல வென்று எடுத்துக்காட்டி அடித்துவிடுங்கள் — அவனுடைய நடைமட்டும் இருக்கவே இருக்கும்."

நல்ல உரை நடை எப்படியிருக்க வேண்டு மென்று டாக்டர் வின்யூடாங் சொல்லுகிறார்:

"அலங்கார நடை, கவிதை நடை, பிரசங்க ரீதியில் உள்ள சொல்லடுக்கு நடை— இவை எல்லாம் நல்ல உரை நடை யல்ல. இவற்றை நல்ல வசன நடை என்போர் விஷயம் தெரியாதவர்கள். நல்ல நடை எது? வீட்டில் சௌக்கியமாய் உட்கார்ந்திருந்து கொண்டு சரளமாய் இயல்பாய்ப் பேசுகிறோ மல்லவா? அந்த மாதிரிச் சரளமும் போக்கும் இருக்க வேண்டும். டிஃபோ, ஸ்விஃப்ட் பாஸ்வெல் போன்ற பெரிய கதாசிரியர்களின் நூல்களில் இத்தகைய உரை நடையைக் காணலாம்......... எல்லாவற்றையும் விட நல்ல நடை புரிய வேண்டும்; பேசுகிறதில் உள்ள வம்பளப்பு இருக்க வேண்டும்; எழுதுகிறவனுடைய சொந்தப் பேச்சுப் பிரதாபங்களும் சற்று இருக்க வேண்டும்."

எந்த விஷயத்தையும் யாருக்கும் விளக்கிச் சொல்லக்கூடிய அற்புதத் திறமை வாய்ந்தவரும், இன்று உயிர் வாழும் தத்துவ ஞானிகளில் தலை சிறந்தவரும் ஆன பேராசிரியர் சி. இ. எம். ஜோட் சொல்வது:

"வேறுமாதிரி சொல்வதானால், ஒருவரின் நடை அவரது உடை மாதிரி இருக்கவேண்டும். முடிந்த வரைக்கும் அடக்கமாக, கண் முன்னால் துருத்தாமலும், கூடிய வரை தன் மேல் கவனத்தை இழுக்காமலும் இருக்க வேண்டும். ... ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி ஒருவர் மனமார உணருகிறார்: இதைப் பற்றித் தாம் என்ன சொல்ல விரும்புகிறார் என்பது பற்றியும் மனத்தில் தெளிவாகத் தயார் செய்து வைத்துக்கொண்டுவிட்டார். தம் மனத்தில் தெளிவாக்கிக் கொண்டுவிட்டதைப் பற்றி மட்டும்தான்சொல்லப் போகிறார். அதற்கு மேல் அதிகமாக ஒன்றும் சொல்ல மாட்டார். இதில் கவனமாய் இருப்பார். —இந்தத் தகுதிகள் எல்லாம் இருந்தால், அப்புறம், போதிய இலக்கண அறிவும் சொல்லமைப்பு முறை அறிவும் அவருக்கிருந்தால், எழுதும் போது, அவருடைய கருத்துக்

கள் நல்ல எழுத்து என்று நாம் சொல்கிற வடிவத்தில் தாமாகவே வந்துவிழும். வெறும் மெய்யான உணர்ச்சி வேகத்தோடு மட்டும் தில்லாமல், பக்தி வெறி பிடித்த உணர்ச்சி வேகத்தோடு,உற்சாக மாய் எழுதுகிறவன் தன்னையும் அறியாமல், உயர்ந்த நடையில் எழுதக் கிளம்பிவிடுவான்.''

ஆம்! விஷயத்துக்குத் தகுந்த, உண்மையான, இதய பூர்வமான நடையே நல்ல நடை. எல்லோரும் எல்லா விஷயத்தையும் பற்றி, எப்பொழுதும் அழகாக எழுதிவிட வேண்டுமென்று ஆசைப்படுவது இயல்பு. ஆனால், இது நடக்கிற காரியமே அல்ல. வீண் ஆசையால், அகலக் கால் வைக்காமல், விஷயத்தைத் தெரிந்துகொண்டு, தெரிந்ததைப் பிறருக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு மட்டும் எழுதினல், பேசினல், நல்ல நடை மட்டுமல்ல, அழகான நடையும் (இரண்டும் ஒன்றுதானே!) கைவரவே செய்யும்.

நன்னூலும் தொல்காப்பியமும் முக்கால் வாசி இன்று வழக்கிழந்து போயின. புது இலக்கணம் — எழுதாமல் — நாளுக்கு நாள் தானுக உருவாகி வருகிறது. தமிழில், விஷய அறிவோடு, நடையும் சேர்ந்து வளர்ந்து வருகிறது. நடை விஷயம் பெரிய பிரச்னை அல்ல, சிக்கல் அல்ல. நடைக்காக நடை என்பது கலைக்காக கலை, பாஷைக்காகப் பாஷை, அழகுக்காக அழகு என்பவை போன்ற அர்த்த மற்ற சொல்லாட்டம் தான். நமக்காகத்தான் இவையும், பிறவும். இவற்றுக்காக நாம் அல்ல—என் வரைக்கும் அப்படித்தான்!

நான் எழுதுவது உங்களுக்குப் பிடிக்கலாம், பிடிக்காமல் போகலாம்; சரியென்று படலாம்; பிசகென்று படலாம். இவை முக்கிய மல்ல. நான் என்ன சொல்லுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? அழுத்தமாய்ப் புரிகிறதா? அது போதும் எனக்கு. அப்படியானல், என் நடை நல்ல நடைதான். அல்லாவிட்டால், சுகமில்லை.என் முயற்சி வீண் முயற்சியென்பது மட்டுமல்ல; தீங்கான முயற்சியுங்கூட. இந்த விஷயம் எல்லோருக்கும் — எழுதுகிறவர், படிக்கிறவர் இரு தரப்பினருக்கும்தான்!—பொது. இதில் மர்மம், ரகசியம், தொழில் நுட்பம், —இந்தச் சங்கதிகளுக்கெல்லாம் துளியும் இட மில்லை. அப்படி இருப்பதாகச் சொல்வதெல்லாம் சுத்த ஏமாற்று வேலை.

உங்களுக்கும் எனக்கும் வேண்டியது புரிகிற நடைதான். புரிகிற நடை நல்ல நடையாய் இல்லாமல் இருக்க முடியாது. நல்ல நடை எழுதுவது சுளுவல்லதான். ஆனல், பிரமாதமு மல்ல. யாருக்கு என்கிறீர்களா?— அதைப் பிறகு பார்க்கலாம்.

✱

அவனுக்கும் தேவைதான்

கலை என்பது பணக்காரர்கள் மட்டுமே அநுபவிக்க வேண்டிய போக மல்ல. ஏழைக்கும் அது தேவைதான். குடிசை நிர்மாணத்திலும், தரை அலங்காரத்திலும், களிமண் விக்ரகங்களிலும் அவன் கலையை உபயோகிக்கவே செய்கிறன்.

—டாகூர்

வாழ்க்கையில் கலையின் ஸ்தானம்

●

உதய சங்கர்

மனிதர்கள் பல பொருள்களைப் பார்க்கின்றனர்; ஊன்றிக் கவனித்துப் பொருள்களின் தன்மையை உணர்கின்றனர்; தாம் எண்ணுகின்றவற்றைப் பிறருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லுகின்றனர். மேதா விலாசம் பெற்றவர்களின் எண்ணம், செய்கை முதலியன சற்று உயர்ந்த நிலையில் அமையும். கவிஞன், இன்பம் சுரக்கும் சொற்றொடர்களினால் புனையப் பெற்ற காவியத்தின் மூலமும், சித்திரக்காரன், பல வர்ணங்களை ஒழுங்குபடச் சேர்த்து வரையும் சித்திரங்களின் உதவியாலும், பாடகன், தனது தேன் மதுர இன்னிசையின் துணைகொண்டும், நாட்டியக்காரன் எழில்மிகு தன் அங்க அசைவுகளினாலும், சிற்பி, தான் வடிக்கும் சிலைகளினாலும் சமூகத்துக்குத் தொண்டு புரிகின்றனர். தான் உணர்வதைப் பிறர் அறிய எடுத்துக் கூற விழைவது மனித இயற்கைதான். ஆனால், பிறர் அறியச் செய்வதின் குணம், அழகு முதலியன கலைஞனின் அறிவு, ஆற்றல், அநுபவம், கற்பனை, ஆழ்ந்து அறியும் தன்மை, பொருள்களின் தாரதம்மியங்களைப் பகிர்ந்துணரும் சக்தி முதலியவற்றையே பெரிதும் பொறுத்தவை. இது, மனிதன் பிறரிடமிருந்தும் பிற பொருள்களிடத்திலிருந்தும் தெரிந்து கொள்கிற அறிவின் பிரதிபலிப்பேஎனலாம்.

இந்த உலகத்தில், வாழ்க்கைச் சந்தையில் படுகிற அடி இடிகளும், பல திறப்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்து நாம் பெறுகிற அநுபவங்களும் பலப்பல. மேற்சொன்ன அநுபவங்களை நாம் கொள்கிற முறையும், அவற்றைப் பற்றி நாம் கொள்ளும் நோக்கமும், அவற்றை நம் வாழ்க்கை முறையில் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதிலும் வெவ்வேறு மாறுபாடுகள் இருக்கின்றன. சுயமாக எண்ணுவதற்குச் சக்தியுடையவர்கள் தங்களுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ, அப்படியே வியாக்கியானம் செய்துகொள்கிறார்கள். மற்றவர்கள் அவற்றைப் பின்பற்றி அம்மாதிரியே செய்கின்றனர்.

கலை அரங்குகளில், குறித்த கால இட அளவுகளுக்குள், தங்களால் இயன்ற அளவு தெளிவாகவும், பார்ப்போர் மனத்துக்கும் அறிவுக்கும் களிப்பூட்டும் முறையிலும் தங்களுடைய திறமையைக் காட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, வரையறுக்கப்பட்ட சில சாஸ்திரோக்தமான உடலசைவுகளினாலும், வேஷங்களினாலும், இயற்கையான ஆடை அணிகளினாலும் தம் திறமையைக் காட்ட முயலுகின்றனர். அவற்றுக்கு வேண்டிய கதை அமைப்பைப் பழங்காலப் புராணங்களிலிருந்தோ அல்லது தற்காலத்தில் நடக்கும் விஷயங்களைப்பற்றி எழுதப்பெறும் நவீனக் கதை

மக்களிடம் பரவி ஊறிவிட்ட சூழல்களைத் தம் அங்க அசைவு அலைகளால் கண் முன் கொண்டுவந்து நிறுத்தும் மகத்தான படைப்பு உதய சங்கரிடம் இருக்கிறது. அவர், "நான் அதைத்தான் செயலாற்றுகிறேன்" என்கிறார். இது உஷாவில் வந்ததின் சாரம்.

களிலிருந்தோ எடுத்துக்கொள்ள லாம்.

வாழ்க்கையில் நிதர்சனமாக நிகழ்கின்றவற்றை, நமது கற்பனையில் பிறக்கின்றவற்றை அழகுபட எடுத்துரைத்தல்தாம் கலையின் நோக்கம். உலகமே ஒரு நாடக அரங்கம். அப்படியிருக்க, உணர்ச்சியுள்ள மனிதன் எவனும் அதில் பங்கு கொள்ளாமல் தனித்திருத்தல் என்பது இயலாத காரியம்.

அரசியல் குழப்பங்கள், மனித வர்க்கத்தையே ஒழிக்க முற்படும் யந்திரங்கள், மத மாற்றத்திற்காக நடத்தப்படும் மிருகத்தனமான செய்கைகள், தங்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும், உயர்ந்த கருத்துக்களை நிலை நாட்டவும் நடத்தப்பெறும் உலக யுத்தங்கள், சமயச் சழக்குகள், சாதிச் சண்டைகள், உழைப்பாளி மக்களின் கீழ்த்தரமான வாழ்க்கை, இம்மாதிரிச் சமூகத்தில் எழுகின்ற எண்ணற்ற பிரச்னைகள் கலையுள்ளம் படைத்த கலைஞனின் உள்ள உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்றன. அவற்றின் காரணத்தை ஆராய்ச்சி செய்வதில் காலத்தை வீணே கழிக்கமாட்டான் கலைஞன். அதை உணர்ந்து, அவ்வுணர்ச்சியை உலகத்தார்க்கு அறியச் செய்வான். அவன் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்வதற்குக் காரணம் என்ன? அவன் ஒரு கலைஞன் என்ருலும், அவன் மனிதன் என்பதுதான். முற்காலத்தில் மனிதனை வெகுவாகக் கவர்ந்து, அவனுடைய அறிவு, உணர்ச்சி முதலியவற்றைத் தூண்டி வளர்க்கப் பெரிதும் பயன்பட்டவை நாடகம், சித்திரம், சிற்பம், இன்னிசை முதலிய நுண் கலைகள். இன்று காலம் மாறிவிட்டது. இன்று கலைச் செல்வம் என்று போற்றக் கூடியது, மனத்துக்குப் பிடித்த பொருள்கள்—அவை எவையாயிருந்தாலும் சரி.

இக் காலத்திற்கேற்ற முறையில் நாகரிகமான பொருள்களை அடிப்படையாகக் கொண்டுதான், என்னுடைய நாட்டியக் கலை திகழ்கின்றது. நாட்டிலே அரசியல் சிக்கல், உண்மையாகத் தொண்டு செய்ய முற்படுபவர் சிலருடன் ஒத்துழையாமல் அவர்களுடைய தியாக சிந்தையை இழித்துக் கூறச் செய்யப்படுகின்ற சூழ்ச்சிகள், விவசாய மக்களின் குறைகள் ஆகியவை என்னைக் கவலையில் ஆழ்த்தின. அந்தப் புண்பட்ட உள்ளத்தின் சிருஷ்டிதான் என்னுடைய வாழ்க்கையின் கீதம் என்ற நடன நாடகம். இந்தச் சமூகக் குறைபாடுகள் எங்கும் விரவி இருப்பதால் அவை தவிர்க்க முடியாதன என்று, மக்கள் தங்களை அதற்கு அடிமைப்படுத்திக்கொள்கின்றனர். இவைகளை மக்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டியது கலைஞனுகிய என் கடமை என்று அதைச் செய்ய முற்பட்டேன். தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமல் செய்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் படு ஆழத்தில் அமுக்க முயற்சி செய்யும் யந்திரங்களினுல் மக்களுக்கு எவ்வளவு தீங்கு விளைகின்றது என்று மனம் புழுங்கினேன். அந்த மனப் புழுக்கம் பாட்டாளியும் யந்திரப் பிசாசும் என்ற நாடகமாக உருக்கொண்டது.

நாம் யந்திரத்துக்கு அடிமைகளாகிவிட்டோம். மனித சமூகத்தின் சுதந்தரத்தைப் பாது

காப்பதற்காகக் கொடூரமான பல ஆயுதங்கள் கண்டுபிடிப்பதில் முனைந்து நிற்கிறான் மனிதன். யந்திரச் சாதனங்களை நமக்குச் சேவகம் புரிகிற அடிமையாகவும், நமக்கு நன்மை செய்கிற நண்பனாகவும் செய்துகொள்ளாமல், மனித சிருஷ்டிகளாகிய கலைச் செல்வங்களையும், ஆண்டவன் அருள் பெற்ற உயிர்களையும் அழிப்பதற்கு உபயோகப் படுத்துகிறோம். சமூக நலத்துக்கு யந்திரத்தை மனிதன் பயன்படுத்திக்கொள்கிறான். அதிகார மமதையினால் தூண்டப்பட்டு, நாடு பிடிக்கும் எண்ணத்தோடு தன் சகோதரர்களையும் குழந்தை குட்டிகளையும் அழிக்க யந்திரத்தின் துணையைத் தேடுபவனும் மனிதன் தான்!

நமக்கென இருந்த நிலத்தை உழுது உண்டு வாழ்ந்தோம் அன்று. அதற்காக நாம் பழங்கால நாகரிகத்தை மேற்கொள்ள வேண்டியதில்லை; இந்தக் குருட்டுத்தனமான யந்திர வழிபாட்டை விட்டொழித்தால் போதும்.

சுரண்டல் மனப்பான்மை, பொய், பித்தலாட்டம், யந்திர வழிபாடு முதலியவற்றை ஒழித்துவிட்டு, மனிதர்கள் பரஸ்பர அன்போடு வாழ்க்கை நடத்த வேண்டும். அன்றுதான் மனித ஜாதியை ஒற்றுமைப்படுத்துகிற தனையாக யந்திரம் உபயோகப் படும். யந்திரப் பிசாசினால் பாட்டாளி மக்களுக்கு இழைக்கப்படும் தீங்கு, இந்தியாவில் மட்டும் அல்ல, உலகம் முழுவதுமே பரவி இருக்கிறது. என்னுடைய நாட்டியம் இக்குறைபாடுகளையும், தொல்லைகளையும் பார்ப்போரின் மனத்தில் பதியச்செய்துவிடுவதுடன், அதைப் பற்றி ஊன்றிச் சிந்திக்கவும் செய்துவிடுகிறது.

குறுகிய நாட்டுப் பற்று என்ற நாடகத்தில் மனிதர்களின் சுயநலப் பற்றையும், அதனால் விளையும் கேடுகளையும் எடுத்துக் கூறியுள்ளேன். நாம் இந்தியர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. நாடு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை தனியரசு செலுத்த வேண்டும் என்பது சிறுபிள்ளைத் தனமான, அறிவுக்குச் சிறிதும் ஒவ்வாத கொள்கை.

நம் உடலிலுள்ள பல உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு ஒற்றுமையில்லாமல் வேலை செய்யத் தொடங்கினால் எப்படி இருக்கும்? அதைப் போன்றதே இந்த நோக்கமும். இக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ரேடியோ, டெலிவிஷன், மணிக்கு ஆயிரம் மைல்கள் செல்லும் விமானங்கள் முதலியன கணப்பொழுதில் உலகின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குப் போகவும், அங்குள்ளோர் பேசுவதைக் கேட்கவும் பயன்படுகின்றன.

காலத்தையும், தூரத்தையும் வென்ற காரணத்தால், உலகத்திலுள்ள அனைவரும் ஒற்றுமைப்பட்டு, ஒத்து வாழ அநுகூலமாய் இருக்கிறது. நாடு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் தனி அரசு செலுத்தினால், நாட்டுக்குள்ளேயே சண்டையும் சச்சரவுகளும் அதிகரிக்கும். ஒற்றுமை இல்லாமல், நாட்டின் பலம் குறைந்து போகும்.

ராம லீலா போன்ற விழாக்களைக் கொண்டாடுவதிலும் நாம் புதிய கருத்துக்களைக் காணலாம். அவற்றின் மூலம் நமது பழங்காலப் பண்பாட்டையும், அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டையும் நம் மக்கள்

லக்ஸ் டாய்லட்
சோப்பினல்
கண்ணம்பா
தினந்தோறும்
அழகுபடுத்திக்கொள்ளும்
முறை இதுவே
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின்மேல் தடவுகிறேன்...
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினல் முகத்தை துடைக்கிறேன்
கண்ணம்பாவிற்கு, அவருடைய அருமையான சருமத்தை குளுமையாகவும், அப்பழுக்கற்றதாகவும் செயது கொள்ள ஒழுங்கான பாதுகாப்பு அவசியம என்பது தெரியும். நீங்களும் உங்கள் சருமத்தை சீர்படுத்துவதில சிரத்தை யெடுத்துக் கொள்ளுகிறீர்களா? இந்த சுலபமான அழகு படுத்திக்கொள்ளும்முறையை 30 நாட்கள் கையாளுங்கள். இவ்வெண்மையான, சிறந்த சோப்பின் தாராளமாயுண்டாகும் நுரை உங்கள் சருமத்தை சுத்தமாக்கி பளபளபபையளிககும். உங்கள் சருமத்திற்கு அதறகு வேண்டிய பாதுகாப்பை யளியுங்கள். உண்மையான அழகையளிககும்லக்ஸ்டாயலட் சோபபைப் பயன படுத்துங்கள.
LTS. 152-50-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி
கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

அறியுமாறு செய்யலாம். ராம—ராவண யுத்தத்தின் மூலம் நாம் அறிவது என்ன? அநீதியை நீதி வெல்லும் என்பதுதான். நீதி நெறியோடு, நல் வாழ்க்கை நடத்தினுல் வெற்றி கிட்டும். ஆகவே, 'ராம லீலே'யை நடித்துக் காட்டுவதினுல் சமூகத்துக்கு நன்மை செய்வேன் என்ற எண்ணத்தோடு அவற்றைத் திரைக்கு அப்பால் இருந்து நிழல் காட்சியாக நடித்துக் காட்டுகிறேன்.

நாட்டியக் கலேயின் மூலம் சமூகத் தொண்டு புரிவது போலவே, மற்ற லளித கலேகளினுலும் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை புரியலாம். சமூகச் சிக்கல்களேத் தீர்ப்பதிலும், மாசுமறுக்களேப் போக்குவதிலும் மக்களின் துன்பங்களேக் களேவதிலும் எல்லாக் கலேஞர்களும் ஈடுபட்டு உழைக்கலாம். சொற்பொழிவாளர்கள் தங்களுடைய பேச்சுக்களின் மூலமும், எழுத்தாளன் தன் எழுத்தினுலும், சித்திரக்காரன் தன் சித்திரத்தினுலும் மக்கள் தங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்ளவும், அறிவு வளர்ச்சியினுல் இன்பமடையவும் செய்யலாம்.

புது உலகம்

தென் துருவத்தைக் கண்டுபிடிக்கச் செல்லும் அமெரிக்கக் கப்பல் கோஷ்டியின் தலேவர் அட்மிரல் ரிச்சர்ட் இ. பிரிட், சென்ற ஞாயிற்றுக் கிழமை யன்று விமான மூலம் தென் துருவத்தின்மீது பறந்து சென்று, இதுவரை கண்டுபிடிக்கப்படாத 75,000 சதுர மைல் விஸ்தீரண முள்ள பிரதேசத்தைக் கண்டு படம் பிடித்ததாகவும், 50 புதிய மலேகளேக் கண்டதாகவும் அந்தக் கோஷ்டியோடு செல்லும் அமெரிக்க நேஷனல் பிராட்காஸ்டிங் கம்பெனி நிருபர் அறிவிக்கிருர். அட்மிரல் பிரிட் தென் துருவத்திற்கு அப்பால் 81 மைல் வரை பறந்தார். அவருடைய இரு விமானங்களும் தென் துருவத்தைச் சுற்றி வட்டமிட்டுப் பறந்தன. தென் துருவப் பிரதேசத்தில் பனிக்கட்டி இல்லாத பிரதேசங்களுக்குச் செல்ல ஸ்ரீ பிரிட் திட்டம் போட்டுக்கொண் டிருக்கிருர். தென் துருவப் பிரதேசத்தில் உள்ள உஷ்ண நீர் ஏரிகளும் கண்டுபிடிக்கப்பட்டது, இந்தப் பிரயாணத்திலே மிக முக்கியமான அம்ச மென்று அந்த நிருபர் கூறினுர். விரைவில், விஞ்ஞானிகள் அடங்கிய விமானப்படை ஒன்று அப் பிரதேசத்திற்குச் சென்று ஆராய்ச்சியைத் தொடங்கும். உஷ்ண ஏரிப் பிரதேசம் முகாம் போடுவதற்குச் சிறந்த இடம்போல் தோன்றுவதாகக் கூறப்படுகிறது.

—தினமணி

மொழிப் பற்று

நாட்டு மொழியைப் போற்றி வளர்ப்பதுதான் ஒவ்வொரு மனிதனின் புனிதமான கடமை; சமூகத்தின் முக்கியமான வேலே. பிற மொழிகளின் கலப்பினுல் தன் மொழி அதனுடைய இனிமையை இழந்து, நலிந்து, நசித்துவிடாமல் பாதுகாப்பதே ஒவ்வொரு படித்த மனிதனுக்கும் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

—தி அமெரிக்கன் மெர்க்குரி

இருவரும்...

உன்னே எவனுவது பிரசங்கம் செய்யும்படி கேட்கும் அளவுக்கு முட்டாளாகப் போவானுனல், நீயும் பிரசங்கம் செய்யும் அளவுக்கு முட்டா ளாகிவிடு.

—ஓர் அறிஞர்

இரவல் ரத்தம்

●

"லக்ஷ்மி"

பிறரிடம் புஸ்தகம், பணம் போன்ற வஸ்துக்களை இரவல் வாங்கிக்கொள்வது போல் ரத்தத்தையும் இரவல் வாங்கிக்கொண்டு உயிர் பிழைக்கும் புதிய முறை நம் நாட்டிலும் தற்போது பிரபலமாகக் கையாளப்பட்டு வருகிறது. பலரிடமிருந்து இரத்தத்தை இரவல் வாங்கி, திரட்டிச் சேகரித்து வைத்திருக்கும் ரத்த நிதி நகர ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய முக்கிய ஸ்தாபனமாக அமைந்துள்ளது என்ருல் மிகையாகாது.

ஒருவரிடமிருந்து ரத்தமெடுத்து இன்னெருவரின் ரத்தக் குழலில் பாய்ச்சி உயிரைக் காப்பாற்றும் முறை ஆதிகாலந் தொட்டே பழக்கத்திலிருந்து வந்ததென்பது சரித்திர ஆராய்ச்சியின் பயனுகத் தெரிகின்றது. ரத்தத்தில் உயிருக்கு வேண்டிய முக்கியப் பொருள்கள் தங்கியிருக்கின்றன என்பதைவிட, ஆதி காலத்தவர்கள் ஆத்மாவே ரத்தத்தில் குடியிருப்பதாகக் கருதினர்கள். கர்ணன் தன் தேகத்தில் பாய்ந்திருந்த அம்பு ஒன்றை உருவி, அந்தக் காயத்திலிருந்து கசிந்துகொண்டிருந்த ரத்தத்தில் கண்ணனுக்குத் தன் தர்மத்தைத் தத்தம் செய்தான் என்பது கவியின் வாக்கு. ரத்தத்தை ஆத்மாவின் உறைவிடம் என்றும், காயகல்பம் செய்யும் மகத்துவம் வாய்ந்தது என்றும் எகிப்தியப் புராதன மனிதர்கள் கருதினர்கள். எகிப்திய அரசிளங் குமாரர்கள் தங்களுடைய யௌவனத்தை நிரந்தரமாக வைத்துக்கொள்ளும் நிமித்தம் ரத்த ஸ்நானம் செய்தார்களாம்! அதே போன்று ரோமானியர்களும் தங்களது வாலிபத்தைக் காக்கும் பொருட்டு, சண்டையிட்டு மடிந்துகொண்டிருக்கும் வீரர்களின் உடலிலிருந்து வழிந்தோடும் ரத்தத்தைப் போட்டியிட்டுக்கொண்டு ஓடி, வாரிப் புசிப்பது வழக்கமாம்!

முதல் முதல் இரவல் ரத்த முறை 1492-வது வருஷம் எட்டாவது போப் இன்னெஸென்டின் மீது யூத ஜாதி டாக்டர் ஒருவரால் பிரயோகிக்கப்பட்டது. அதன் பயனுக ரத்தம் கொடுத்தவனும், இரவல் வாங்கிக்கொண்ட நோயாளியும் இறந்தனர்!

அதற்குப் பின்பு, ஹிரோனிமஸ் கார்டேனிஸ், மாக்னஸ் பெஜிலியஸ் என்ற இரு நிபுணர்கள் ஒரு மனிதனின் ரத்தக் குழலிலிருந்து இன்னெருவர் குழலுக்கு ரத்தத்தைப் பாயும்படி செய்தால் என்ன நன்மை தீமைகள் ஏற்படும் என்று தீவிரமாக ஆராய்ந்தனர். ஆனல், வில்லியம் ஹார்லி என்பவர் பொதுவாகத் தேகத்தின் ரத்த ஓட்டம் எப்படி நடக்கிறது என்று தமது ஆராய்ச்சிகளின் பயனுக ஓர் அபிப்பிராயத்தை வெளியிட்டு நிரூபிக்கும் வரை, ஒரு வைத்தியருக்காவது இரவல் ரத்த முறையை அநுபவ பூர்வமாகக் கையாளத் துணிவு ஏற்படவில்லை. ஒரு மனிதனின் ரத்தத்தை எடுத்து, வேறு ஒரு மனிதனின்

இரவல் ரத்த முறை மனித வர்க்கத்துக்கு கிடைத்த ஒரு வரப்ரசாதம். எவ் வகையில் என்பதை வெளியிடுகிறது கட்டுரை.

ரத்தக் குழலில் செலுத்தினுல் என்ன கெடுதல்கள் நேருமோ என வைத்தியர்கள் தயங்கிக்கொண் டிருந்த காலத்தில் ஸர் கிரைஸ்டோபர் ரென் என்னும் வைத்தியர், பலவிதத் திரவங்களை மிருகங்களுடைய ரத்தக் குழல்களில் பாய்ச்சி, பரிசோதனை செய்து பார்த்தார், அவருடைய பரிசோதனைகளின் வெற்றியினுல் ஊக்கமடைந்த ரிச்சர்ட் லோவர் என்பவர் முதல் முதலில் இங்கிலாந்தில் 1655-ம் வருஷம் நாய்களின் மீது இரவல் ரத்த முறையைக் கையாண்டு பார்த்தார். மிகவும் பலஹீனமான தொரு நாயின் கழுத்து ரத்தக் குழலில் துவார முள்ள இறகு பேனுவைச் செருகி அதன் மறு பக்கத்தை ஆரோக்கியமானதொரு நாயின் கழுத்து ரத்தக் குழலுடன் பொருத்திவிட்டார். நல்ல நாயின் ரத்தம் பேனுக் குழலின் துவாரம் வழியே பலஹீனமான நாயின் ரத்தக் குழலில் பாய்ந்துவிட்டதும், நாய் வெகு சீக்கிரத்தில் ஆரோக்கியத்தைத் திரும்ப அடைந்துவிட்டது. தமது முறை வெற்றியானதைக் கண்டு மகிழ்ச்சியும் திருப்தியு மடைந்த அவர் மனிதர்களுக்கும் என் இம் முறையை உபயோகிக்கக் கூடாது எனச் சிந்திக்க ஆரம்பித்தார்.

இவரைப் போன்று ஆராய்ச்சியில் ஈடுபட்ட பிரான்ஸ் மன்னர் பதினுலாவது லூயியின் வைத்தியரும், உடல் தத்துவப் பேரறிஞருமான ஜென்னி டேனிஸ் என்னும் வைத்தியர் இரவல் ரத்த முறையை வேறு வழியில் கையாண்டு பார்த்தார். கன்றுக் குட்டியின் ரத்தத்தை நாய்க் குட்டியின் உடலில் செலுத்துவதில் கெடுதல் ஒன்றும் ஏற்படாததைக் கண்டு பிரமித்து, இந்த முறையை மனிதருக்கும் கையாளலாமோ என ஆராயத் தொடங்கினுர். தமது ஆராய்ச்சியின் வெற்றியை உலகத்தாருக்கு எடுத்துக் காட்டுவது போன்று, 1667-ம் வருஷம் முதல் முதலாக மிகவும் ரத்தச் சோகையுற்றிருந்த நோயாளி ஒருவனுக்கு ஆட்டுக் குட்டியின் ரத்தக்குழலிலிருந்து 9 அவுன்ஸ் ரத்தத்தை எடுத்துச் செலுத்தி அவனைச் சோகை வியாதியினின்றும் காப்பாற்றினுர்.

பாரிஸில் ஜென்னி டேனிஸ் செய்த இரவல் ரத்த முறையின் வெற்றியைக் கேட்ட இங்கிலாந்து வைத்தியர்கள், தாங்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். அதன் பயனுக ரிச்சர்ட் லோவர் எட்மண்ட கிங் என்ற இரு வைத்தியர்களும் ஆர்தர்கோகோ என்னும் 32 வயசு மாணவன் ஒருவன் மீது திறமையாக இரவல் ரத்த முறையைப் பிரயோகித்து வெற்றி பெற்றனர்.

ஜென்னி டேனிஸ் அதற்குப் பிறகு இரவல் ரத்த முறையை மிக அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்தார். ஒரு சமயம் அவரது நோயாளிகளில் ஒருவர் இரவல் ரத்தம் எடுத்துக்கொண்டதன் பயனுக உயிரை விட்டுவிடவே, இறந்தவரின் விதவை டேனிஸ் மீது வழக்குத் தொடுத்து விட்டாள்! அதிலிருந்து பாரிஸ் வைத்திய ஆராய்ச்சி சங்கத்தின் உத்திரவு இன்றி இரவல் ரத்த முறையை ஒரு வைத்தியரும் உபயோகிக்கக் கூடாது என்று ஒரு அவசரச் சட்டம் பிறந்தது. டேனிஸுக்கு ஏற்பட்ட தோல்வியைக் கண்டதும் இங்கிலாந்திலும் இரவல் ரத்த முறைக் கிருந்த

ஆதரவு திடீரென்று மறைந்து விட்டது!

பல வருஷங்கள் கழித்து மறுபடியும் கை ஆஸ்பத்திரியின் மருத்துவரான ஜேம்ஸ் பிளன்டல் என்பவர் 1818-ல் தைரியமாக இரவல் ரத்த முறையை ஆரம்பித்தார். வயிற்று நோயால் பலஹீனமடைந்திருந்த நோயாளி ஒருவனுக்குப் பலரிடமிருந்து ரத்தத்தை ஊசி மூலம் இழுத்து, 14 அவுன்ஸ் ரத்தம் சேகரித்து அதை முப்பது நிமிஷ நேரத்திற்குள் நோயாளியின் உடலில் பாய்ச்சினர். முதலில் குணமடைந்தவன் போல் தென்பட்ட நோயாளி, இரண்டு நாள் கழித்து இறந்துவிட்டான். ஆனால், ஜேம்ஸ் பிளான்டல் தமது முயற்சியைக் கைவிடாது, மேலும் மேலும் ஆராய்ந்து, பத்து நோயாளிகளுக்கு இரவல் ரத்த முறையை உபயோகித்தார். அதனால் நான்கு பேரை அவரால் காப்பாற்ற முடிந்தது. ரத்தம் கொடுப்பவனுக்கும் வாங்கிக்கொள்பவனுக்கும் இடையே உபயோகிக்கப்பட்ட ஆயுதம் சிறு வெள்ளிக் குழலே. இவரது முயற்சிக்குப் பின் மற்ற வைத்தியர்கள் ஒரு குழலிலிருந்து ரத்தம் இன்னொருவர் குழலுக்குப் பாயும்படி செய்ய நடுவே உபயோகித்த ஆயுதங்களைத் தங்களுடைய சௌகர்யத்துக்குத் தகுந்த வண்ணம் உபயோகித்துக் கொண்டனர்.

இரவல் ரத்த முறையில் வைத்தியர்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்தவை ரத்தக்கட்டிகளே. ரத்தம் உடலில் இருக்கும் போதுதான் திரவமாக இருக்கும். வெளி உஷ்ண நிலையில் சீக்கிரம் கட்டிதட்டிப் போகுமாதலால், நோயாளியின் இரத்தக் குழலுக்கும், கொடுப்பவன் ரத்தக் குழலுக்கும் தொடர்பு ஏற்படுத்த நடுவே செருகப்பட்டிருக்கும் வெள்ளிக் குழலுக்குள் ரத்தம் பாய்ந்துகொண்டிருக்காமல், கொஞ்ச நேரம் கழித்து வெளி உஷ்ண நிலையில் ரத்தம் கட்டி தட்டிப் போய்விடுவதால் ரத்தம் பாய்வது நின்றுவிடும். இந்த தொல்லையை நிவர்த்தி செய்வது எப்படி என, பலவகையில் பரிசோதனைகள் செய்தார்கள். கை ஆஸ்பத்திரியின் மருத்துவரான பிராக்ஸ்டன் ஹிகஸ் என்பவர் ஸோடியம் பாஸ்பேட் உப்பைப் பாயும் ரத்தத்துடன் கலக்கச் செய்தால் கட்டி தட்டாது என்று கண்டுபிடித்து, ஒரு நோயாளிக்கு உபயோகித்துப் பார்த்தார். கட்டி தட்டாது, திரவ ரூபத்தில் ரத்தம் நோயாளியின் உடலைப் போய்ச் சேர்ந்தது. ஆனால், ஸோடியம் பாஸ்பேட் உப்பின் விஷம் நோயாளியைக் கொன்றுவிட்டது!

இதை எப்படி நிவர்த்திப்பதென்று மிகவும் தீவிரமாக ஆராய்ந்து, முடிவில், ஸர் தாமஸ் ஸ்மித் 1873-ம் வருஷம் ரத்தத்திலிருக்கும் பைபிரின் என்னும் புரதத்தை நீக்கிவிட்டால், ரத்தத்தைத் திரவ ரூபத்தில் விஷத் தன்மையன்றி நோயாளிக்கு உபயோகிக்கக் கூடுமென்று கண்டுபிடித்தார். பத்தொன்பதாவது நூற்றாண்டு முழுவதும் இரவல் ரத்த முறை பிரசவ ஸ்திரீகளுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட்டது. பிரசவத்தால் அளவுக்கு மீறிய இரத்த மிழந்து, ஆபத்து நிலையையடைந்த பெண்களுக்கு, இரவல் ரத்தத்தை வேண்டிய அளவு உடலில் செலுத்தியும், சிலரைத் தவிரப் பெரும்பாலோர் உயிரிழந்தனர்.

அதற்குக் காரணம் என்ன என்று கண்டுபிடிக்க முடியாத வைத்தியர்கள் கலங்கிக்கொண்டிருந்தனர். சிலர் இரவல் ரத்தமெடுத்துக்கொண்டு ஆரோக்கியமடைந்து வருவதும், சிலர் ரத்தமெடுத்துக்கொண்டதும் இறந்துவிடுவதும் விளக்க முடியாத பெரும் புதிராக இருந்தது.

1901-ம் வருஷம் லாண்ட்ஸ்டெயினர், ஷாடாக் என்னும் இரு வைத்தியர்கள் இப் புதிரை விளக்கினர். ரத்தத்தில் "அங்லூட்னன்" என்னும் பொருள் இருப்பதைக் கண்டுபிடித்து, அதன்படி மனிதவர்க்கத்தின் ரத்தத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம் என்ற உண்மையை அவர்கள் வெளியிட்டார்கள். பின்புதான், இரவல் ரத்த முறையினுல் பலருடைய உயிரைக் காக்கும் பெருமையை இன்று அடைய முடிந்தது என்று சொல்லலாம்.

ரத்தம் என்னும் திரவத்தில் சிவப்பு, வெள்ளை அணுக்கள், பைபிரின் என்னும் புரதம், ஸீரம் என்னும் திரவம் முதலியவைகள் இருக்கின்றன. காயம் பட்டதும், காயத்தின் வாயில் பைபிரின் என்னும் புரதம் குருவிக்கூண்டைப் போல வாயை அடைத்துவிடுகிறது. அதன் மீது சிவப்பு அணுக் கூட்டங்கள் படிந்து அடைப்பை நன்ருக மூடிவிடுவதால், ரத்தம் கசிவது நின்று போய்விடுகிறது. இது இயற்கையின் தற்காப்பு முறை. பைபிரினுல்தான் ரத்தம் கட்டி தட்டிப்போகின்றது. சோடியம் ஸிட்டரேட் என்னும் உப்பை ரத்தத்தில் கலந்தால் ரத்தம் வெகுகாலம் கட்டிதட்டாமல் இருக்கும் என்று ஒரு வைத்தியர் கண்டுபிடித்தார். இந்த இரண்டு உண்மைகளும் இரவல் ரத்த முறையைச் சுலபப்படுத்தி ஒருவருடைய இரத்தத்திலிருந்து சிவப்பு அணுக்களைத் தனியே பிரித்து எடுத்து, அதனுடன் இன்னெருவருடைய ரத்தத்திலிருந்து ஸிரேட் என்னும் திரவத்தைக் கலந்தால் ரத்த அணுக்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்துகொண்டு, ரத்தத்தில் கட்டிகளை உண்டாக்கிவிடும் என்ற உண்மையை முதல் முதலில் லான்ஸ்டெயினர் கண்டுபிடித்தார். இது தெரியாததால்தான் பிரசவ ஸ்திரீகளுக்கு ரத்த மளித்தும் உயிரிழந்தனர் என்று அவர் நிரூபித்தார்.

அவருடைய ஆராய்ச்சியின் பயனுக உலக மனிதர்கள் சகலரையும் ஜாதி, மத, நிறவேற்றுமையின்றி ரத்தத்தைப் பொறுத்தவரை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அதாவது A, B, AB, O என்ற நான்கு வகைகளைச் சேர்ந்த ரத்தம் கொண்டவர்கள் என்பதாகும்.

இதைத் தெரிந்துகொள்வது மிகவும் சுலபம். கைவிரல் நுனியைச் சுத்தம் செய்துவிட்டு, ஒரு சிறு ஊசியால் குத்துவார்கள். ஒரு துளி ரத்தத்தை அதிலிருந்து எடுத்து ஒரு கண்ணுடிக் குழாயில் இருக்கும் உப்புத் திரவத்துடன் கலந்து குலுக்கிக்கொள்வார்கள். இப்படித் தயாரித்த ரத்தத்துடன் இரண்டு துளிச் சோடியம் ஸிட்டரேட் திரவத்தை விட்டுக் கலந்துகொள்வார்கள். ரத்த நிதிகளில் ஏற்கெனவே வகை செய்யப்பட்ட AB என்ற ஸீரம் கண்ணுடிக் குழல்களில் அடைத்து உபயோகத்திற்கு இருக்கின்றன. ஒரு வெள்ளைச் சைனு பீங்கான் கல்லின் மீது A, B என்று தனித்தனியே

சிவப்புப் பென்சிலால் எழுதிக் கொண்டு A. என்ற இடத்தில் A எழுத்திட்ட தயாரிப்பு ஸீரத்தை ஒரு துளி விடுவார்கள். அதேபோல் B என்று எழுதியிருக்கும் இடத்தில் B என்ற ஸீரத்தை ஒரு துளி விடுவார்கள். பிறகு ஒரு சிறு கம்பிக் கரண்டியால், வகை செய்ய வேண்டுமென்று தயாரித்துக் கண்ணுடிக் குழலில் வைத்திருக்கும் ரத்தத் திரவத்தை ஒரு சொட்டு எடுத்து, முறையே A, B என்ற ஸீரங்களுடன் கலக்கவிடுவார்கள். ஸீரமும் ரத்தமும் கலந்த ஐந்து நிமிஷம் கழித்து, வெளிச்சத்தில் எடுத்துப் பார்த்தால் உண்மை தெரியும். A என்னும் வகை ரத்தத்துடன் B என்னும் வகை ஸீரம் சேர்ந்தால் கட்டிதட்டிப் போகும். ஆகவே, குறிப்பிட்ட ரத்தத்தில் A-யில் கட்டிதட்டாது B-யில் கட்டி தட்டியிருந்தால் ரத்தம் A வகையைச் சேர்ந்தது. B-யில் சரியாக இருந்து A யில் கட்டிதட்டியிருந்தால், ரத்தம் B வகையைச் சேர்ந்தது. அப்படியில்லாமல் இரண்டிலும் கட்டிதட்டியிருந்தால், ரத்தம் AB என்னும் வகையைச் சேர்ந்தது. A-யிலும் B-யிலும் கட்டிதட்டாது தெளிவாக இருந்தால் ரத்தம் O என்னும் வகையைச்சேர்ந்தது என்பதாகும். இது ஒரு சிறிய கணக்கு!

இந்தக் கணக்கின்படி முறை செய்யப்பட்டதும், யாருடைய ரத்தம் யாருக்குக்கொடுக்கப்பட முடியும் என்ற உண்மை புலனுகும். சேரமுடியாத ரத்தத்தைக் கொடுத்ததால்தான் பல பிரசவ ஸ்திரீகள் மாண்டார்கள் என்பது நன்ருக விளங்கும். *

ரத்த வகை தெரிந்ததும் பல விஷயங்களுக்கும் உபயோகிக்கப்பட்டது. கொலே வழக்குகளில் ரத்தக் கறை குற்றஞ் சாட்டப்பட்டவனுடையதுதான என்று கண்டு பிடிக்க மிகவும் உபயோகப்படுகிறது. சொத்துரிமை முதலிய வழக்குகளில் குறிப்பிட்ட குழந்தை குறிப்பிட்ட பெற்ருேர்

*

எண்	ரத்த வகை	யாருக்குக் கொடுக்கலாம்?	யாரிடம் வாங்கிக் கொள்ள முடியும்?
1	AB வகைக்காரர்கள்	AB-க்கு மட்டும்	எல்லோரிடமும் வாங்கிக்கொள்ள முடியும்
2	A ,,	A-க்கும், AB வகைக்கும்	A வகைக்காரரிடமும் O ,,
3	B ,,	B-க்கு மட்டும்	B-யிடம் மட்டும்
4	O ,,	எல்லோருக்கும் கொடுக்கலாம்	O வகையாரிடம் மட்டும்தான்

களுடையதுதான் என்று நிர்ண யிக்கவும் உபயோகப்படுகிறது. †

இரவல் ரத்த முறையால் உயிர் கொடுக்க முடியும் என்றே சொல்லலாம். காயப்பட்டு அதிக ரத்த மிழந்து, ஆபத்தில் இருக்கும் பலருக்குப் பிர யோகித்து மூன்றில் இரண்டு பேர்களைக் காப்பாற்றுகிறார்கள். இரவல் ரத்த முறை இந்தக் காலத் தில் பல வியாதிகளுக்கும் உப யோகிக்கப்படுகிறது. பிரசவத் தினாலோ, காயத்தினாலோ, ஆப ரேஷனாலோ அளவுக்கு மீறி இரத்த மிழந்த நோயாளிகளுக் கும், இரத்த சோகை, விஷ ஜன்னி முதலிய வியாதிகளுக்கும் உபயோகப்படுகிறது. காய மடைந்தவுடன் ரத்தம் கட்டி தட்டி நின்றுவிடாமல், மேலே வழிந்து ஓடிக்கொண்டு, உயிருக்கே ஆபத்து விளைக்கும் ஹிமோபிலியா என்னும் பயங்கர நோயை இரவல் ரத்த முறையால் வெற்றிகரமாகச் சிகிச்சை செய்யலாம் என்று தெரிகிறது. ரத்தத்தில் பரம்பரையாக ஊறிப் போயிருக்கும் சில வியாதிகள் குழந்தைகளைத் தலைமுறை தலை முறையாகப் பாதிக்கின்றன. இவ் வியாதிகள் மஞ்சள் காமாலை, ரத்தச்சோகை முதலிய ரூபத் தில் வெளிவருகின்றன. இந்தத் தீரா வியாதிகளை இரவல் ரத்த முறையால் நிவர்த்தி செய்து, பெற் றோர்களுக்கு மகிழ்ச்சி யளிக்க முடிகிறது. பெற்றோர்களின் ரத்தத்தி லிருக்கும் விஷத்தினால் குழந்தைக்கு உண்டாகும் நோயை, இரவல் ரத்த முறையி னால் சீர்படுத்தலாம்.

முக்கிய ஆஸ்பத்திரிகளில், ரத்த நிதி இருக்கிறது. தாமாக முன்வந்து உதவுகிறவர்களிடம், சொல்பத் தொகைக்கு, நன்கு பரிசோதனை செய்த பிறகு ஊசி மூலம் 300 C. C. ரத்தத்தை இழுத்து A, B, AB, O என வகை செய்து, தகுந்த முறையில் சீசாக் களில் ஸோடியம் ஸிட்டரேட்டு டன் அடைத்து முத்திரையிட்டு, தேவைக்குத் தயாராக வைத் திருக்கிறார்கள். காயமடைந்த நோயாளியின் கை விரலிலிருந்து ஒரு சொட்டு ரத்தமெடுத்து வகை செய்து, ரத்தநிதியி லிருக்கும் குறிப்பிட்ட ரத்தத்தை அவன் உடலில் செலுத்துவது எளிதாகி விட்டது. இந்த உதவியால் அநே கர் காப்பாற்றப் படுகின்றனர்.

†

எண்	பெற்றோர்களின் ரத்த வகை		பிறக்கும் குழந்தைக்குக் கட்டாயமாக இருக்க வேண்டிய ரத்தவகை	இப்படி யிருந்தால் குழந்தையின் பெற்றோர்கள் வேறு யாரோ ?
	தாய்	தந்தை		
1	O	O	O	A, B, AB
2	O	A	O அல்லது A	B, AB
3	O	B	O அல்லது B	A, AB
4	A	A	O அல்லது A	B, AB
5	A	B	O, A. B, AB எல்லாம்	சொல்வது கஷ்டம்!
6	B	B	O அல்லது B	A, AB
7	O	AB	A அல்லது B	O, AB
8	A	AB	A, B, AB	O
9	B	AB	A, B, AB	O
10	AB	AB	A, B, AB	O

ஜான் லிவெலின் லூயி

●

'பதி'

இன்றைய அமெரிக்கச் சுரங்கத் தொழிலாளிகளின் தலைவர் ஜான் லிவெலின் லூயி. அமெரிக்கத் தொழிற்சாலைகள் அனைத்தையும், அவர் இஷ்டப்பட்டால் இன்று மூடிவிடலாம்; இம் மாதிரி இவர் சென்ற ஐந்தாண்டுகளில் எட்டு முறை செய்துள்ளார்.

தொழிற் சங்கங்களில் ஈடுபட்டு, நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும் பெருந் தொல்லையே விளைவித்தார் என்ற ஒரே காரணத்தால், லூயியினுடைய தந்தை சென்ற நூற்றாண்டில் பல தடவைகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார். நாடு கடத்தப்பட்ட இவரது தந்தை புதிய உலகமாகிய அமெரிக்க நாட்டிற்குச் சென்று குடியேறினார். இப்பொழுது அமெரிக்காவில், சிறப்பாகத் தொழிலாளர் வர்க்கத்தில், செல்வாக்கு அடைந்திருந்தாலும், பூர்வீகமாக இவர் வேல்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்தாம் என்று தெரிகிறது. இளம் வயசில் கலாசாலைப் படிப்பு இருந்ததா என்பது சந்தேகமே; ஏனெனில், இவருக்குப் பன்னிரண்டு வயசாகு முன்னரே தந்தையாருடன் சுரங்கத் தொழிலில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். இன்று லட்சக் கணக்கான தொழிலாளிகளைக் கட்டி மேய்க்கும் இவர், முதலில் செய்த வேலை என்ன தெரியுமா? கழுதைகளை ஓட்டிச் செல்வதுதான். இவர் வேலை செய்த சுரங்கத்தில் கட்டுக் கடங்காத முரட்டுக் கழுதை ஒன்று இருந்ததாம். அதன் அருகில் செல்வதற்குக்கூட எல்லோருக்கும் பயம். அத்தகைய கழுதையை அடக்கத் தைரியத்துடன் முற்பட்டவர் இவர்தாம். ஆனால், அந்தக் கழுதையை தம் வழிக்குக் கொண்டுவருகிற முயற்சியிலேயே அதைக் கொன்றுவிட்டார்!

பதினைந்து ஆண்டுகள் சுரங்கத்தில் உழைத்தது வீண் போகவில்லை. அத் துறையில் இவர் பெற்றிருக்கும் அநுபவத்துக்கு இதுவே முக்கிய காரணம். இவரைப் பழித்துக் கூறும் பலருக்கு இம்மாதிரியான அநுபவமில்லாததால்தான், இவரைத் தேர்தலில் வென்று அந்த உயர்ந்த பதவியைக் கைப்பற்ற முடியவில்லை. இவர் பல தொழிலாளர் கலகங்களிலும், தொழிற்சங்க சச்சரவுகளிலும் தடியடி, கண்ணீர்ப்புகை முதலிய அடக்குமுறை ஆயுதங்

சலியாத உழைப்பினாலேயே, மேம்பட்ட பதவிக்கு வந்திருக்கிறார், ஜான் லிவலின் லூயி. அவருடைய வாழ்க்கை விவரத்தைக் குறிக்கும் இந்தக் கட்டுரை நியூஸ் ரெவ்யூவில் வெளியானதின் சாரம்.

நீங்கள் பிரியப்படும் கறிகளுக்கு டால்டா சுவையளிக்கிறது — மேலும் உங்களுக்கு ஊக்கத்தையும் கொடுக்கிறது!





டால்டாவினால் சமையல்செய்த உணவு பாழாகாது! எளிதில் ஜீரணமாகின்றதும், விடமின் நிரம்பியதுமான டால்டா, வழக்கமாக உட்கொள்ளும் தின்பண்டங்களைக் கூட அதன் இனிய வாசனையால் ருசியுள்ளதாக்குகிறது — அதனால் உங்களுக்கு தினமும் சாப்பிடும் உணவுகளின்மேல் சலிப்பு ஏற்படுவதில்லை. டால்டாவினால் சமையல் செய்யுங்கள். இச்சுத்தமான சமையலுக்குதவும் சாதனத்தின் அறிந்த சத்தைத்தரும் திறமையைக்கொண்டு உங்கள் உணவைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா சமையலுக் குகந்த சாதாரண வஸ்து அன்று என்பது ஞாபகமிருக்கட்டும் — அது குடும்பங்களை ஆரோக்கியமுடையதாகச் செய்யும்; அவர்களுக்கு அதிகப்படியான ஊக்கத்தையும் அளிக்கும்.

★ ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. B462 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு நான்கு அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 49-50 T M THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

மிதமிஞ்சி போஷிப்பது கெடுதலை விளைவிக்கும்

இது மிகவும் மெல்லிய தன்மை வாய்ந்த, அங்க அமைப்புள்ள குழந்தைகள் விஷயத்தில் மிகவும் பொருத்தமாகும்.

அளவுக்கு மீறி உணவு அளிப்பதாலும், வேளை தப்பிய வேளையில் உணவு கொடுத்தாலும் ஈரலுக்கு அதிக வேலை உண்டாகி சொற்ப காலத்தில் ஈரல் பெருக்கம் ஏற்பட காரணம் ஆகிறது. இந் நிலைமையை அறியாமல் நீடிக்க விட்டாலும், சரியான சிகிச்சைசெய்யா விட்டாலும் அது அபாயகரமான நிலைமைக்குக் கொண்டுவிடும்.

ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்

அடிக்கடி, ஜுரம் ஏற்படுதல், மலசிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக சோர்ந்திருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

அபாயத்தை ஆரம்பத்திலேயே அகற்றுங்கள்

வியாதி குறிகள் கண்ட உடனே ஜம்மியின் லிவர் க்யூர் கொடுங்கள். அப்படிச் செய்வது உங்கள் கவலையை நீக்கி பணச்செலவைக் குறைத்து, வியாதியை முற்ற விடாமல் செய்து பின்னிட்டு ஏற்படக்கூடிய அபாயத்தை தவிர்க்கும்.

ஜம்மியின்
லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்
மைலாப்பூர்— சென்னை.

ஆஸ்தமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல, "ஆஸ்த்மா"வின் மூல காரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டைக் கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப் பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனா பஜார்.
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.



புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

களை எதிர்த்து வெற்றி கண்டதே, இவரது சலியா உழைப்புக்குச் சான்று கூறுகின்றன.

தொழிலாளிகளின் நலனைப் பாதுகாக்கவும், ஓய்வு நேரத்தை அதிகமாக்கவும், பொதுவாக, தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் ஒரு தொழிலாளர் சங்கம் தேவை என்று கண்டு, ஜான் லூயி ஒரு தொழிற் சங்கத்தை நிறுவினார்.

இவர் ஒரு பள்ளி ஆசிரியையை மணந்து கொண்டது நன்மையாக முடிந்தது. இவரது பேச்சுத் திறமைக்கும், கல்வியறிவுக்கும் காரணபூதமாக இருந்தவர் இவரது ஆசிரியை—மனைவிதான். 1908-ம் ஆண்டு அமெரிக்க தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்த சாம்வெல் கோம்பர்ஸ், லூயியின் நிர்வாகத் திறமை, தொழிலாளர்களுடன் பழகும் முறை, அவர்களிடையே நட்பைப் பெருக்கி, ஒரு சங்கத்தின் கீழ் ஒன்றுபட்டு வேலை செய்ய லூயி கையாண்ட வழி முதலியவற்றைக் கண்டு வியந்து, லூயியைத் தம்முடன் உழைக்க அழைத்துக்கொண்டார். கோம்பர்ஸின் தலைமையின்கீழ் ஜான் லூயி அரும் பாடுபட்டு, சங்கத்திற்காக வேலை செய்தார். இவர் சங்கத்தில் ஊக்கத்துடன் வேலை செய்ததால் மற்றத் தொழிலாளிகள் இவரிடம் நன்மதிப்பும் பேரன்பும் கொண்டனர். அவர்களிடம் செல்வாக்குப் பெற்ற இவர் கோம்பர்சையே தேர்தலில் தோல்வி காணச் செய்து, அமெரிக்கத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைப் பதவியை வகித்தார்.

பல ஆண்டுகள் கழித்து, 1929-ம் ஆண்டில், தொழிற் சங்க அங்கத்தினர்களின் எண்ணிக்கை மெல்ல மெல்லக் குறைந்தது. சில சுரங்கத் தொழிற்சாலைகளில் சங்கங்களே இல்லாமல் அழிந்தொழிந்தன. இந்தச் சமயத்தில்தான் ரூஸ்வெல்ட் ஜனதிபதியானுர். லூயி தான் இருந்த மிட்வெஸ்ட் என்ற இடத்தை விட்டு வாஷிங்டன் வந்துசேர்ந்தார். தொழிலாளிகள் ஒன்றுபடுவதைத் தடுக்கும் தடைகளை நீக்கி, தொழிற் சங்கங்களை ஆதரிக்கும்சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர லூயி பெரிதும் பாடுபட்டார். நாலாண்டுகளுக்குள் ஒரு தொழிற் சங்கத்தை அமைத்து, அதை மேன்மேலும் பலப்படுத்தினுர். கடைசியில் தாம் நிறுவிய சங்க அங்கத்தினர்களை 'அமெரிக்கன் ஃபெடெரேஷன் ஆஃப் லேபர்' என்ற சங்கத்தில் சேராமல் தடை செய்தார். இவருடைய தலைமையின்கீழ் இருந்த தொழிற் சங்கங்கள் ஜனதிபதித் தேர்தலில் ரூஸ்வெல்ட்டுக்காகச் சுமார் 1,25,000 பவுன் செலவழித்தன. தாம் செய்த பண உதவிக்குத் தக்க கைம்மாறு கிடைக்காமல் போகவே, ஜனதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு விரோதமாகத் திரும்பி விட்டன. இவர் 1940—44-ல் ரூஸ்வெல்ட்டைத் தேர்தலில் தோற்கடிக்க முயன்ருர். ஆனுல், அங்கேதான் தொழிலாளர்கள் இவரைக் கைவிட்டனர். பிறகு, எல்லாத் தொழிலாளர்களையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார். விவசாயிகளையும் ஒரு தொழிற் சங்க ஸ்தாபனத்தின் கீழ்க் கொண்டு வர முயன்ருர்.

இவ்வாண்டு விலைக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிய இவர் தம்மால் ஆனதைச் செய்தார். ஜன

நாயக வாதிகள் சென்ற தேர்தலில் தோல்வி யடைந்ததற்கு இவரே முக்கிய காரணம்.

தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு, தொழிலாளர் கூட்டத்தில் அதிகத் தொடர்பு கொண்டிருந்தாலும் இவர் நிறையச் சம்பாதித்து விட்டார். வாஷிங்டனில் ஓர் அழகான காரியாலயமும், நகர்ப் புறத்துக்கு வெளியில் அழகான ஒரு வீடும் வைத்திருக்கிறார்.

இவருடைய வருஷ வருமானம் 1917-ம் ஆண்டு 1,000 பவுனாக இருந்தது, இன்று 10,000 பவுனாகப் பெருகியுள்ளது. ஆடம்பர வாழ்வு வாழ்கிற இந்தத் தலைவரின் போக்கைத் தொழிலாளர்கள் பொருட்படுத்துவதில்லை. மேலும், இவரைத் தலைவராகக் கொண்டிருப்பது பெருமை என்றுகூடக் கருதுகின்றனர். முதலிலிருந்தே, பணம் சேர்ப்பதே இவருடைய நோக்கமாக இருந்திருந்தால், கோடிக் கணக்கில் பொருள் சேர்த்திருக்கலாம். வேலை நிறுத்தம் செய்யாமல், தொழிற்சாலை முதலாளிகளின் நன்னம்பிக்கையையும் பொருளுதவியையும் மிகப் பெரிய அளவில் பெற்றிருக்கலாம். ஆனால், தம்மை நம்பி வாழும் தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்ய இவர் துணியவில்லை.

5,60,000 சுரங்கத் தொழிலாளர் இவர் தலைமையின்கீழ், இவர் சொல்வதற்கு மறுமொழி சொல்லாமல் கீழ்ப்படிந்து நடக்கத் தயாராக இருக்கின்றனர்.

1917-ம் ஆண்டில் தினம் 10 மணி நேரம் வேலை செய்து பன்னிரண்டு ஷில்லிங் கூலி பெற்ற தொழிலாளி, இன்று எட்டு மணி நேரம் வேலை செய்து 2 பவுன் பெறுகிறான். இவர் தலைமை வகிக்கும் தொழிற்சங்கம் நிறையப் பொருள் பெற்று நல்ல நிலைமையில் இருக்கிறது.

சென்ற வேலை நிறுத்தத்தின் போது வேலையற்ற தொழிலாளிகளுக்குப் பண உதவி செய்வதற்காக வைத்திருந்த பணம் மட்டும் 30,00000 பவுன். லூயிக்கு விரோதமாக எந்தத் தொழிலாளியும் எதுவும் செய்ய முடியாது. ஒவ்வொரு தொழிலாளியும் லூயியிடம் பெருத்த நம்பிக்கை வைத்திருக்கிறான். தங்களுக்காக முதலாளிகளிடம் பேரம் பேசும்பொழுது தங்களுடைய நலனைப் பாதிக்கும் முறையில் ஒன்றும் செய்ய மாட்டார் என்ற ஒரே நம்பிக்கையோடுள்ளனர் அமெரிக்கத் தொழிலாளர்கள்.

புத்திசாலி நாய்

ஒரு கனவான் உயர்ந்த சாதி நாய் ஒன்றை வளர்த்து வந்தார். இரவில் கோழிக்கூட்டைக் காப்பதுதான் அதனுடைய முக்கிய வேலை. விடியற் காலையில் எஜமானர் எழுந்து வரும்பொழுது, நாய் அந்தக் கோழிக் கூட்டண்டையில் படுத்திருக்கும். நடுக்குகிற குளிரில் இரவெல்லாம் விழித்திருந்து காவல் புரிகிறதே என்று அந்த நாயிடம் வீட்டிலுள்ள அனைவரும் அன்பு செலுத்தினர்.

ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரர் அந்தக் கனவானிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, “உங்களுடைய நாய் தினந்தோறும் இரவு பத்து மணிக்கு என் வீட்டுக்கு வருகிறது; இரவு நன்றாகத் தூங்கி விட்டு அதி காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து உங்கள் வீட்டுக்கு ஓடிப்போய் விடுகிறதே, ஏன்?” என்று கேட்டார்.

—ரீடர்ஸ் டைஜெஸ்ட்

மிகக் கடுமையான எதிர்ப்பைப் போராடி வந்ததுதான் இவரது 40 வருஷ அநுபவம். தொழிற்சங்கத்துக்குள் நடக்கும் சண்டை சச்சரவுகளை இவர்களே ஹிம்சா முறையில் தீர்த்துக் கொண்டனரே ஒழிய, சட்ட திட்டங்களுக் கேற்ப நடந்து கொண்டதே கிடையாது. இவரது இயற்கையான முரட்டுச் சுபாவம்தான் ஒவ்வோர் அமெரிக்க ஜனாதிபதியையும் எதிர்த்துப் போராடத் தூண்டியது ; சுரங்க முதலாளிகளிடம் விடாப் பிடியாக நின்று, தொழிலாளர்களுக்குவேண்டியவற்றைச் சாதிக்கவும் துணையாக நின்றது.

தொழிலாளர்கள் நிறைய ஊதியம் பெற்று, சுகமாக வாழ்ந்திருக்கிறவரை இவர் முதலாளித்துவத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டார். அதனாலேயே முதலாளிகள் இவரைத் தங்கள் இனத்தையே பூண்டோடு ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்யும் தலைவராக எண்ணி அஞ்சுவதில்லை. அரசாங்கத்தார் நிர்ணயிக்கிற நிலக்கரி விலையை இவர் ஆதரிப்பார்; ஆனால், சுரங்கத் தொழிலை அரசாங்கத்தாரே ஏற்று நடத்தச் செய்யும் முயற்சிகளை எதிர்ப்பார் என்று முதலாளிகள் நம்புகிறார்கள்.

இவர் தம்மை ஒரு குடியரசுக் கட்சிக்காரன் என்று சொல்லிக்கொள்கிறார். குடியரசுக் கட்சியின் ஆட்சியில் இவர் என்ன செய்யப்போகிறார் என்பதைக் காத்திருந்து பார்ப்போம்.

*

சற்றுச் சிரமம்தான் !

தியோடர் ரூஸ்வெல்ட்டைப் பற்றி அவருடைய மகன் சொல்லியது : "என் தகப்பனார் எப்பொழுதும், எங்கும், தம்மைத்தான் எல்லாரும் கவனித்து மரியாதை செலுத்த வேண்டும் என்ற எண்ண முடையவர். அவர் ஏதாவது ஒரு கல்யாணத்துக்குச் சென்றால், அங்கே தாம்தான் மாப்பிள்ளையாக இருக்க ஆசைப்படுவார் ; எந்தச் சாவு வீட்டுக்காவது போனால், அங்கே தாம்தான் பிணமாக இருக்க வேண்டும் என்று விரும்புவார் !"

—டிட் பிட்ஸ்

குற்ற மல்ல, தப்பபிப்பிராயம்

இளம் பெண் ஒருத்தி தன் குற்றங் குறைகளைக் கிறிஸ்தவ மதத் தலைவரிடம் சொல்லி மன்னிப்புக் கோர வந்தாள். "நான் தற்பெருமையடித்துக் கொள்ளும் குற்றத்திற்கு ஆளாகியுள்ளேன் என்று நினைக்கிறேன்" என்றாள் அவள்.

"நீ அப்படி நினைப்பதற்குக் காரணம் என்ன ?" என்று கேட்டார் பாதிரி.

"நான் தினந்தோறும் காலையில் கண்ணாடியைப் பார்த்து, எவ்வளவு அழகாக இருக்கிறேன் நான் என்று உள்ளூர எண்ணுவதுண்டு" என்று பதி லளித்தாள் அந்தப் பெண்.

"நீ செய்வது குற்றமல்ல; தவறான அபிப்பிராயம்" என்றார் பாதிரியார் !

—தி விப்

அஸ்ஸாமின் கதி என்ன?

ஜே. எச். டலேயர்கான்

கோபிநாத் பர்தோலாய்க்கு ஒன்றுமே விளங்க வில்லை. அவர் வாய் திறந்து ஒன்றும் பேசாவிட்டாலும், அவர் உள்ளம் கொதித்துக்கொண் டிருக்கிறது. அஸ்ஸாமை நினைக்கும்போது தான், எங்கே அவர் பிறந்து, வளர்ந்தாரோ, எங்கே தேசபக்தி என்பது இன்னது என்பதைத் தெரிந்துகொண்டாரோ அந்த அஸ்ஸாமை நினைக்கும்போது தான் அவருடைய உள்ளம் அப்படிப் பதறுகிறது. அஸ்ஸாமின் உன்னதமான கடந்த காலத்தைப் பற்றி நன்கு அறிந்து அதிலேயே லயித்துப் போனவர் அவர்.

அஸ்ஸாமின் பிரதம மந்திரியாக ஏற்கெனவே இருமுறை இருந்திருக்கிறார் ஸ்ரீ பர்தோலாய். அதனுடைய விடுதலைப் போராட்டத்திலே சிறந்த பங்கெடுத்துக் கொண் டிருக்கிறார். சுதந்தரத்தில் அவர் கொண்டுள்ள பற்று எவ்வளவோ பெரியதாக இருந்தாலும், கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இன்றளவும் அவர் விசுவாசத் தன்மைக்கு இடம் கொடுத்து வந்திருக்கிறார். ஆனால், என்ருவது ஒருநாள் அவருடைய பொறுமை எல்லையைக் கடந்து விடுமென்றே தோன்றுகிறது. முகத்தில் தோய்ந்து காணும் சோக பாவத்தை அமுக்கிக் கொண்டு, இன்னும் நம்பிக்கை கொண் டிருப்பவராகவே காண்கிறார். தவிர்க்க முடியாத ஒரு நிலையைத் தம்முடைய ஆதிக்க சக்தியால் அடக்கி ஒடுக்க அவர் முயலுகிறார்.

"அவர்கள் அதைச் செய்ய முடியாது — முடியவே முடியாது!" என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்: "என் மக்கள் மீது அவர்கள் விரும்பாத ஓர் அரசியல் அமைப்பைத் திணிக்க அவர்களால் முடியாது" என்ருர் ஸ்ரீ பர்தோலாய்.

இதுவே பேட்டியை ஆரம்பித்து வைத்தது. இப்பொழுது தான் ஸ்ரீ பர்தோலாய் வாயை —இதயத்தையும்கூட—திறந்தார்.

"பிரிட்டனின் டிசம்பர் 6-ம் தேதி அறிக்கையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டு விட்டது—" என்று மனப் பாரத்துடன் கூறினார்.

"அது பெருந்தன்மைக்கு அடையாளம்; இதை முஸ்லிம் லீக் பாராட்ட வேண்டும்" என்றேன் நான்.

ஸ்ரீ பர்தோலாய் பொறுமை யிழந்து கூறினார்: "அது வேறு விஷயம்; பெரிய விஷயமும் கூட. ஆனல் அஸ்ஸாமின் கதி என்ன? அஸ்ஸாமுக்கு என்ன நேருமென்று உங்களுக்குத் தெரியுமா?"

என் மனத்தில் ஓர் எண்ணம் இருந்தது. அதைச் சொல்லாமல், நான் "என்ன?" என்று கேட்டேன்.

பிரிட்டிஷ் சர்க்காரின் தொகுதிப் பிரிவினை ஏற்பாட்டால் அஸ்ஸாமுக்கு நேரும் தர்ம சங்கடமான நிலைமை நமக்குத் தெரிந்த விஷயம். அஸ்ஸாம் பிரதமர் ஸ்ரீகோபிநாத் பர்தோலாய் அதைப்பற்றி என்ன எண்ணுகிருர் என்பது, கட்டுரையாளரின் பேட்டி மூலம் தெரிய வருகிறது. ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் வெளியான விவரத்தின் சாரம்.

எவ்வளவு தூரம் சொல்வது, எதைச் சொல்லக் கூடாது என்று திகைத்துத் தயங்கினர். விசுவாச குணமே அப்போதும் அவருடைய உணர்ச்சியை வென்றது. கடைசியில், மெதுவாக "அது எங்களுக்குச் சாவைத் தான் குறிக்கும்'' என்ருர். நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன். 'டிசம்பர் 6-ம் தேதி அறிக்கையை ஒப்புக்கொள்வதென்ருல் தொகுதிப் பிரிவினை என்றுதான் அர்த்தம்' என்று சற்றுச் சிரமத்துடன் எனக்கு விளங்கவைத்தார் பிரதமர். எனக்குப் புரிந்தது—அஸ்ஸாமின் சுதந்தரத்துக்கு இது வெடி வைக்கிறது. ஆனல், அஸ்ஸாம் பிரதமர் என்ன சொல்லப் போகிருர் என்று எதிர்பார்த்துத் தயங்கினேன். "தொகுதிப் பிரிவினை என்பதற்கு அர்த்தம், பெரும்பான்மையினரால் நசுக்கப்படுவது என்பதே. அதாவது மனிதனின் அடிப்படையான உரிமைகளையே பறிப்பதுதான்'' என்ருர்.

"அப்போது, டிசம்பர் 6-ம் தேதி அறிக்கையை ஏற்றுக் கொள்ளும்போது காங்கிரஸ் உங்கள் உணர்ச்சியை மதித்துப் பாராட்டவில்லை என்று நினைக்கிறீர்கள்?'' என்று நான் கேட்டேன்.

"அப்படித்தான் இருக்க வேண்டும். ஏனெனில், காங்கிரஸ் தன் கொள்கைகளையே—கலாசார, பாஷா வாரிப்படி தொகுதி பிரிப்பதும், மாகாணச் சுதந்தரமும் ஆகிய கொள்கைகளையே—தியாகம் செய்துவிட்டதாக அல்லவோ தோன்றுகிறது?'' என்ருர் பிரதமர்.

"ஆனல் உங்களுக்கும் ஒரு வழியைக் காங்கிரஸ் ஏற்படுத்தியிருக்கிறதே!'' என்றேன் நான். "அதாவது அதனுடைய கடைசிப் பாராவை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் போலும்!'' என்று என்னுடன் சேர்ந்துகொண்டார் பிரதமர். அந்தக் கடைசிப் பாராவில், ஒரு மாகாணம் விரும்பாத ஓர் அரசியலமைப்பு அதன் மீது திணிக்கப்படாது என்று கூறப்பட்டிருந்தது. "அந்த ஒரு நம்பிக்கைதான் எனக்கு இருக்கிறது'' என்ருர் ஸ்ரீ பர்தோலாய்.

"பின் என்ன கவலை?'' என்று கேட்டேன் நான்.

"என்ன கவலையா? அந்தத் தீர்மானம் தொகுதிப் பிரிவினையை ஆதரிக்கிறதே? அதன்படி தொகுதி வட்டத்துக்குள் புகுந்துவிட்டோமானல், தொகுதிப் பிரிவினைக்குள்ளும் சிக்கிக்கொண்டேயாகவேண்டும். முஸ்லிம் லீக்கின் தயவில் வாழ வேண்டும்.''

"பின், கடைசிப் பாராவுக்கு என்ன மதிப்பு இருக்கிறது?'' என்று கேட்டேன்.

ஸ்ரீ பர்தோலாய் தம் பெரிய தோள்களை ஒரு குலுக்குக் குலுக்கிக்கொண்டே, "இது ரொம்பக் குழப்பமாகத்தான் இருக்கிறது. என்ருலும், அவர்களுடைய வார்த்தைப்படியே நான் நடப்பேன். அவசியமானல், ஓர் அணுக்கூடப் பிசகாமல் அவர்கள் சொற்படியே நடப்பேன்'' என்ருர்.

"எது எப்படியிருந்தாலும் உங்களுக்கு வெளியே போவதற்கு உரிமை இருக்கிறது'' என்றேன்.

"அப்படித்தான் சொல்லிக் கொள்கிருர்கள்'' என்ருர் ஸ்ரீ

பர்தோலாய். அவர் குரலில் நம்பிக்கை யின்மை தொனித்தது. "தேர்தல்கள் எல்லாம் நடந்து முடிந்த பிறகுதான் வெளியே போவது என்பதெல்லாம்'' என்ருர்.

"இருக்கட்டுமே, அதனுல் நீங்கள் வெளியே நிற்பது பாதிக்கப் படாதே!'' என்று நான் கேட்டேன்.

"சொல்கிறேன்; அஸ்ஸாமை ஒரு சிறுபான்மை இனமாகக் கொண்ட தொகுதிப் பிரிவினைப் படி அமைக்கப்பட்ட, புதிய நிர்ணயப்படி அல்லவோ தேர்தல்கள் நடக்கும்?'' என்ருர் பிரதமர். (வங்காளத்தின் 60 வோட்டுக்களில், லீக்குக்கு 38; காங்கிரசுக்கு 22 தான். அஸ்ஸாமிலோ, காங்கிரசுக்கு ஏழே வோட்டுக்கள்தாம் — லீக்குக்கு இஷ்டப்படி சட்டம் செய்யத் தாராளமான உரிமை இருக்கிறது).

"ஆனல், நீங்கள் அந்த அரசியல் அமைப்பை ஒப்புக்கொள்ள வேண்டாமே?'' என்று நான் கேட்டதற்கு, "தொகுதிப் பிரிவினையை ஒருமுறை ஒப்புக்கொண்டுவிட்டோம் என்ருல், லீக்குக்குப் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டதாகவே அர்த்தம். அப்படி நிர்ணயிக்கப்படுகிற அரசியலில் நாங்களும் ஒரு சிறிய இனமாக அடங்கிப் போய்விடுகிருேம். இந்த அரசியலமைப்பு, ஒரு சிறுபான்மை மாகாணம், வெளியே நிற்க இயலுவது மிகக் கடினமாக இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது'' என்று பதிலளித்தார்.

"முஸ்லிம்கள் உங்களுடைய சௌகரியத்தையும் அனுசரித்தே திட்டம் வகுப்பார்களென்று நீங்கள் ஏன் எண்ணக்கூடாது?'' என்று கேட்டேன். தொகுதிப் பிரிவினையின் கொடிய விளைவுகளைப்பற்றித் தம் அபிப்பிராயத்தைச் சொல்ல வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி யடைந்தார் போலும்! "முதலில், நான் முஸ்லிம்களை என் சகோதரர்களாகவே கருதுகிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனல், அவர்கள் என்னை அப்படிக் கருத வில்லை. என் அநுபவமே இதற்குச் சான்று'' என்ருர்.

"என்ன அநுபவம்?''

ஸ்ரீ பர்தோலாய் ஆரம்பித்தார்: "ஒரே ஒரு சம்பவத்தைக் குறிப்பது போதும். ஜனத் தொகையைப்பற்றிய விஷயம். **1931**-ம் வருஷ ஜனசங்கியைப்படி ஹிந்துக்கள் 56 லட்சம் இருந்தார்கள். இப்பொழுது எவ்வளவு இருக்கிருர்கள், தெரியுமா?''

"சில லட்சங்கள் கூட இருக்கும்'' என்றேன் நான். வருஷம் செல்லச் செல்ல ஜனத்தொகை பெருகும் என்னும் சாதாரண நியதிப்படி நான் கணக்கிட்டுச் சொன்னேன்.

ஸ்ரீ பர்தோலாய் புன்சிரிப்புச் சிரித்தார்: "அப்படித்தான் எல்லாரும் நினைப்பார்கள்'' என்று கூறிவிட்டு, சற்று உரத்த குரலில், "வாஸ்தவத்தில் இன்று 32 லட்சம் ஹிந்துக்களே இருக்கிருர்கள். நீங்கள் இதை நம்புகிறீர்களா?'' என்ருர். எனக்கு ஒரே திகைப்பா யிருந்தது. ஆனல், இது உண்மை. பிரதமர் தொடர்ந்து கூறினர்: "தலைமுறை தலைமுறைகளாக ஹிந்துக்களாக இருந்துவரும் ஆதிவாசிகளை இவர்கள் ஹிந்துக்களாகச் சேர்த்துக்கொள்ளக்

கூடாதென்று பல வருஷங்களாகச் சொல்லி வந்தார்கள். அத்துடன் கொஞ்சம் கொஞ்சமாக, நூற்றுக்கணக்கான ஆதிவாசிக் குடும்பங்களை, அஸ்ஸாமின் மொத்த ஹிந்து ஜனத்தொகையிலிருந்து பிரித்துவிட்டிருக்கிறார்கள். இது முஸ்லிம்களுக்கு நன்மை விளைவித்தது. இது, வெறும் பிரசாரத்தின் மூலமே தேர்தல் பகுதிகளைப் பெரும் அளவுக்குப் பிரித்தது. இவர்களுக்கே அரசியல் அமைக்கும் அதிகாரம் கிடைத்துவிட்டால், எங்கள் கதி என்னவாகும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். டிசம்பர் 6-ம்தேதி அறிக்கையை ஒப்புக்கொண்டதனால், எங்களுக்கு என்ன கஷ்டம் விளைந்திருக்கிறது என்பது இப்போது உங்களுக்குப் புரிகிறதல்லவா? அதனால்தான் அதற்கு எதிர்ப்பும் அஸ்ஸாமில் இவ்வளவு பலமாக இருக்கிறது."

ஸ்ரீ பர்தோலாயின் உள்ளம் அப்படியே உடைந்துவிடும்போலிருந்தது. ஆனால், நான் விடவில்லை. "நீங்கள் ஹிந்து அஸ்ஸாமைப் பற்றித்தான் சிந்திக்கிறீர்கள் போல் காண்கிறது. 35 லட்சம் முஸ்லிம்களும் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!" என்றேன்.

அஸ்ஸாம் பிரதமர் உடனே, "முஸ்லிம்களைத் தயவு தாட்சணியத்துடனும், அதிகப் பச்சாதாபத்துடனும் நடத்துவது குற்றமானால், நான் குற்றவாளியாகிறேன்!" என்றார். "இங்கிருக்கிற முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் தங்களுடைய நலனோ உரிமையோ பாதிக்கப்பட்டதாக ஒரு வார்த்தைகூடச் சொன்னது கிடையாது. நிரம்பப் பேர் தொகுதிப் பிரிவினையை எதிர்க்கிறார்கள். ஆனால், வெளிப்படையாகச் சொல்லத் துணியவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"ஏன், தொகுதிப் பிரிவினை அவர்களுக்குச் சாதகமாக இருக்கும்போது, ஏன் அவர்கள் அதை எதிர்க்கவேண்டும்?"

"ஏனெனில், வங்காளம் ஒரு பற்றுக்குறை மாகாணம். தொகுதிப் பிரிவினை மூலம் அதுவே நலன் பெறும். லீக்கின் நோக்கம் வெளிப்படை—அஸ்ஸாமின் செலவில் வங்காளத்துக்குச் சாப்பாடு போடுவது என்பது" என்றார்.

"ஆனால், அஸ்ஸாம்தான் ஓர் உபரி மாகாணம் ஆயிற்றே?" என்று கேட்டேன்.

ஸ்ரீ பர்தோலாய் பரிதாபகரமாகச் சிரித்தார். பிறகு, "தயவு செய்து என்னை நம்புங்கள்: நீங்கள் சொல்கிற காலம் மலையேறிவிட்டது. அரைவயிற்றுக் கஞ்சியைக் குடித்துவிட்டு, ஒரு முழத் துண்டோடு நின்றால் போதுமென்ற நிலைமை ஏற்படும்போலிருக்கிறது!" என்றார். இதைத் தொடர்ந்து அஸ்ஸாமின் வருமானங்களைப் பற்றிய பிரச்னையும் எழுந்தது. "மத்திய சர்க்காரிடமிருந்து 30 லட்சம் ரூபாய்தான் கிடைக்கிறது" என்றார்.

"ஏன், இது போதாதா?" என்று கேட்டேன்.

"போதாதா என்று கேட்கிறீர்கள்? ஏன், எங்களுக்கு என்ன, சர்வ கலாசாலைகள், உயர்தர நீதி மன்றங்கள், 'எஞ்சினீரிங்' கல்லூரிகள் ஒன்றுமே கிடையாதா? மாகாணத்தை மிகச் சுபிட்சமாகச் செய்வதற்கு இயற்கைச் சாதனங்கள் எத்தனையோ பெற்றிருக்கும்போது, தொழில்வளம் மிகுந்து இருக்க வேண்டாமா?"

"நீங்கள் வருமானத்தை இன்னும் அதிகப்படுத்த முயல வேண்டும்" என்று நான் யோசனை சொன்னேன்.

"நாங்கள் உற்பத்தியைப் பெருக்குவதைப் பற்றிக் கேள்வியே கிடையாது. எங்களுக்கு இருப்பதை உபயோகித்துக் கொள்ளவிட்டாலே போதுமே! இப்போது உள்ளவற்றைத் தவிரப் பாக்கி எல்லாம் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. இருப்பதையேனும் விட்டு வைத்தால், நாங்கள் மேற்கொண்டு கேட்கவே மாட்டோம். நாங்கள் நசுக்கப்பட்டுவிட்டோம்; எங்கள் வாழ்க்கையே நசுங்கிவிட்டது."

உணர்ச்சியுடன் வார்த்தைகளைக் கொட்டினார் பிரதமர். மேலும் தீவிரமாக அவர் தொடர்ந்தார்: "எங்கள் விஷயத்தை நாங்களே கவனித்துக் கொள்ளுமாறு விடப்பட்டோமானல், அரசியலிலும், பொருளாதாரத்திலும் சுதந்தரத்துடனும், சுபிட்சத்துடனும் இருக்க முடியும். தலைமுறை தலைமுறையாக அஸ்ஸாமியர்கள் சுதந்தர புருஷர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சரித்திரம் வீரமும், நாகரிகமும் நிறைந்தது. எத்தனையோ நூற்றாண்டுகளாக இங்கே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாக வாழ்ந்து, அஸ்ஸாமின் விடுதலைக்காக ஒன்றாகப் போரிட்டு வந்திருக்கிறார்கள்". ஸ்ரீ பர்தோலாய் அஸ்ஸாமின் சரித்திரத்தையே மேலெழுந்தவாரியாகக் கூறினார். அதனுடைய மகத்தான சரித்திரத்தைப் பற்றி அவர் பெருமிதம் அடைந்தார்.

ஸ்ரீ பர்தோலாய் அஸ்ஸாமை ஒரு மாகாணமாகவே கருதவில்லை. தனி உரிமைகள் படைத்த ஒரு தனிச் சமுதாயமாகக் கருதுகிறார் என்று எனக்குப் பட்டது. "முஸ்லிம்களை அவர்களுடைய இரு சமுதாயக் கொள்கைக்காக நீங்கள் கண்டிருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் மட்டும் ஒரு தனி அரசு வேண்டுமென விரும்புகிறவர் போல் பேசுகிறீர்களே?" என்றேன் நான்.

ஸ்ரீ பர்தோலாய் குறுக்கிட்டு என்னைத் திருத்தினார்: "ஆம், நான் எனக்குச் சொந்தமான ஒரு மாகாணத்தை வேண்டவே செய்கிறேன். ஆனால், என் சமுதாயம் மட்டும், இந்தியச் சமுதாயம்தான். மத்திய யூனியனில் சேர நான் தயார். ஆனால், என் மாகாணத்துக்குப் பூரண சுதந்தரம் இருக்கும்; உலகத்தின் எந்தச் சக்தியாலும் எனக்குப் பேராசையும், சுய நலமும் பிடித்த எண்ணத்தைப் போதிக்க முடியாது". மிக மிகத் தீர்மானமாக இதைக் கூறினார் பிரதமர்.

விடை பெற்றுக்கொள்ள எழுந்த போது, அ. இ. கா. கமிட்டியின் எந்தத் தீர்மானமும் பிரதமர் ஸ்ரீ பர்தோலாயின் இந்தத் 'தீர்மான'த்தை மாற்ற முடியாது என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. ஏனெனில், அவருடைய அவ்வளவு மென்மையான அந்தரங்க சுத்தியின் அடிவாரத்தில், சிம்ம நெஞ்சு படைத்த மனிதனின் சக்தியை நான் உணர்ந்தேன். வனராஜனின் வணங்கா முடியையும் நான் காண முடிந்தது.

ஆம், ஸ்ரீ பர்தோலாயும் ராஜா தான், அவருடைய காட்டுக்கு —அஸ்ஸாமுக்கு.

மாலை வேளையின் மங்கலான வெளிச்சத்தில் காற்றிலசையுகின்ற அழகான இந்திய ரோஜா மலர்களைப் பார்த்ததும், உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பான வினோலியா ஒயிட்ரோஸின் ஞாபகமேற்படும். உங்கள் எழிலை அதிகப்படுத்த இந்த சுகந்த சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத்தரும் வினோலியா மிக நேர்த்தியான சருமத்தையும் சுகமாக சுத்தம் செய்கிறது . . . மேலும், உங்களை சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச்செய்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 20-111 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

ELA
எலா
சிகரெட்டுகள்
CIGARETTES
ELA
10
Cigarettes
10 CIGARET
இந்தியாவிற்கு
சொந்தமானது
உங்களுக்கும் சொந்தமே
GOLDEN TOBACCO CO.
GREENS' ADVTG
(GT 102)

குங்குமப் பொட்டு

தமிழ்வாணன்

"சிவகாமு!"

"ஏன், இதோ வந்துவிட்டேன்". குரல் உள்ளே இருந்து கேட்டது. இரண்டொரு விநாடியில், உள்ளே என்னமோ செய்துகொண்டிருந்த அவள் ஓடோடி என் முன் வந்து நின்றாள்.

"என்னைக் கூப்பிட்டீர்களா, என்ன?"

அவள் முகம் மலர்ந்திருந்தது.

"ஆமாம். உள்ளே என்ன வேலை...அப்படித் தலைபோகிற வேலை? ... ஹூம், அந்தச் சட்டையை எடு..."

அவள்முகம் சுருங்கி மங்கியது.

அன்றைக்குத் தலையை நன்றாக வாரி ஒரு கட்டுக் கனகாம்பரத்தைத் தலையில் செருகி இருந்தாள். நெற்றியில் வட்டமாக, அழகாக இருந்த குங்குமப் பொட்டு அவள் கறுப்பைப் பளிச்சிட வைத்தது. ஒரு பக்கத்து நொண்டிக்கால் தெரியாமல் சேலையின் கீழ்த்தலைப்பை நன்றாகத் தரையோடு தொங்கவிட்டிருந்தாள்.

ஸ்டாண்டில் மாட்டியிருந்த என் சட்டையை எடுத்து வந்தாள். அவள் நடந்து வரும்பொழுது — அவள் நொண்டி நொண்டி நடந்து வரும்பொழுது —என்னை யாரோ பின்பக்கம் இருந்து ஓங்கிச் சம்மட்டியால் அடிப்பதுபோல் இருந்தது.

"உனக்கு எத்தனை தரம் சொல்வது?"

என் கண்டத்வனி சற்றுப் பலமாக இருந்தது. ஏனோ இது?

"எதைச் சொல்கிறீர்கள்."

அவள் முகத்தில் பயத்தின் ரேகைகள் நெளிந்தன. இது வழக்கம்.

"எதையா? நெற்றிக்குக் குங்குமப் பொட்டு இட்டுக்கொள்ளாதே என்றுதான்."

அவள் தலையைக் குனிந்துகொண்டாள்.

"நீ இருக்கிற அழகை அது விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறது. யாராவது லட்சணமாக இருக்கிறவர்கள் அணிந்துகொள்ள வேண்டியது குங்குமப் பொட்டு. தெரிகிறதா?"

"சரி"

அவள் உதடுகள் மெல்ல விரிந்து மூடிக்கொண்டன.

பையத்தனது வலது கையால் பொட்டை அழித்தாள். பொட்டுக் கொஞ்சம் போல நெற்றியில் இழுத்துக்கொண்டு நின்றது. அது யாரோ—பத்திர காளி ஆவேசம் நீங்கிச் சாந்தமடைந்தபின் இருக்கும் நிலைபோல் இருந்தது—

எனக்கு என்னமோ போல் இருந்தது. திடீரென்று ஒரு பலஹீனம்—யாரோ திடீரென்று தெரியாமல் ஓங்கி நெஞ்சில் அறைந்தது போல் இருந்தது. என்னால் அந்த நிலையைத் தாங்கவே முடியவில்லை.

சட்டையை மாட்டிக்கொண்டு வெளியே புறப்பட ஒரு காலை எடுத்து வைத்தேன்.

"இன்றைக்கு நானும் வருகிறேனே."

அவள் கறுப்பு; நொண்டி; அழகுக்கும் அவளுக்கும் சம்பந்தமே இல்லை. ஆனால், உள்ளத்தை வாரும் குணம் இருந்தது. அது அவன் உயிரைக் குடிக்கிறது.

அச்சத்தோடு மெதுவாக வெளி வந்தன வார்த்தைகள். எனக்குச் சரியாகக் கேட்கவில்லை.

திரும்பிப் பார்த்தேன். மங்கிய வெளிச்சத்தில் ஒரு கையால் கதவைப் பிடித்துக்கொண்டு அசையாமல்—கண் கொட்டாமல்—என்னையே பார்த்துக்கொண் டிருந்தாள். அவள் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. முகம் சாம்பல்போல் வெளுத்திருந்தது.

"எங்கே?"

"கடற்கரைக்கு..."

விழுங்கிக்கொண்டே சொன்னாள்.

"போதும், நீ என்னுடன் கடற்கரைக்கு வந்து பாழாய்ப் போவது. நீ இருக்கிற அழகிற்கு உன்னை நிச்சயம் கடற்கரைக்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டியதுதான்...நொண்டி... நொண்டிக் கொண்டு வருவாய்... உன்னை முதலில் மனைவி என்று கல்யாணம் செய்துகொண்டேனே... சரி... சரி... கதவைச் சாத்திக்கொள்."

அவள் கண்களில் நீர் தேங்கியது. நான் மறுபடியும் நடக்கக் காலை எடுத்து வைத்தேன். பொருமும் சத்தம் கேட்டது.

"உன்னிடம் எத்தனை தடவை சொல்வது, போகும்போது அழுது தொலைக்காதே என்று.."

"இல்லை..."

மெல்லக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

மறுபடியும் நடக்கத் திரும்பினேன். மறுபடியும் குரல் கேட்டது.

"நீங்கள் வருவதற்கு நேரமாகுமே; எனக்கு அவ்வளவு நேரம் தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது"

"அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்?"

"சீக்கிரமாக..."

"உன் அழகைப் பார்த்து எவனும் தூக்கிக்கொண்டு போய் விடமாட்டான், பயப்படாதே. கொஞ்சம் தைரியமாகவே இரு! என்ன?"

இந்த வார்த்தைகள் எப்படியோ என்னையும் அறியாமல் வெளிவந்துவிட்டன!

"சரி".

"நான் சீக்கிரமாகவே வந்து விடுகிறேன்".

"சரி".

"சற்று நேரமாகுமானாலும் தூங்கித் தொலைத்துவிடாதே; விழித்துக்கொண்டுதானே இரு".

"சரி".

மறுபடியும் நடப்பதற்குத் திரும்பினேன்.

"நேற்று யாரோ வந்திருந்தார்கள்".

"எப்பொழுது?"

"நீங்கள் ஆபீஸுக்குப் போயிருக்கும்போது".

"யார் என்று கேட்டாயா?"

"யாரோ மணியாம்; உங்களைப் பார்ப்பதற்காக வந்தாராம்".

"உன்னைத்தான் யார் வந்தாலும் கதவைத்திறக்காதே என்று சொல்லியிருந்தேனே? ஏன் கதவைத் திறந்தாய்?"

"விடாமல் தட்டிக்கொண்டே இருந்தார். அதனால்தான்......"

"சரி, எதற்கு வந்தானாம்?"

"நான் அதைக் கேட்கவில்லை".

"அது சரி, நீ என் மனைவி என்று அவனிடம் சொல்லி விட்டாயா, என்ன?"

"இல்லை..."

"அப்பாடா..."

அவளால் அழுகையைத் தாங்க முடியவில்லை. தாபம் தாங்க மாட்டாமல் விம்மினாள்.

"மறுபடியும் இதென்ன அழுகை...சனியன்...சாகும் மட்டும் அழுகைதான் போல் இருக்கிறது உன்னோடு. சரி, கதவைச் சாத்திக்கொள்..."

பையக் கதவைச் சாத்திக் கொண்டாள்.

நான் வீதியைத் தாண்டிச் செல்லும் பொழுது விம்மிப் பொருமும் சத்தம் கேட்டது.

வீதியில் நடக்க ஆரம்பித்தேன்.

இன்னும் சரியாக இருட்டவில்லை. மங்கிய வெளிச்சம் பையப் பைய உள்ளடங்கிக் கொண்டிருந்தது. ஒளியை மறைத்துக்கொண்டே வந்தது இருட்டு.

இதைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது. மெதுவாகச் சிரித்துக்கொண்டேன். சிவகாமுவும் இப்படித்தான் இந்த இருட்டைப்போல் கறுப்பாக இருந்தாள். ஒரே கறுப்பு. தொட்டால் ஒட்டிக்கொள்ளும் அவ்வளவு கறுப்பு. கறுமையில் ஒளி ஐக்கியமாகிக்கொண்டிருந்தது. அது யாரோ கறுப்பாக இருப்பவர்கள் லேசாகச் சிரிப்பதுபோல் இருந்தது. சிவகாமு சிரித்தாலும் இப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அவள் சிரித்து நான் பார்த்ததே இல்லை!

ஜனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். வீதி விளக்கெல்லாம் பளிச்சென்று எரிந்துகொண்டிருந்தன-வரிசையாக.

கடற்கரைக்குச் சென்று ஓரிடத்தில் துண்டை விரித்துப் படுத்துக்கொண்டேன்.

குளிர் அதிகமாக இருந்தது. கார்கள் ரஸ்தாவில் சிட்டாய்ப் பறந்துகொண்டிருந்தன. வானத்தின் விளிம்பில் கப்பலொன்று ஊர்ந்தது; கப்பலுக்குள் இருந்த விளக்குகள் மின்னாத நட்சத்திரம் போல் நிலைபெற்று ஒளிர்ந்தன.

கண்களைச் சுற்றித் திருப்பினேன்.

சற்றுத் தூரத்தில்...

ஓடிவரும் அலைகளில் காலை நனைத்துக்கொண்டிருந்தாள் ஒரு பெண். சேலை தண்ணீரில் நனைந்துவிடாமல் இருக்கத் தன் வலது கையால் சேலையைச் சற்று லேசாகத் தூக்கிப் பிடித்திருந்தாள். அவளுடைய சடை புரண்டு அவள் மார்பில் கிடந்தது. அவளுக்குப் பின்னால் கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தான் அவள் கணவன். அவன் தன் நீண்ட கால் சட்டையை முழங்கால்வரை சுருட்டிவிட்டிருந்தான். அவன் அவளோடு விளையாடிக் களைத்து உட்கார்ந்திருந்தான்.

தண்ணீர் வந்து தன் கால்களில் மோதும்போதெல்லாம் மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்தாள். திடீரென்று ஒரு பெரிய அலை வந்து அவள் சேலை முழுமையையும் நனைத்துவிட்டது.

கரையில் உட்கார்ந்திருந்த கணவன் கை கொட்டிச் சிரித்தான். அவளும் சிரித்துக்கொண்டே, சேலையை நன்றாகப் பிழிந்து விட்டுக்கொண்டு கரைக்கு வந்தாள். அவன் எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று குனிந்து ஒரு கையால்

மண்ணை அள்ளி அவன் தலையின் மீது வீசினுள். இவள் மண்ணை வீசும்போது 'சடக்'கென அவன் திரும்பவே, மண் அவன் தலையிலும், கண்ணிலும் பட்டு விட்டது. அவன் அப்படியே அந்த இடத்திலேயே கண்ணைக் கசக்கிக்கொண்டு உட்கார்ந்து விட்டான்.

"ஐய்யய்யோ..." என்று பதறிக்கொண்டு ஓடிப் போய், அவன் எதிரில் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு அவன் கண்களை ஊதினுள். அவன் தன் கண்களை மெல்ல விழித்து விழித்து மூடினுன். அவள் கவலை நீங்கிக் கலகல வெனச் சிரித்தாள்.

பிறகு அவன் தலையில் சற்றும் மண் இல்லாதவாறு, ஊதி ஊதித் தட்டி விட்டாள். அவன் கிராப்புக் கலைந்து மயிர்களெல்லாம் குத்திட்டு நின்றன. அசல் பேய் மாதிரிக் காட்சி அளித்தான். அதைப் பார்த்து அவள் மறுபடி விழுந்து விழுந்து சிரித்தாள். அவனும் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

பிறகு என்னென்னமோ பேசினுர்கள்......

அவள் நல்ல பொன் நிறம். நல்ல அழகு. நெற்றியில் வட்டமான குங்குமப் பொட்டு இருந்தது. இவளுக்குக் குங்குமப் பொட்டு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது! சிவகாமுவுந்தான் குங்குமப் பொட்டு வைத்துக் கொள்கிருள்!

அவள் விழிகள் துரு துரு வென்று அலைந்தன. பொதுவாக ஒருமுறை பார்ப்பதோடு நிற்காமல் மறு முறையும் பார்க்கத் தூண்டும் அழகு. அவளுக்குத் திருஷ்டி பரிகாரமாக இருந்தான் அவள் கணவன். அவன் ஒரே கறுப்பு. ஒரே ஒரு கண்தான் இருந்தது. மற்ருென்று ஆழம் காணமுடியாதபடி இருந்தது. கொஞ்சம் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், சற்றுப் பயமாகவும்கூட இருந்தது!

ஆனுல், இதை எல்லாம் அவள் கவனித்ததாகவே தெரியவில்லை. அவனுடைய ஒரு கையை எடுத்துத் தன் கைகளுக்குள் கோத்துக் கொண்டு நடந்தாள் வீட்டுக்கு.

அதிசயமான பெண்!

நானும் மண்ணைத் தட்டிவிட்டு வீட்டிற்கு நடந்தேன்.

ஏனே தெரியவில்லை. நான் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டும்போது வெகு நேரம் ஆகி விட்டது.

கதவைத் தட்டினேன்.

சப்தத்தைக் காணும்.

மறுபடியும் தட்டினேன்.

அவள் வந்து கதவைத் திறந்தாள்.

இன்னும் அவளுக்குத் தூக்கக் கலக்கம் இருந்தது. அவளால் கண்களைச் சரியாக விழிக்க முடியவில்லை. கண் இமைகள் வீங்கிப்போயிருந்தன. ரவிக் கையைக் கழட்டிவிட்டுச் சேலையை மட்டும் உடல் முழுதும் போர்த்துக்கொண்டிருந்தாள். நான் வெளியே போனபின் வெகு நேரம் அழுதிருக்கிருள் போல் இருக்கிறது. கண்களெல்லாம் சிவந்திருந்தன.

மெல்ல உள்ளே காலை எடுத்து வைத்தேன். வீடு முழுவதும் ஒரே இருட்டாக இருந்தது. உள்ளே போய் லைட்டைத் தட்டினேன்.

சாப்பிட உட்கார்ந்தேன்.

பரிமாறினுள்.

சாப்பிட்டு விட்டு மாடிக்குப் போனேன்—படுக்க.

நான் அங்கே கண்ட காட்சியைக் கண்டதும் அப்படியே மலைத்து நின்றுவிட்டேன்.

என் கட்டிலில் என் மெத்தை ஒழுங்காக விரிக்கப்பட்டிருந்தது. கட்டிலுக்கு அடுத்தாற்போல் கீழே ஒரு பாய்......அதன் மேல் ஒரு தலையணை......இந்தப் பாயும் இந்தத் தலையணையும்...இன்றைக்குப் புதிதாக வந்து முளைத்திருக்கின்றன! இதுவரை நான் மட்டுந்தான் அங்கே தனியாகப் படுத்து வந்தேன். ஆனால், இன்றைக்கு அந்தப் பாயும் தலையணையும்...... புதிதாக.........

அவள் மெல்ல என் பின் பக்கம் வந்து நின்றுள். அவள் கை கால்களெல்லாம் லேசாக நடுங்கினபோல் தோற்றியது. முகம் முழுவதும் குப்பென்று பயம் கவிந்து கலை மங்கியது. மருள மருள விழித்தாள். எதற்கோ லேசாகப் பிரிந்த உதடுகள் மறுபடியும் மூடிக்கொண்டன.

"இந்தப் பாய் இன்றைக்கு ஏன் இங்கே வந்திருக்கிறது!"

என் குரல் கடுமையாக ஒலித்தது.

"நான்தான்......"

அவள் குரல் நடுங்கியது. மேலே வார்த்தைகள் வரவில்லை.

"எதற்காக இங்கே கொண்டு வந்து விரித்தாய்?"

பதிலையே காணேம்.

"பதில் சொல்லப் போகிருயா இல்லையா?"

மெல்ல அழுதுகொண்டே சொன்னுள்.

"கீழே பயமாக இருக்கிறது."

"இத்தனை நாள் கீழே எப்படிப் படுத்திருந்தாய்?"

மறுபடியும் பதில் இல்லை. அழுதுகொண்டே நின்றுள்.

"முடியாது............பாயைச் சுருட்டு...ஹூம்...ம்."

அவள் அசையாமல் நின்றுகொண்டிருந்தாள்.

கண்களிலிருந்து கண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது.

"பாயைச் சுருட்டப் போகிருயா, இல்லையா?"

என் தொனி கடுமையின் எல்லையைத் தொட்டது.

அவள் இன்னும் அசையாமல் அழுதுகொண்டே நின்றுள்.

"சரி, அப்படியே நின்றுகொண்டிரு" என்று சொல்லிவிட்டு நான் விறு விறுவென்று படுக்கையைச் சுருட்டிக்கொண்டு மாடியின் வெளிமுற்றத்தில் போய்ப் படுத்துக்கொண்டேன்.

நல்ல நிலவு; பட்டப் பகல் போல் இருந்தது. மெல்லிய காற்று இழைந்தது. கார்முகில் அடிக்கடி நிலவை மறைத்தது.

பின்னல் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தேன்.

அவள் மெல்ல நடந்து—நொண்டி வந்து—என் தலைமாட்டில் நின்றுகொண்டாள்.

அவள் அந்த நொண்டிக் காலை ஒவ்வொரு முறையும் தூக்கித் தரையில் வைக்கும்போதெல்லாம் யாரோ என் இதயத்தில் படீர் படீர் என்று அடிப்பது போல் இருந்தது.

"இங்கே வந்து படுத்துக்கொண்டீர்களே".

விக்கலும் விம்மலுமாக இதைச் சொன்னாள்.

"ஆமாம்".

"வாடை அடிக்குமே?"

"பரவாயில்லை".

"ஜுரம் வந்துவிடுமே".

"ஜுரமெல்லாம் வராது".

"உள்ளே வந்து படுத்துக் கொள்ளுங்களேன்".

"முடியாது".

"திறந்த உடம்போடு படுத்திருக்கிறீர்களே".

"அதனால் உனக்கென்ன?"

"நான் சொல்லுவதைக் கொஞ்சமாவது கேளுங்களேன்; உள்ளே வந்து படுத்துக்கொள்ளுங்கள்".

"இப்பொழுது நீ உள்ளே பேசாமல் போகப் போகிறாயா, இல்லையா?"

"ஐயோ...நான் வேண்டுமானாலும் போய்விடுகிறேன்... இதற்காக உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்."

"சரி, அப்படியானால் கீழே போ, நான் உள்ளே போய்ப் படுத்துக்கொள்கிறேன்."

ஊர்ந்து போய் அவள் பாயைக் குனிந்து சுருட்டினாள்.

நான் இமையாடாமல் பார்த்துக்கொண் டிருந்தேன்.

படுக்கையைச் சுருட்டிக் கொண்டு நடந்தாள்.

அவள் முதல் படியை விட்டுக் கீழே இறங்கும்போது தேம்பித் தேம்பி அழுவது கேட்டது.

"மறுபடியும் அழுகையா? எத்தனை தரம் உனக்குச் சொல்வது, அழுது தொலைக்காதே என்று?... நான் செத்த பிறகு ஒரேயடியாக அழுது தொலைக்கலாம், இப்பொழுது அழுகாமல் இரு..."

அவளால் அழுகையைத் தாங்க முடியவில்லை. அழுவது தெரியாமல் பல்லை உதட்டில் வைத்து இறுகக் கடித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பிறகு படியைவிட்டுக் கீழே ஒவ்வொரு படியாக இறங்கினாள்... கையில் பாயும் தலையணையும்...

ஒவ்வொரு படியாக மெல்ல இறங்கிக்கொண் டிருந்தாள்.

நான் ஜன்னலுக்கு வெளியே பார்வையைத் திருப்பினேன்.

திடீரென்று படபட வென்று ஏதோ சத்தம்...ஓடிப் போய்ப் பார்த்தேன்.

அவள் கடைசிப் படியில் சுருண்டு கிடந்தாள்!

தட தட வென்று இறங்கி அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டேன்.

மூர்ச்சை அடைந்திருந்தாள். கடைசி இரண்டு மூன்று படிகளிலிருந்து கால்கள் பின்னி உருண்டு விழுந்திருக்கிறாள்!

மேல் உதடு சற்றுப் பிளந்து நெற்றி வரை ரத்தம் பீறிட்டிருந்தது. எனக்குக் கை கால்களெல்லாம் வெட வெடவென்று நடுங்கின.

ஐயோ... அது...அன்றைக்கு நெற்றியி லிருந்த குங்குமப் பொட்டை அவள் அழித்த போது கொஞ்சம் போல நெற்றியில் இழுத்துக்கொண்டு நின்றதே, அது போல் அல்லவா இருக்கிறது...!

நெஞ்சு துடித்தது.

'சடக்' கென்று நெற்றியில் இழுத்துக்கொண் டிருந்த ரத்தத்தைத் துடைத்துவிட்டேன்.

பயம் குறைந்தது.

நெஞ்சு அளவோடு துடிக்க ஆரம்பித்தது. மனத்தைச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

இளைப்பு நின்றது.

சாகவாசமாக அவளுக்குச் சிகிச்சை செய்தேன்.

வெகு நேரங் கழித்து அவள் இமைக் கதவுகள் திறந்தன லேசாக.

என்னையே பார்த்தாள்.

அவள் விழிக்கடையில் நீர் வழிந்தது.

என் கண்களிலும் நீர் சுரந்தது.

அவள் மயிர்க் கற்றைகளெல்லாம் பிரிந்து பரவிக் கிடந்தன. புருவங்களெல்லாம் சுருங்கி...

அவள் மேல் உதட்டில் கசிந்த ரத்தத்தைத் திரும்பவும் துடைத்தேன்.

"மெல்ல எழுந்திருக்கிறாயா?"

"ஹூம்..."

இரண்டு கைகளையும் தூக்கினாள். பையத் தாங்கிக்கொண்டு மேலே அழைத்துச் சென்றேன்.

அவள் கையை மெதுவாக ஊன்றி அந்தப் பாயிலேயே படுத்துக்கொள்ளப் போனாள்.

"வேண்டாம்......சிவகாமு ... மறுபடியும் என்னை ஏன் கொல்லாமல் கொல்லுகிறாய்...எழுந்திரேன்...அதோ அங்கே படுத்துக் கொள்ளலாம்" என்று கட்டிலைக் காண்பித்தேன்.

"அங்கேயா...!"

அவள் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. இந்த அநுபவம் அவளுக்குப் புதிதல்லவா?"

"இல்லை...வேண்டாம்..."

"சீ...அசடு. எழுந்திரு".

"வேண்டாமே".

"எழுந்து அங்கே படுத்துக் கொள்ளப் போகிறாயா, இல்லையா?"

பேசாமல் எழுந்து கட்டிலில் படுத்துக்கொண்டாள்.

அவள் உதட்டுக் கோணத்தில் புன்னகை நெளிந்தது.

எனக்குத் தாகம் நாக்கு வறண்டது. கீழே இறங்கிப் போனேன் தண்ணீர் குடிப்பதற்காக.சமையலறையில் நான் சாப்பிட்ட எச்சில் இலை அப்படியே கிடந்தது. பாத்திரங்களெல்லாம் திறந்தபடி கிடந்தன. சாதம், குழம்பு, கறி எல்லாம் நான் சாப்பிட்டது போக மீதி அப்படியே இருந்தன. நான் சாப்பிட்ட எச்சில் இலையில் தான் அவள் எப்பொழுதும் சாப்பிடுவது வழக்கம். இப்பொழுது இலை நான் சாப்பிட்டபடியே கிடந்தது! அவள் சாப்பிடவே இல்லை!

தண்ணீர் குடித்துவிட்டு மாடிப்படியேறினேன்.

திடீரென்று என் பார்வை என் சட்டையில் படிந்தது.

சட்டையின் வலது பக்கத்தில் குங்குமப் பொட்டு அளவுக்கு வட்டமாக ரத்தக் கறை!

என்னமோ தோன்றிற்று. மறுபடியும் கீழே இறங்கிப் போய்க் குங்குமக் கிண்ணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மாடிக்கு வந்தேன்.

"சிவகாமு!"

"ஹூம்".

"நீ சாப்பிடவே இல்லை போலிருக்கிறதே?"

"ஆமாம்".

"ஏன்?"

"பசியே இல்லை".

"இப்பொழுது என்னமாவது சாப்பிடுகிருயா?"

"ஒன்றும் வேண்டாம்".

நான் கட்டிலில் உட்கார்ந்ததும் அவள் எழுந்திருக்க முயன்ருள்.

"வேண்டாம் சிவகாமு, உடம்பை அலட்டிக்கொள்ளாதே; அப்படியே பேசாமல் படுத்துக்கொள். பரவாயில்லை"

ஜன்னல் வழியே நிலவின் கிரணங்கள் வந்து விழுந்திருந்தன.

"சிவகாமு, நெற்றியைக் கொஞ்சம் காட்டேன்".

"ஏன்?"

"நெற்றியைக் காட்டேன் சொல்கிறேன்."

"காரணத்தைச் சொன்னுல்தான்".

"இல்லாவிட்டால்..."

பையத் தலையைத் தூக்கினுள்.

பெருவிரலால் குங்குமத்தைத் தொட்டு அகலமாக—வட்டமாக—அவள் நெற்றியில் பொட்டு வைத்தேன்.

அப்பா! எவ்வளவு அழகாக இருக்கிறது!

நெற்றி சுட்டது.

"சிவகாமு!"

"ஊஹூம்".

"குங்குமப் பொட்டு உனக்கு எவ்வளவு அழகாக இருக்கிறது!"

அவள் பதிலே சொல்லவில்லை.

"எப்பொழுதுமே கறுப்பாக இருப்பவர்கள்தாம் குங்குமப் பொட்டு வைத்துக்கொள்ள வேண்டும். சிவப்பாக இருப்பவர்கள் குங்குமப் பொட்டை வைத்துக்கொண்டால் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டிருப்பதே தெரியாது! உன்னைப் போன்றவர்களுக்குத்தான் குங்குமப் பொட்டு லாயக்கு. இல்லையா?"

லேசாகச் சிரித்தாள். விஷமச் சிரிப்புத்தான்! சிரிப்பதையே மறந்திருந்த அவள் இன்றைக்கு நன்ருகச் சிரித்தாள். இப்பொழுது சிரிப்பதற்கு நன்ருகத் தெரிந்துகொண்டாள்.

நான் கட்டிலில் படுத்துக்கொண்டேன்.

அவள் கூச்சத்தோடு திரும்பிப் படுத்துக்கொண்டாள்...

"லைட்டை அணைக்காமல் வந்து படுத்துவிட்டீர்களே!"

அவள் இதழ்களுக்கிடையில் மறுபடியும் விஷமச் சிரிப்பு முளைத்தது.

லைட்டை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டேன்.

லைட்டை அணைத்துவிட்டாலும், நிலவொளி கண்களை உறுத்திக் கூச்சத்தை உண்டு பண்ணியது.

நிலா வட்டமாக—முழு வட்டமாக—குங்குமப் பொட்டுப் போல இருந்தது.

ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டேன்.

❋

நல்லதே செய்

எப்பொழுதும் நல்லதையே செய்; சிலரை இது திருப்திப் படுத்தும்; மற்றவர்களை ஆச்சரியப்படுத்தும்.

—மார்க் ட்வெய்ன்.

NO MORE
Financial Anxiety!



உங்களுக்கும் உங்கள்
குடும்பத்தினருக்கும்

எங்கள் இரண்டுவித அனுகூலத்திட்டத்தில் முதலீடு செய்து நிரந்தர வட்டி விகிதத்துடன் 50 சதவிகித அதிகப்படி லாபத்தையும் அனுபவியுங்கள். எங்களுக்கு நீங்கள் எழுதினால் நீங்கள் செய்யும் முதலீடுகள் எல்லாவற்றிலும் உங்களுக்கு உதவி வழி காட்டுவோம். நீங்கள் கொள் முதல் செய்வதில் எல்லாம் உங்களுக்கு உற்ற துணையாய் இருப்போம். எமது வாராந்திர மார்க்கெட் விமர்சனமும் விபரங்களும் கேட்டுக்கொண்டால் இலவசமாக அனுப்பப்படும்.

Commercial

SHARE DEALERS' SYNDICATE LTD.

தலைமை ஆபீஸ்: 23/24 ராதா பஸார் தெரு, கல்கத்தா
ஐ. மா. ஆபீஸ்: வில்சன் லாட்ஜ், மாடல் அவுஸ் லக்ஷ்மணபுரி
பங்கூரா ஆபீஸ்: கெரஞ்சீ பஸார், பங்கூரா
டெலிபோன் Cal: 1945 தந்தி: "COMMESYND"

Mg. Director: Mr. K. D. MUKHERJEE

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி:
"HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை

போன் நெ.
219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள்:

மோஹன் ராம் கம்பெனியாரின்
சேலைகள், வேஷ்டிகள்

✲

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸ்லிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ்
சின்டஸ் வகையரா

✲

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

✲

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்



கிரைப்-டில்-வாட்டர்
GRIPE-DIL-WATER

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்கு உகந்தது
எல்லா இடங்களிலும் கிடைக்கும்

Manufactured by
BHARATH DRUG HOUSE
MADURA

Children's necessity-Pet drink of the Child-Mother's ready-at-hand remedy-for all disorders of Stomach and Children's General Tonic

டிஸ்டிரிபியூடர்கள்:-T.N.C. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ், மருந்து ஷாப், மதுரை

M.S.O.

படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

கட்டவிழ்ந்தது



படம்: எம். கே. ரங்கசாமி ஐயங்கார், சென்னை

அ, ஆ, இ, ச . . .

படம்: ஏ. எம். ஹூசேன், சென்னை

ஏ, பி, ஸி, டி . . .

பர்மியச் சிங்கம் ஆங் சானும் இந்தியச் சிங்கம்
நேருவும் சமீபத்தில் டெல்லியில் சந்தித்தார்கள்



டெல்லி சர்வ கலாசாலையின் விசேஷப் பட்டமளிப்பு விழா சமீபத்தில் நடந்தபோது, ஒன்பது வெளி நாட்டு விஞ்ஞானிகளுக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கினார்கள். ரஷ்யப் பிரதிநிதிகளின் தலைவரான புரொஃபசர் வால்கினுடன் கை குலுக்குகிறார் வைஸ்ராய்

பட விளக்கம்: குளமும், அதன் மத்தியில் நீராழி மண்டபமும். அதற்குப் பின் கோவிலும் சேர்ந்து, படம் எடுப்பவரின் மனத்தை எப்பொழுதும் சுலபமாய்க் கவருகின்றன. சாதாரணமாக, இம் மூன்றையும் சேர்த்துத் தான் எடுக்கத் தோன்றும். அப்படி இல்லாமல், அதனுடைய சிற்சில பாகங்களை அழகாய்ப் படம் பிடிப்பது ஒரு விசேஷம். ஸ்ரீ ஆர். கிருஷ்ணன் அனுப்பியிருக்கும் படம் (சென்னை, மயிலாப்பூர்) கபாலீ குளத்தின் ஒரு பாகத்தையும், படிக்கட்டையும் காண்பிக்கிறது. ஆனால், இந்தப் படத்தில் முக்கிய பாகம் எது என்று விளங்காமல், நமது பார்வை ஒவ்வொரு பாகத்தையும் பார்த்து முக்கியமான பாகத்தில் லயிக்கவில்லை. படத்தில் இருக்கும் மற்ற விஷயங்கள் அதை

அநுசரித்து, அதன் முக்கியமான பாகத்துடன் போட்டி போடாமல், அதன் அழகை அதிகமாக எடுத்துக் காட்டும்படி அமையவேண்டும். இப் படத்தின் ஓரத்தில் பிளவு பட்டுள்ள கோபுரத்தையும், மேகமே இல்லாத அதிகப்படி வானத்தையும் எடுத்து, எஞ்சியுள்ள ஒரு பாகத்தைப் பாருங்கள். இதில் காணக் கூடிய விஷயங்கள் குறைந்து நமது பார்வை படிக்கட்டு, ஜலம் இவைகளைக் கடந்து, இடப் பாகத்தில் கறுத்த கோபுரத்தில் லயிக்கிறது. படம் குறைந்தாலும், படத்தின் பாகமானது பூராப் படத்தைக் காட்டிலும் மேலாகவே விளங்குகிறது.

— படக்காரர், சக்தி

படம்: என். ராமகிருஷ்ணு, மாயவரம்

கவி சொல்லும் சேயிழை

அரிய நூல்கள்

★

		ரூ.	அ.
மலரும் மாலையும்	தேசிக விநாயகம் பிள்ளை	6	0
ஆசிய ஜோதி	,,	2	0
சாரதையின் தந்திரம்	கல்கி	4	8
ராஜாஜி கதைகள்	ராஜாஜி	4	8
ஆத்ம சிந்தனை	,,	1	8
லெனின் சரித்திரக் கதைகள்	ஏ. காஜேநாவ்	3	12
கார்ல் மார்க்ஸ்	பால் லைார்ரக்	3	0
நாடக உலகம்	கொத்தமங்கலம் சுப்பு	3	12
சீனமக்களும் சீனமும்	லின் யூ டாங்	7	8
பாரதியும் கவிதையும்	தங்கம்மாள் பாரதி	3	0

★

புதுமைப் பதிப்பகம்
லிமிடெட்

கல்லுக்கட்டி : : காரைக்குடி
14, வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை

சக்தி காரியாலயம் — சென்னை - 14

அரசியல் நூல்கள்

		ரூ.	அ.
நான் மந்திரியானல்	காந்திஜி	1	0
சுயராஜ்யம் வேண்டாமா?	,,	1	0
இந்திய சுயராஜ்யம்	,,	1	0
அணுகுண்டும் அஹிம்ஸையும்	,,	1	4
உலக நிலை	ராஜாஜி	2	0
கிராம இயக்கம்	ஜே. ஸி, குமரப்பா	3	0
அறிஞர் மார்க்ஸ்	ஆர். ராமனுதன்	1	8
வியட்நாம் குடியரசு	,,	0	6
ரத்தக் களரி	நேதாஜி	1	8
விஜயலக்ஷ்மியின் வெற்றி	ரா. ஹாலாஸ்யநாதன்	0	8
இந்திய சமஸ்தானங்கள்	கே. அருணுசலம்	4	8
இந்தோனேஷியா		0	12

பொருளாதாரம், மற்றவை

செல்வம்	க. சந்தானம்	1	8
பொய்யும் மெய்யும்	,,	1	8
காய்கறித் தோட்டம்	மு. அருணுசலம்	5	0
உணவுப் பஞ்சம்	,,	1	8

சிறுகதைகள்

பெண்சாதி	கதைத் தொகுப்பு	1	0
முதல் சந்திப்பு	,,	1	0
பழிக்குப் பழி	,,	1	0
சிங்காரி	மஞ்சேரி ஈச்வரன்	3	0
சஞ்சீவி	'குகப்பிரியை'	3	4
சரித்திரக் கதைகள்	சுப்ரமணிய ஐயர்	1	4

நாவல்கள்

வனிதாலயம்	சகுந்தலாராஜன்	2	0
பவானி	'லக்ஷ்மி'	2	8
வானவில்	வாண்டா வாஸிலெவ்ஸ்கா	5	0
காதல்	,,	3	12
சுந்தரி	வ. ரா.	5	0
ஜெய காதல் கீதம்	துர்க்னேவ்	0	8

சக்தி காரியாலயம் — சென்னை - 14

காய்கறியும் ஆரோக்கியமும்

ஹெலன் எட்வர்டு

சமய சந்தர்ப்பங்களுக் கேற்ற வாறு தற்காலிக மாறுதல்களை யும், சூழ்நிலைகளையும் நாம் நமது நன்மைக்கே பயன்படுத்திக் கொள்ளலாம். முன்பு இன்றி யமையாதனவாகக் கருதப்பட்ட சில உணவுப் பொருள்கள் இல்லாமலேயே நாம் ஆரோக்கிய வாழ்வு வாழ முடியும் என்ற உண்மையைச்சென்ற யுத்தம் கற் பித்திருக்கிறது.

பங்கீட்டு முறை ஒவ்வொருவ ருக்கும் குறித்த அளவு உண வையே கொடுப்பதால், அள வுக்கு மீறுமல் மித உணவு உட் கொள்ளும் நம்முடைய உடல் நலம் செம்மையாக இருக்கிறது. சர்க்கரை, மாமிசம், பால் முதலி யனவற்றை விநியோகத்தில் கட் டுப்படுத்தி, குறைந்த அளவே கொடுப்பது நமக்கு நன்மை பயப்பதாய் முடிந்துள்ளது.

மேற் சொன்ன மாமிசம், பால் முதலியன எளிதில் கிடைக்கா மல் போகவே காய்கறிவகை களுக்கு மிகுந்த கிராக்கி ஏற் பட்டுவிட்டது. பழவகைகள் முதலில் கிடைக்கவில்லை; என்று லும், அதனுல் ஒன்றும் குடி முழு கிப் போய்விடவில்லை. மிகுந்த ஊக்கத்தோடு மக்கள் காய்கறித் தோட்டங்கள் வைத்துப் பயிர் செய்கின்றனர். தோட்டம் துரவுகள் இல்லாதவர்கள் தங்க ளுடைய வீட்டுக்குள் இருக்கும் முற்றம் போன்ற சிறு இடங் களில்—அவ்வளவு ஏன், எங்கே பயிர் செய்யலாம் என்று எண்ணு கிருர்களோ அங்கெல்லாம்—தங் களால் இயன்ற அளவு காய்கறி களை உற்பத்தி செய்கிருர்கள். காய்களும் கீரை வகைகளும் தாம் பயன்படக் கூடியவை என்பதல்ல; நல்ல ஆரோக்கியத் துக்குக் கிழங்குகளும் தண்டு களும்கூடப் பெரிதும் பயன் படுகின்றன.

காய்கறிகளைப் பொதுவாக இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: உடலுக்குப் போஷாக்குக் கொடுக்கக் கூடிய பட்டாணி, சீமை அவரை, பருப்பு வகைகள், உருளைக்கிழங்கு போன்றவை ஒரு பிரிவில் அடங்கும். நீர், உப்புவகைகள், உயிர்ச்சத்து, (வைட்டமின்) தசை நார்களைப் போஷித்து வளர்க்கும் பொருள் கள் நிறைந்த முட்டைக்கோசு, பசளை (ஸ்பைனுச்), கீரைவகை கள், தக்காளி போன்றவற்றை மற்ருெரு பிரிவில் அடக்கலாம். மேற் சொன்ன இரண்டு பிரிவு களிலும் சேராமல், இரண்டுக் கும் உள்ள குணங்களை மட்டும் உடையனவாக இருக்கும் பல காய் வகைகள் இருக்கின்றன.

நம்முடைய மூதாதையர் காய் கறிகளைப்பற்றிக் கொண் டிருந்த அபிப்பிராயங்களும் அநுபவங்களும் கர்நாடக மானவை என்று சொல்ல நாம் கூசுவதில்லை. உடல் நலத்தைப்

அழகையும், ஆரோக்கியத்தையும் பாது காக்க இப்போது எத்தனையோ செயற்கை முறைகள் கிளம்பியிருக்கின்றன. ஆனுல், இயற்கையின் உதவியைக் கொண்டு, இந்த நோக்கத்தை எவ்வளவு சுலபமாகப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்பதைத் தெரி விக்கிற இந்தக் கட்டுரை, ஹெல்த் ஃபார் ஆல் என்ற பத்திரிகையில் வெளியான தின் சாரம்.

பேணி வளர்க்கவும் நோய்களைத் தடுக்கவும் அழகுச் செல்வத்தைப் பெருக்கவும் தங்களுடைய தோட்டத்தில் விளைகிற காய்களையேதாம் உபயோகித்து வந்தனர். செடி கொடிகள், புல் பூண்டுகள் முதலியவற்றி னின்றும் உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்தி உபயோகித்த பெருமை அவர்களுக்குத்தானுண்டு. பழங்காலத்தி லிருந்தே சில காய்கறிகள், குறிப்பிட்ட ஒரு நோயையோ, உடல் வலியையோ நிவாரணம் செய்ய வல்லது என்று பெயர் பெற்று வந்திருக்கின்றன. அவை உண்மையில் அம் மாதிரியான சக்தி வாய்ந்தவைகள்தாம் என்பதைச் சமீபகாலத்தில், அந்தத் துறையில் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன. ரத்தத்தையும், வயிற்றையும் சுத்தம் செய்ய வல்ல உப்புச் சத்துக்கள் காய்கறிகளில் மிகுந்துள்ளன.

'தண்ணீர்விட்டான்' (அஸ்பெராகஸ்) என்னும் ஒருவிதக் கீரை இருதய சம்பந்தமான நோய்களைப் போக்க உதவுகிறது; பாரிச நோய்க்கும் (பக்கவாத நோய்) நல்ல மருந்தாகக் கருதப்படுகிறது; மூத்திரக் காய்களுக்கும் இது பல மளிக்கிறது.

'சிலேரி' என்பது ஒருவிதமான செடி. இதனுடைய தண்டு உடம்புக்கு நல்லது. இது நரம்புகளைப் பாதுகாப்பதோடு பாரிச நோய்க்கும் கைகண்ட மருந்து. மேலும், இது ஈரலையும் பாதுகாக்கிறது. இதில் கந்தகம் அதிகமிருப்பதால் தோலைச் சுத்தம் செய்து, சொறி சிரங்கு வராமல் தடுக்கிறது. கந்தகம் உடம்பில் சேருவது நல்லது. வெறும் கந்தகத்தை உட்கொள்வது கூடாது. ஆகவே, அது மிகுதியாக உள்ள தாவர வர்க்கங்களை உணவாகக் கொள்ளுதல் நல்லது. கந்தகம் நிறைந்துள்ள காய்கறிகளில் சில: வெங்காயம், காலிஃப்ளவர், முள்ளங்கி, முட்டைக் கோசு.

'காரெட்': இது அழகைப் பெருக்கும் சாதனங்களில் மிகச் சிறந்து விளங்குகிறது. இதை உண்பதால் முகத்தில் ஒளியும் சருமத்தில் ஒரு பளபளப்பும் உண்டாகிறது. இதில் ஒருவித உப்புச்சத்து உள்ளது; அது ஆஸ்த்மாவைக் குணப்படுத்தும் தன்மை யுடையது, வாதரோகம், மூத்திரக்காய் சம்பந்தமான வியாதிகள் முதலியவற்றால் வருந்துகிறவர்கள் இதைத் தாராளமாக உபயோகிக்கலாம். இது கண்களுக்கும் நல்லது.

வெங்காயம்: இதைச் 'சர்வ ரோக நிவாரணி' என்று கூடச் சொல்லலாம். தளர்ச்சியடைந்த நரம்புகளுக்குச் சக்தி யூட்டும் அமிழ்தம். ரத்தத்தைச் சுத்தி செய்யப் பெரிதும் பயன்படுகிறது. பசியைத் தூண்டிவிடவும், ஜீரண சக்தியைப் பெருக்கவும் வெங்காயம் அத்தியாவசியமானது. காதுவலிக்குக் கைகண்ட மருந்து. வெயில் காலத்தில் பயிராகும் வெங்காயம் தான் மேற்சொன்ன குணங்களில் சிறந்து விளங்குகிறது.

பசளை (ஸ்பைனச்): இது கீரை வகைகளில் உயர்ந்தது. வாத நோயைத் தடுக்கவும், மலச் சிக்கலின்றித் தாராளமாக மலம் வெளியேறவும் இது உபயோகமாக இருக்கிறது. இதில் இரும்புச் சத்து அதிகமாக இருப்பதால் சருமத்திற்கு மெருகு கொடுத்து, அழகைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்கிறது.

தக்காளி: இதில் உடல் நலத்துக்கு வேண்டிய பல பொருள்கள் அடங்கியுள்ளன. இது முக்கியமாகப் பித்தத்தைத் தணிக்கிறது. இது மிகச் சுவையுள்ளதாயும், களைப்பை நீக்குவதாயும் உள்ளது.

ஆரோக்கிய வாழ்வுக்கு மட்டும்தான் காய்கறிகள் நல்லன என்பதல்ல. அவை நம்முடைய தோற்றத்தையும் கவர்ச்சியுடையதாகச் செய்கின்றன. நாம் உட்கொள்ளும் உணவு நமது வெளித் தோற்றத்தையும் ஓரளவுக்குப் பாதிக்கிறது என்பது உண்மையே. நல்ல தேகாரோக்கியம் இல்லாமல் அழகாக இருக்க முடியாது. என்னதான் வாசனைப் பொருள்களையும் 'பவுடர்'களையும் 'கிரீம்'களையும் போட்டாலும், சத்துள்ள உணவை அளவாக உட்கொண்டு ஆரோக்கியமான, இயற்கை அழகைப் பெறுவதுபோல் ஆகாதுதான். கொழுப்புச் சத்து நிறைந்த பதார்த்தங்களையும் அதிகமாக உண்பது நல்லதல்ல. மாவுப் பொருளும், கொழுப்புச் சத்தும் நம் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதன என்றாலும், புத்தம் புதிய காய்கறிகளும் பழ வகைகளும்தாம் உடல் நலத்துக்கும் கவர்ச்சி மிகுந்த தோற்றத்துக்கும் உள்ளொளிப் பெருக்கத்துக்கும் அவசியம்.

தங்களுக்கெனக் காய்கறித் தோட்டங்கள் இல்லாதவர்கள் காய்கறி வாங்குவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். சத்து அற்றுப் போன காய்கறிகளைச் சுவை மிக்கதாகச் சமைத்து விடுவதால் மட்டும் நன்மை விளையாது. காய்கறிகள் அப்போதைக்கப்போது செடியிலிருந்து பறிக்கப்பட்டதாக இருந்தால் மிக மிக நல்லது. குவியலாக ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்டு, நாள்பட்டுப் போயிருக்கும் முட்டைக்கோசு போன்ற காய்கறிகளினால், நன்மையை விடக் கேடுதான் அதிகம். முதல் தரமான காய்களையே வாங்க வேண்டும். காலத்துக்கேற்றவாறு, எந்தக் காலத்தில் எந்தக் காய்கறிகள் அதிகமாக விளைகின்றனவோ அவற்றை வாங்கினால்தான் மிகவும் மலிவாய் இருக்கும்; பொருள் வகையில் மட்டுமின்றி உடல் நலத்துக்கும் இம் முறைதான் சாலச் சிறந்தது.

காய்களைப் பச்சையாக உண்பதுதான் நல்லது. அழுகிப் போன இலைகள் ஏதாவது இருந்தால், அவற்றை நீக்கிவிட்டுச் சுத்தமான நீரில் நன்றாகக் கழுவி, உண்பது நலம். காய்களைக் கழுவுவதால் தீங்கு ஒன்றும் நேராது. அவை குணத்திலும் சிறிதும் குறையா. ஆனால், அவற்றை நெடுநேரம் தண்ணீரில் போட்டு ஊறவைப்பது சரியல்ல.

சர்வசாதாரணமான காய் வகைகளையும் மிக்க சுவையுள்ளனவாகச் செய்யலாம். காய்கறிகளை ஆவியில் வேக வைப்பதே தலைசிறந்த முறை. தண்ணீரில் போட்டு நன்றாக வேக வைப்பதால் அதன் மணமும், உடலுக்கு வேண்டிய சத்துக்களும் குறைந்து விடுகின்றன. கடைசியில் நாம் உட்கொள்வது வெறும் சக்கைதான். காய்கறிகளை வேக வைப்பதற்குத் தகுந்த பாத்திரமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுவது மண்பாண்டமே. சில கடினமான காய்களை வேக வைத்தல் நலம். வெங்காயம் போன்றவற்றை அதன் மணத்

தைப் போக்க வேண்டி வேக வைக்கிறார்கள்; இப்படி வேக வைப்பதால், அதிலுள்ள கார மான அமிலம் ஒன்று வெளி யேற்றப்படுகிறது. மிக மிருது வான காய் வகைகளைச் சேர்ந்த பட்டாணி, சீமை அவரை, காரெட், தக்காளி முதலிய வற்றை மண்பாண்டங்களில் சிறிதளவு தண்ணீர் விட்டு வேக வைக்கலாம். தண்ணீரை வடிகட் டாமல், குறைந்த அளவில் வைத்து, தண்ணீர் முழுவதும் சுண்டிப் போகும்வரை அடுப் பில் வைத்திருப்பதுதான், காய் களின் சிறந்த அம்சங்கள் கெட்டுவிடாமல், பக்குவப் படுத்தச் சரியான வழி. அவ் வாறு பக்குவப்படுத்திய காய் கள் உடலுக்கு உயிர்ச் சத்தைக் கொடுத்து, வளர்ச்சிக்கு வேண் டியதைச் செய்கின்றன.

தண்ணீரை அதிகமாக உபயோ கித்தால், மிகுந்த தண்ணீரைக் கொட்டிவிடாமல் அந்தத் தண்ணீ ரைக் கொண்டே ரசம் முதலியன வைக்க உபயோகப்படுத்தலாம். காய்களை நன்றாக வேகவைத்து, அவற்றைக் குழம்பாக ஆக்கினால் எளிதில் ஜீரணிக்க முடியும்.

நன்றாகச் சமைக்கப்பட்ட காய் வகைகள் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. ஆனால், ஆரோக்கியத்தோடு நல்ல தேகக் கட்டும் அழகிய முகத்தோற்ற மும் பெறவேண்டுமானால், தினம் ஏதாவது ஒரு காயைப் பச்சை யாகவும் உட்கொள்ள வேண் டும். பச்சையாக உட்கொள் வதை, மிக நன்றாக மென்று, உமிழ் நீருடன் சேர்த்து விழுங் கினால் ஜீரணமாவது இன்னும் சுலபமாக இருக்கும்.

✲

அவன் குறி!

முதல் முதலில் மோட்டார் வண்டி கண்டுபிடிக்கப்பட்ட புதிதில், ஓர் அமெரிக்கர் தன் நீக்ரோ வேலையாளைப் பக்கத்து ஊருக்கு அனுப்ப வேண்டியிருந்தது. மோட்டார்க் காரைப்பற்றி அவன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று, "தம்பி! சாலையிலே உனக்கு எதிர்த்தாற்போல் ஒரு வெளிச்சம் வந்ததானால், அது உன்னைத் தாண்டிப் போகும்வரை ஓர் ஓரமாக ஒதுங்கிக்கொள்" என்று சொல்லி அனுப்பினார்.

மறுநாள் அந்த நீக்ரோ வேலையாள் ஓர் ஆஸ்பத்திரியில் கிடப்ப தாக அந்த அமெரிக்கருக்குத் தகவல் கிடைத்தது; யஜமானர் போய்ப் பார்த்தார். நீக்ரோ தலையிலும் கையிலும் கட்டுகளுடன் படுக்கையில் கிடந்தான். "அட, பாவி! நான் சொன்னபடி, சாலையிலே வெளிச்சம் தெரிந்ததும், ஓர் ஓரமாகத் தங்குவதற்கு என்னடா?" என்று யஜமானர் கேட்டார்.

"நானும் அதைத்தான் செய்ய முயன்றேன், யஜமான்! ஆனால், சாலையிலே இரண்டு பக்கமும் வெளிச்சம் தெரிந்தது. எந்தப் பக்கத்தில் ஒதுங்கிக்கொள்வது என்று தெரியவில்லை. அதற்காக இரண்டுக்கும் நடு விலேயே நின்றுகொண்டேன்" என்று முணங்கினான் அந்த நீக்ரோ!

—தி நேஷன்

பட்டமளிப்பு

எனக்குப் பட்டங்கள் அளிக்க முன்வருகிறார்கள்; ஆனால், அவை ஒருவரை மட்ட ரகமான கும்பலில் சேர்த்து விடுகிறது என்று நான் எண்ணுகிறேன்.

—பெர்னார்டு ஷா

சோவியத் குடியரசில் முஸ்லிம்கள்

●

அரசியல்வாதி

மத்தியக் கிழக்கு ஐரோப்பா யாருடைய ஆதிக்கத்தின் கீழ் இருப்பது என்பதுதான் இன்றைய பிரச்னே. பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகளும் தங்களுடைய ஆகாயப்படை, கடற்படை முதலியவற்றின் உதவியைக் கொண்டு தங்கள் தங்கள் ஆதிக்கத்தைக் செலுத்த முயலுகின்றன; இந்த முயற்சி என்றுமே ரகசியமாக நடக்கும் என்பதற்கில்லே. இதன் மூலம் யுத்தம் வந்தே தீரும். அந்த யுத்தத்தின் முடிவே மத்தியக் கிழக்கு யாருக்குச் சொந்தம் என்று நிர்ணயிக்கும். ஆனல், உண்மையிலே என்ன நடந்திருக்கிறது? ரஷ்யா மூன்று தலைமுறையாக, கத்தியின்றி ரத்தமின்றி, ஒரு சாதகமான முறையில் தனது செல்வாக்கை மத்தியக் கிழக்கு ஐரோப்பாவில் ஸ்தாபிக்கிறது என்ருல் அது புனைந்துரையன்று.

ரஷ்யா இந்தப் பகுதிகளில் எப்படிச் செல்வாக்கு அடைந்தது? இஸ்லாமிய மதத்தைப் போற்றிப் புகழ்ந்ததுதான் என்ருல், அது பொய்யாகாது.ஏனெனில்,ரஷ்யா மதத்தை அரசியலில் கலப்பது கிடையாது. ரஷ்யர்களின் செல்வாக்கு முஸ்லிம் நாடுகளாகிய ஈரான்,ஈராக்,லெபனன் போன்ற இடங்களில் பரவியிருப்பதின் உண்மையான காரணம் வெளி நாட்டார் யாருக்கும் தெரியாது. சோவியத் குடியரசில் இரண்டு கோடி முஸ்லிம்கள் இருக்கின்றனர். மத்தியக் கிழக்கிலுள்ள அதிகார வர்க்கத்தினரைத் தம் வசமாக்கவேண்டி மேலைநாட்டு வல்லரசுகள் கடன் கொடுத்தும், வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொண்டும், மண்ணெண்ணெய் வியாபாரத்தில் மிகுந்த சிரத்தை காட்டியும், மற்றும் பல்வேறு வழிகளிலும் முயன்று வருகின்றனர். ஆனல், உலகப் போக்கோடு ஒட்டிப் போகும் ராஜதந்திரத்தை ரஷ்யர்தாம் அறிவார்கள். அதிகாரிகளை விடுத்து மக்களின் ஒத்துழைப்பை நாடியது ரஷ்யா.

மிகச் சிறந்த முறைகளை ரஷ்யா கையாண்டது. முதலாவதாக, ரஷ்ய நாட்டிலுள்ள முஸ்லிம்களுடன் தாங்கள் கொண்டுள்ள நட்பையும் உறவையும் அராபிய நாட்டு முஸ்லிம்கள் அறியுமாறு செய்தது. இரண்டாவதாக, ரஷ்ய ஆட்சியின் கீழ் மதச் சுதந்தர மட்டுமேயன்றித் தேசிய வாழ்வில் சுதந்தரமும் கிடைக்கப் பெறலாம் என்ற எண்ணத்தை அவர்களிடையே பரப்பியது. மூன்ருவதாக, தனி மனிதனுடைய வாழ்க்கையில், பெரும்பாலான முஸ்லிம் அரசாங்கத்தில் இருப்பதுபோல, பணக்கார நிலச் சுவான்தார்களுக்கு அடிமைப்பட்டு வாழ வேண்டியதில்லே யென்றும், உயர்ந்த வாழ்க்கைத் தரமும் பெறலாம் என்றும் அண்டை முஸ்லிம் நாடுகளுக்குப் போதிக்கச் செய்தது.

இரண்டு கோடி முஸ்லிம்களைக் கொண்ட ரஷ்யாவில் 'பாகிஸ்தான்' கிளர்ச்சி போன்ற எதுவும் நடக்காமலிருப்பதற்குக் காரணம் ஏதேனும் இருக்க வேண்டுமல்லவா? மாகனின் டைஜெஸ்ட்டில் வெளிவந்த கட்டுரையின் சாரமாகிய இது அதைத் தெரிவிக்கிறது.

மேலே சொல்லியவற்றைச் சொல்லளவில் விட்டுவிடாமல், நடைமுறையில் சாதித்துக் காட்டிய பெருமை ருஷ்ய நாட்டுக்குத் தான் உரியது.

நல்வாழ்வு வாழ விரும்புவது மனித இயற்கையல்லவா? பாமர மக்கள் அடிமை வாழ்வில் அல்லலுறுவதைவிட வயிறார உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க இடவசதியும் தர முன்வரும் ரஷ்ய நாடுதான் தங்களை உய்விக்க வந்த நாடு என்று எண்ணி, அதன் ஆதிக்கத்திலேயே இருப்பதற்கு விழைகின்றனர். ரஷ்ய நாட்டு முஸ்லிம் மக்களைப் போலத் தாங்களும் வாழவேண்டும் என்ற எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ள, இந்திய, சீன நாட்டு மக்களும் ரஷ்யர் உதவியையே நாடுகின்றனர்.

இஸ்லாம் மதத்தினர் தங்களுடைய மதக் கோட்பாடுகளைக் காக்கவும், மதாசாரப்படி எவர் தலையீடு மின்றி வாழ்வு நடத்தவும், ஒன்றுபட்டு வாழ விரும்புகின்றனர். இதற்குச் சாதகமாக இருப்பவர்கள் ரஷ்ய மக்கள்தாம் என்ற எண்ணத்தைப் பரப்புவதில் ரஷ்யர் வெற்றி கண்டனர். கேவலம் 20,000 ஜனத் தொகையே கொண்ட குர்தர்களுக்காக, சோவியத் குர்தர்கள் குடியரசு என்ற ஒரு சிறிய குடியரசு,சோவியத்துடன் சேர்க்கப்பட் டிருப்பதிலிருந்தே ரஷ்யர்கள் முஸ்லிம்களின் நண்பர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. குர்தர்களும் சோவியத் குடியரசுக்குள் வர வேண்டும் என்று ஈரான், ஈராக், துருக்கி முதலிய நாட்டுக் குர்தர்கள் கிளர்ச்சி செய்தார்களாம்.

ரஷ்ய நாட்டின் எல்லைப்புறங்களி லுள்ள முஸ்லிம்கள் ஏன் ரஷ்ய ஆட்சியில் வாழ விரும்புகின்றனர் என்பதன் காரணம் எளிதில் விளங்கும். துருக்கியைத் தவிர மற்ற முஸ்லிம் நாடுகளில், மக்கள் அரைவயிற்றுச் சோற்றுக்கு வழியில்லாமல், பணக்கார நிலச்சுவான்தார்களின் அடிமையாய், தாங்கள் உடல் மெலியப் பாடுபட்டும் பலனை அநுபவிக்க வழியின்றி, நாயினும் கேடுகெட்ட வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அப்படிக் கீழ்த்தரமான நிலைமையி லுள்ளவர்கள் வயிறார உண்டு இனிது வாழலாம் என்ற நோக்குடனேதான் ரஷ்ய நாட்டின் உதவியைப் பெற முன்னிற்கின்றனர்.

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து அவர்களை இன்புறச் செய்யப் பொதுஉடைமைக் கட்சியினர் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். பொது உடைமைக் கட்சியின் நிர்வாகத் திறமையையும் ஸ்தாபனக் கட்டுப்பாட்டையும் உலகம் நன்கு அறியும்.

மக்களுடைய பண்பாட்டிற்கு ஏற்றதாயும், விருப்பத்துக்கு ஒத்ததாயும், நோக்கத்துக்கு இசைந்ததாயும் அரசியலை அமைத்தால்தான் ஆளப்படுவோரின் ஒத்துழைப்பையும், நன்னம்பிக்கையையும் பெற வழியுண்டு, என்ற அரிய உண்மையைக் கண்டவர் ரஷ்யர். முஸ்லிம்கள் தங்களுடைய மதத்தை மட்டும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என் றறிந்த ரஷ்யர், அவர்களுடைய மதவிஷயங்களில் தலையிடாமல் நடுநிலைமை வகித்தனர். ரஷ்யப் புரட்சி நடந்த காலத்தில் கூட, கிறிஸ்தவ மதத்தைத் தாக்கினார்கள்; மாதா கோயில்களைப் பள்ளிக்கூடங்க ளாகவும், கலை

வளர் மன்றங்களாகவும் மாற்றினார்கள். சுருங்கச் சொன்னால், கிறிஸ்தவ மதத்துக்குத்தான் அதிக எதிர்ப்பிரசாரம் நடந்தது. ஆனால், இஸ்லாமிய மதத்துக்கு விரோதமாக அவ்வளவாக ஒன்றும் செய்யவில்லை என்றே சொல்ல வேண்டும். ஒரு மனைவிக்கு மேல் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது, பெண்கள் பர்தா அணிந்து கொள்வதை நிராகரிக்க வேண்டும் என்பன போன்ற மாறுதல்கள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டன. இச்சிறு சமூகச் சீர்திருத்தங்கள் மதத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பாதிக்கவில்லை யல்லவா? ஆகவே, இவற்றுக்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்படவில்லை.

ரஷ்யாவில் ஐந்தாண்டுத் திட்டம் அமைத்து, அதைச் செயல் முறையில் நடத்த முற்பட்டபோது கூட, முஸ்லிம்கள் தங்களுடைய மத முன்னேற்றத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் ஆவன செய்வதைத் தடை செய்யவில்லை. முஸ்லிம்கள் அமோகமான முன்னேற்ற மடைந்தனர் என்பதைக் கீழே தரப்பெறும் புள்ளி விவரங்களே நன்கு விளக்கும்.

1914-ம் வருஷத்துக்கு முன் பௌக்காராவில் படித்தவர் ½ சதவிகிதம் கூட இருக்கவில்லை. ஆனால், இன்று 70 சத விகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அங்கு 4,000 ஆரம்பப் பாடசாலைகள் இருக்கின்றன. முன்பு ஒன்றுகூட இல்லாத இடத்தில் இன்று, 70 செய்தித்தாள்கள் இருக்கின்றன. நூல் நிலையங்களும், கலைபயில் கழகங்களும், சிங்காரத் தோட்டங்களும், நாடகக் கொட்டகைகளும், விளையாட்டு மைதானங்களும் அழகுபெற அமைந்திருக்கின்றன. பருத்தி உற்பத்தியிலும் நல்ல முன்னேற்றம். 20,000 ஏகராவில்தான் முன்பு பருத்திச் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால், இன்றோ, ஒரு லட்சம் ஏகராவில் பருத்தி விளைகிறது. உஸ்பெக்கிஸ்தான் என்ற பகுதியிலும்கூட நீண்ட காலத் திட்டப்படி 1950-ம் வருஷத்தில் 1,60,000 ஏகராவில் பருத்தி பயிர் செய்ய ஏற்பாடாகியுள்ளது. காசாஸ்தான் முதலிய பல நாடுகளிலும் இம்மாதிரியே வளர்ச்சிக்கான பல திட்டங்கள் வகுக்கப்பெற்றுள்ளன. கற்கால மனிதர்கள் உபயோகித்து வந்த மரக் கலப்பைகளுக்குப் பதிலாக, பல புதிய விவசாயக் கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன. படிக்கத் தெரியாதவர்கள் அனைவரும் இப்பொழுது எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டுள்ளனர். அங்கு 22 உயர்தரக் கலாசாலைகளும், 87 தொழிற் பயிற்சிக் கல்லூரிகளும், ஒரு சர்வகலாசாலையும் இருக்கின்றன.

பொருளாதாரத் துறையில் முன்னேற்ற மடைந்துள்ளதோடு மட்டும் நில்லாமல், சமூகத்திலும் மாபெரும் மாறுதல்கள் நிகழ்ந்தன. வீடு வாசல், நிலபுலம் ஒன்று மில்லாமல், புல் தரைகள் உள்ள இடங்களைத் தேடி அலைந்து வந்தவர்கள், இன்று ஸ்திரமாக ஓர் இடத்தில் இன்பமான குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆடு மேயும் நிலங்களாக இருந்த இடங்களில் இப்பொழுது, கலை அரங்குகளும், மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் இடம் பெற்றிருக்கின்றன. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' இயற்கை நியதி யல்லவா?

ரஷ்யர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பரப்பப் பல வழிகளில் முயலுகின்றனர். ரஷ்ய நாட்டு எல்லைப்புறங்களில் வசிக்கின்ற மக்கள் மூலமாக அண்டை நாடுகளும் ரஷ்யாவைப்பற்றி அறியும்படி செய்கின்றனர். விளம்பர இலாகாக்களின் மூலம் ரஷ்ய ஆட்சியின் மேம்பாட்டை எடுத்துரைக்கின்றனர். 1946-ம் வருஷம் சோவியத் முஸ்லிம்கள் மகாநாடு ஒன்று கூடிற்று. மகாநாடு முடிந்ததும் வந்திருந்த அராபியப் பிரதிநிதிகள், ரஷ்யா முழுவதும் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சோவியத் ரஷ்யாவிடம் நட்புக் கொண்ட சில நாடுகளின் ராஜப்பிரதிநிதிகளும், அந்த நாட்டில் ரஷ்யாவின் பெருமையைப் பாராட்டிப் பேசுகின்றனர். மேலும், ஆங்காங்கே பொதுவுடைமைக் கட்சிகளும், சோவியத் நண்பர்கள் சங்கமும் மக்கள் நலம் பெற்று வாழ வேண்டுவன செய்கின்றன. மற்ற நாடுகளின் அரசியல் அமைப்பு மக்கள் விரும்புவதாக இருக்க வேண்டுமாயின், அதை ரஷ்ய முறைப்படி தான் அமைக்க வேண்டும் என்றும் பிரசாரம் செய்கிறார்கள்.

இஸ்லாமிய மதம் அழிக்கப்பட்டுவிடாமலேயே மற்றத் துறைகளில் முன்னேற்றமடைந்திருப்பது போற்றத் தக்கது. இந்த முன்னேற்றம்தான் ரஷ்ய நாட்டின் செல்வாக்கைத் திக்கெட்டும் பரப்பப் பயன்படுகிறது.

*

'வழி' இருக்கிறது

ஒரு கிராமத்துப் பையன் ஒரு நாள் அழுதுகொண்டே தன் தாயாரிடம் ஓடி வந்தான். "அம்மா! பக்கத்து வீட்டுப் பையன்களெல்லாம் என்னை விட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போய்விட்டார்கள்...நான் தனியாக ஐந்து மைல் நடக்க வேண்டும்!" என்று கூறினான் அந்தச் சிறுவன்.

பையனின் கண்ணீரைத் துடைத்தவாறு தாயார் சொன்னாள்: "அட, அசட்டுப் பிள்ளையே! அவர்கள் முன்னாடிப் போய்விட்டார்கள் என்பது வாஸ்தவம்தான். ஆனால், போகும்போது அவர்கள் சாலையையும் தங்களுடன் எடுத்துக்கொண்டு போய்விடவில்லையே?"

—லூயி ஃபின்க்

சரியான பதில்

சார்ல்ஸ் ஃபாக்ஸ் என்ற ஆங்கிலேயர் ஒரு வியாபாரியைப் பார்த்துத் தனக்கு வாக்களிக்கும்படி கேட்டதற்கு, வியாபாரி, "நான் உங்களுடைய திறமையைப் போற்றுகிறேன்; ஆனால், உங்களுடைய கொள்கைகளைக் கண்டிக்கிறேன்" என்றான்.

அதற்கு ஃபாக்ஸ், "நான் உங்களுடைய கபடமற்ற தன்மையைப் புகழ்கிறேன்; ஆனால், விநயமாகப் பழகத் தெரியாததைக் கண்டிக்கிறேன்" என்று காரமாகப் பதிலளித்தார்.

—ஏஷியாடிக் டைஜெஸ்ட்

அருமையான பற்கள் !



உங்கள் பற்கள் எத்தனை நாட்கள் புன்னகையை அழகுபடுத்தும்?

ஒருவர் உள்ளத்தைக் கவர உங்கள் வசீகரப் புன்னகை மிகவும் எளிதானவழி என்பதை அறிவீர்களல்லவா. ஆகையால், உங்கள் பற்களை ஈறுவியாதிகள் பாழ்படுத்தாமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள். தினமும் தவறுமல் சுகமளிக்கும் எஸ். ஆர். டூத்பேஸ்டி★னால் பற்களை சுத்தம் செய்தால் அவை உறுதியான ஈறுகளில் அப்பழுக்கற்று வெண்மையுடன் விளங்குகின்றன.

★பல் வைத்தியர்கள் ஈறுவியாதிகளுக்கு கைகண்ட மருந்தெனக் கருதும் ஸோடியம் ரிஸினோலியேட் சேர்ந்தது.

GSR. 26-50 TM

D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

எந்த மாடல் தேவை (நெ. 1 முதல் 4) ஒரே விலைதான்

3 வருட உத்தரவாதம்   குறைந்த ஸ்டாக் உள்ளது



நவீன மோஸ்தர் — படத்தைவிட மிக அழகானவை. ஜுவல்கள் பதித்த வலுவான ஸ்விஸ் லீவர் யந்திரம் பொருத்தப்பட்டது. க்ரோம் அண்டு 10ஞூ ரோல்ட் கோல்ட் கேஸ்களில் கிடைக்கும். க்ரோம் ரூ. 42. உயர்தரம் ரூ. 46 அண்டு ரோல்ட் கோல்ட் ரூ. 62. சிறந்த 15 ஜுவல் க்ரோம் ரூ. 68. உயர் ரகம் ரூ. 80. ரோல்ட் கோல்ட் ரூ. 88. உயர் ரகம் ரூ. 96. நெ. 5 லேடி சைஸ் க்ரோம் ரூ. 55 அண்டு ரோல்ட் கோல்ட் ரூ. 70. 15 ஜுவல் க்ரோம் ரூ. 95. ரோல்ட் கோல்ட் ரூ. 110. தபால் செலவு இலவசம்.

மலிவான விலைகளில் பவுண்டன் பேனுக்கள்



பல்வேறு கலர் டிசைன்களில், தேயாத தங்கம், 14 காரட் தங்க நிப்புகள் பொருத்தப்பட்ட சமீபத்தில் வந்த சரக்குகள் கிடைக்கின்றன. யுனைடட் ஸ்டேட்ஸ் ஆப் ஆமெரிக்காவில் செய்யப்பட்டது. திருப்திகரமான உத்தரவாதம். விலைகள்:—தங்க கில்டு நிப்புடன் ரூ. 5/8, மீடியம் ரூ. 6/8, உயர்தரம் ரூ. 7/12/- 14 காரட் முழுத் தங்க நிப் ரூ. 8/8/- மீடியம் ரூ. 10/- உயர்தரம் ரூ. 13/8/- தபால் செலவு ரூ. 0/12/- ஒரே சமயத்தில் ஆறு அல்லது அதற்கு மேல்பட்ட பேனுக்கள் வாங்குபவர்களுக்கு 12½% கமிஷன் கொடுக்கப்படும். தபால் செலவு தனி. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

YOUNG INDIA WATCH Co., POST BOX 6744, CALCUTTA. (S/T).

சக்தி • மாத வெளியீடு

தனிப் பிரதி 'தபால்'	0	8	ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0	2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0	9	ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0	2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0	10	ஆறு மாதம்	4	8
ஒரு வருஷம்	8	0	2 வருஷம்	15	0

SHAKTI KARYALAYAM :: MADRAS—14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

ஒரு கதை

மாக்ஸிம் கார்க்கி

தாய்மார்களைப் பற்றி அநேகக் கதைகள் சொல்லலாம்.

எதிரியின் கவசப் படைகள் அந்த நகரத்தைச் சுற்றிலும் பல வாரங்களாகக் கடுமையாக வளைத்து முற்றுகை யிட்டுக் கொண்டிருந்தன. இரவிலே நெருப்பு மூட்டப்பட்டது. தீயைக் கக்கும் ஜ்வாலைகள், நகரத்தின் சுவர்களை மூடியிருந்த மை போன்ற இருட்டிலே பல்லாயிரக் கணக்கான செந் நிறக் கண்களைப் போலக் காட்சி அளித்தன. அந்த ஜ்வாலைகள் நகரத்தையே பஸ்மீகர மாக்கிவிடுவதைப் போலச் சுடர்விட்டுப் பளீர் பளீரென்று பிரகாசமாக எரிந்தன. எச்சரிக்கை தரும் இந்தச் சுடரொளி, முற்றுகைக் குள்ளாகி இருக்கும் நகரத்தில் பயங்கரமான நினைவுகளைக் கிளப்பிவிட்டது.

எதிரியின் முற்றுகை வளையம் மேலும் மேலும் நெருங்கிக் கடுமை யாகிக்கொண்டே வருவதைச் சுவரின்மேல் இருந்து நின்று அவர்கள் பார்த்தார்கள்; இருண்ட நிழல்கள் நெருப்பைச் சுற்றிலும் வட்டமிடுவதைக் கண்டார்கள்; ஓய்வெடுத்துக்கொண்டிருந்த குதிரைகள் மனத்திருப்தியோடு கனைப்பதையும், ஆயுதங்கள் கணீர் கணீரென்று ஒலிப்பதையும், வெற்றி கிடைப்பது நிச்சயம் என்ற உறுதியில் எதிரிகள் குதூகலமாகப் பாடுவதையும், பலமாகச் சிரிப்பதையும் கேட்டார்கள். எதிரியின் சிரிப்பையும், பாட்டையும் கேட்பதை விட மனத்தைத் துன்புறுத்தக் கூடியது வேறு என்ன இருக்க முடியும்?

நகரத்திற்குத் தண்ணீர் தந்த எல்லா நதிகளிலும் எதிரி பிணங்களைப் போட்டு நிரப்பிவிட்டான்; நகரச் சுவரைச் சுற்றிலும் இருந்த திராட்சைக் கொடிகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டான்; தோட்டங்களை வெட்டி வீழ்த்திவிட்டான். நகரம் நாலா புறத்திலும் கோரக் காட்சி யளித்தது. எதிரியின் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் அநேகமாக ஒவ்வொரு நாளும் நகரத்தின்மேல் ஈயத்தையும், எஃகையும் மழைபோலப் பொழிந்தன.

யுத்தத்தில் தளர்ச்சி யடைந்தும், பாதிப் பட்டினியாயும் இருந்த துருப்புக்களின் படைப் பிரிவுகள் நகரத்தின் தெருக்களிலே வாடி வதங்கிய தோற்றத்தோடு அணிவகுத்துச் சென்றன. காயமடைந்தவர்களின் புலம்பல்களும், பிதற்றுகிறவர்களின் கூச்சல்களும், ஸ்திரீகளின் பிரார்த்தனைகளும், குழந்தைகளின் அழுகுரல்களும் வீடுகளின் ஜன்னல்கள் வழியாக வெளியே கேட்டன. கொஞ்சங்கூட உணர்ச்சியே இல்லாத குரலில் ஜனங்கள் சம்பாஷித்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போதே, எதையோ பார்த்து ஜாக்கிரதையடைந்துவிட்டதைப் போல, பேச்சின் மத்தியில் திடீரென்று

நாட்டுப் பற்றும், பெற்ற மகனின் மேலுள்ள பாசமும் அவளை ஆட்டி அலைக்கழிக்கின்றன. இரண்டுக்கும் நடுவான ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறாள் அவள். உணர்ச்சிப் பின்னல்களினூடே நடனமிட்டுச் செல்லும் இக் கதையை மொழிபெயர்த்தவர் ஸ்ரீ ராமதாஸ்.

கிறுத்திவிடுவார்கள்; அதோ முன்னேறி வருவது எதிரி யல்லவா?

இரவிலே, அமைதியான நேரத்தில் புலம்பல்களும், கூச்சல்களும், மிகத் தெளிவாகக் காதுகளில் விழும்போதும், தூரத்திலே இருந்த மலைகளின் குறுகிய இடைவெளிகளிலிருந்து இருண்ட நிழல்கள் எதிரியின் முகாமைக் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவிட்டு, பாதி நாசமடைந்த அந்த நகரத்தை நோக்கி மெதுவாக, சப்தமில்லாமல் ஊர்ந்து வந்தபோதும், மலை முகட்டுகளின் மேல் வாளினால் தாக்கப்பட்டு ஒளியாகச் சிதைந்துபோன கேடயத்தைப் போல் சந்திரன் வெளித் தோன்றியபோதும், வாழ்க்கை அந்த இராக்காலத்திலே விவரிக்க இயலாத அளவுக்குச் சகிக்கொணாததாக ஆகிவிட்டது.

களைப்பாலும், பட்டினியாலும் சோர்வுற்றுப் போய், எந்த உதவியையும் எதிர்பார்க்க முடியாத நிலையில், இந்தக் கஷ்டத்திலிருந்து மீளலாம் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போகிற நிலைமையில், அந்தச் சந்திரனையும், கூர்மையான பற்களைப் போல இருந்த மலை முகட்டுகளையும் கொடிய மிருகத்தின் இரைபோலக் காட்சியளித்த குறுகிய இடைவெளிகளையும், குதூகல சப்தம் குடிகொண்டிருந்த எதிரியின் முகாமையும் அவர்கள் பீதியுடனே வெறித்துப் பார்த்தார்கள். அவைகள் ஒவ்வொன்றும் அவர்களுக்கு மரணத்தையே நினைவுறுத்தியது. அவர்களுக்குத் தேறுதல் அளிக்கும் முறையில் ஒரு நட்சத்திரம்கூடப் பிரகாசிக்கவில்லை.

வீடுகளில் விளக்கேற்றி வைக்கப் பயப்பட்டார்கள். அதனால் தெருக்களிலே கடும் இருட்டுச் சூழ்ந்திருந்தது. இந்த இருட்டில், நதியின் ஆழத்தில் நீந்திச் செல்லும் மீனைப் போல, தலையிலிருந்து கால்வரை முக்காடிட்ட ஒரு ஸ்திரீ சப்தமில்லாமல் நடந்து சென்றாள்.

அவளைப் பார்த்ததும் ஜனங்கள் தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் காதோடு காதாய்க் குசுகுசுவென்று பேசிக்கொண்டார்கள்.

"அவள்தானா?"

"ஆமாம், அவளேதான்!"

அவளைக் கண்டதும் அவர்கள் கமான் வளைவுகளின் மூலைகளுக்கு ஓடிச் சென்று ஒதுங்கி நின்றுகொள்வார்கள்; அல்லது தலையைக் குனிந்துகொண்டு வேகமாக நடந்துபோய்விடுவார்கள். ரோந்து அதிகாரிகள் அவளை எச்சரித்தார்கள்.

"டோன்னா மாரியன்னா, நீ மறுபடியும் தெருக்களிலே நடமாடுகிறாயாமே? ஜாக்கிரதை! யாராவது உன்னைக் கொன்றுவிடுவார்கள். உன்னைக் கொன்றது யார் என்று எவருமே தேடமாட்டார்கள்......"

அவள் நிமிர்ந்து பார்த்தாள்; அங்கேயே நின்றாள். ஆனால், ரோந்துக்காரர்கள் அவள் மீது தங்கள் கையை ஓங்கி அடிப்பதற்குத் தைரியமில்லாததாலோ, அல்லது புறக்கணித்துவிட்டோ அவளைக் கடந்து சென்றார்கள். ஆயுதம் தரித்திருந்த அந்த மனிதர்கள் அவளை ஒரு பிணம் என்று மதித்து ஒதுக்கிவிட்டு, இருட்டிலே தனியாக விட்டுச் சென்றார்கள். நகரத்தின் துரதிருஷ்டமே உருவெடுத்தது போல

அவள் சப்த மில்லாமல் ஒரே இருட்டாக இருந்த தெருக்களில் தொடர்ந்தாற்போல் விடாமல் சுற்றித் திரிந்தாள். அதே சமயத்தில் இரவிலே அவளுடைய காதுகளில் பல சப்தங்கள் விழுந்தன. புலம்பல்கள், கூச்சல்கள், பிரார்த்தனைகள், வெற்றி பெறும் நம்பிக்கையை இழந்து விட்ட சோல்ஜர்களின் ோசாகம் நிறைந்த முணுமுணுப்புகள் எல்லாம் ஒலித்தன.

அவள் அந்த நகரத்தின் பிரஜை; அவள் ஒரு தாய்; தன் மகனையும், தன் தேசத்தையும் நினைத்தாள். அந்த நகரத்தை அழித்துக்கொண் டிருந்தவர்களுக்குத் தலைவனா யிருந்தவன் அவள் மகன்; இளமை அழகு மிக்கவன்; உல்லாச வாசி; இரக்க மற்ற கல் நெஞ்சன். அவள் தான் பிறந்த, தன் மகனுக்கும் பிறப்பளித்துப் போஷித்து வளர்த்த அந்த நகர மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே தான் பெற்றுக்கொடுத்த விலை மதிக்க முடியாத பொக்கிஷமாக—நன்மை தரும் சக்தியாக—அவனைச் சமீப காலம் வரை கருதினாள். தன் முன்னோர்கள் தங்கள் வீடுகளைக் கட்டி, அந்த நகரத்தின் சுவர்களை எழுப்பிக் கட்டி முடித்த இதோ இந்தக் கற்கள், தன்னுடைய சுற்றத்தார்கள் புதைந்து இருக்கிற இந்த மண், மக்களின் இதிகாசங்கள், பாடல்கள், நம்பிக்கைகள் ஆகிய எல்லாம் பிரிக்கப்பட முடியாத நூற்றுக்கணக்கான பந்தங்களாக அவளுடைய இருதயத்தைச் சுற்றிலும் பிணைந்து கிடந்தன. இப்பொழுதோ, இந்த இருதயம் தன் உயிருக்குயிராய் நேசித்த ஒன்றை இழந்து, பரிதபித்து அழுதது. தன் மகன் மீதுள்ள பிரியமும், தன் சொந்த நகரத்தின் மீதுள்ள பற்றுதலும் அவளுடைய இருதயத்தில் ஒரே அளவில்தான் இருந்தன; ஆனால், எது அதிகம் என்று அவளால் சொல்ல முடியவில்லை.

அதனால்தான் அவள் இந்த மாதிரி, தெருத் தெருவாகச் சுற்றி அலைந்து வந்தாள். அநேகர் அவளைத் தெரிந்துகொள்ளாமல், அவளுடைய இருண்ட உருவத்தைக் கண்டதும் தங்கள் எல்லோருக்கும் வெகு அருகில் இருந்த மரணத்தின் தோற்றமோ என்று பயந்து, பின் தங்கி ஒதுங்கினார்கள். அது யார் என்று தெரிந்ததும் துரோகியின் தாயாருக்கு அருகில் நிற்காமல் நிசப்தமாக அப்பால் திரும்பிச் சென்று விடுவார்கள்.

ஆனால், நகரச் சுவரின் தொலைவான மூலையில், ஒரு நாள், மண்ணாங்கட்டி போலக் கீழே கிடந்த ஒரு பிணத்தின் பக்கத்தில் மண்டியிட்டு, சோகஞ் சூழ்ந்த தன் முகத்தை நட்சத்திரங்களை நோக்கி வைத்துக் கொண்டு பிரார்த்தனை செய்து கொண்டிருந்த மற்றொரு ஸ்திரீயை அவள் பார்த்தாள். தலைக்கு மேலே உயரமான சுவரின் மேல் இருந்த காவலாளிகள் மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்; அவர்களுடைய ஆயுதங்கள் அணைச் சுவர்களில் மோதிச் சப்தம் செய்தன.

துரோகியின் தாய் கேட்டாள்:

"உன் கணவரா?"

"இல்லை."

"உன் சகோதரனா?"

"என் மகன். பதின்மூன்று நாட்களுக்கு முன்பு என் கண

வர் கொல்லப்பட்டார். இன்றைக்கு என் மகன்.''

கொல்லப்பட்டவனுடைய தாய் எழுந்து நின்று அடக்கமாகச் சொன்னாள் :

"மடோன்னா எல்லாவற்றையும் பார்க்கிறாள். எல்லாம் அவளுக்குத் தெரியும். நான் அவளுக்கு ரொம்பவும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்!''

"எதற்காக?" என்று முதலாமவள் கேட்டாள். மற்றவள் பதில் சொன்னாள் :

"அவன் இப்போது தன் தேசத்திற்காக வீரச் சமர் புரிந்து கௌரவமாக உயிர் விட்டான் என்று நான் பெருமையாகச் சொல்ல முடியும். நான் இதற்கு முன் அவனைப் பற்றிப் பயப்பட்டேன். அவன் சிந்தையற்றவன்; உல்லாச வாழ்க்கை நடத்த வேண்டும் என்று மிக ஆவலோடு இருந்தவன். கடவுளுக்கும் மனிதனுக்கும் விரோதியானவனும், எதிரிகளின் தலைவனுமான மாரியன்னாவின் மகன் செய்ததைப் போலவே இவனும் தன் நகரத்தைக் காட்டிக்கொடுத்துவிடுவானோ என்று பயப்பட்டேன். எதிரியும் அவனைப் பெற்ற வயிறும் உலக நிந்தனைக்கு ஆளாகட்டும்!''

மாரியன்னா தன் முகத்தை மூடிக்கொண்டு தன் வழியே சென்றாள். மறுநாள் காலை நகர வாசலைக் காத்துக்கொண்டிருந்தவர்களின் முன்பாகத் தோன்றிச் சொன்னாள் :

"என் மகன் உங்களுடைய எதிரியாகிவிட்டான். நீங்கள் என்னைக் கொல்லுங்கள். அல்லது நான் அவனிடம் செல்வதற்குக் கதவுகளைத் திறந்து வழி விடுங்கள்."

அவர்கள் பதில் கூறினார்கள் :
"நீயும் மனிதப் பிறவிதான்; உன் தேசம் உனக்கு விலை மதிக்க முடியாத பொக்கிஷமாகத்தான் இருக்க வேண்டும். உன் மகன் எங்கள் ஒவ்வொருவருக்கும் எப்படி எதிரியோ அப்படித்தானே உனக்கும்?''

"நான் ஒரு தாய். நான் அவனை நேசிக்கிறேன். அவன் இப்படி ஆகிவிட்டதற்கு நான்தான் குற்றவாளி என்று எனக்குப் படுகிறது.''

பிறகு அவர்கள் தங்களுக்குள்ளே ஆலோசனை செய்து ஒரு முடிவு செய்தனர்.

"உன் மகன் செய்த பாபங்களுக்கு உன்னைக் கொல்வது கௌரவமல்ல. இந்தப் பயங்கரச் செயலைச் செய்யும்படி அவனை நீ தூண்டியிருக்கமாட்டாய் என்று எங்களுக்குத் தெரியும். நீயும் கஷ்டப்படுகிறாய் என்று நாங்கள் நம்புகிறோம். நீ ஒரு பிணையாளாக இங்கே இருக்க வேண்டும் என்று இந்த நகரம் கேட்கவில்லை. உன் மகன் உன்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. அந்தப் பிசாசு உன்னை மறந்துவிட்டது என்றே நாங்கள் நினைக்கிறோம். நீ நினைக்கிறபடி என்ன தண்டனை அடைய வேண்டுமோ அதை நீ அடைந்திருக்கிறாய். இது மரணத்தையும் விட மிகக் கொடியது என்று நாங்கள் நம்புகிறோம்!''

ஆகவே, அவர்கள் கதவைத் திறந்துவிட்டார்கள். நகரத்தை விட்டுச் செல்லுவதற்கு வழி விட்டார்கள். இப்போது அவள் தன் மகன் சிந்திய ரத்தத்தால் நனைந்து ஊறிப்போன தன்

சொந்த பூமியில் காலைப் பலமாக ஊன்றி அடியெடுத்து வைத்துச் செல்வதை அவர்கள் சுவர்களின் மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த மண்ணிலிருந்து அறவே பிரிந்து போவதற்கு அவளுடைய கால்களுக்கு மனமில்லாததால் மிக மெதுவாகவே நடந்து சென்றாள். நகரத்தைக் காத்து நின்று, அதில் உயிரையே விட்ட தியாகிகளின் சவங்களைப் பார்த்ததும் தலை வணங்கினாள். உடைந்த ஆயுதம் ஒன்று காலை இடறவே காலடியைப் பின்னெடுத்து வைத்தாள். பிறரை அடக்குகிற எல்லா ஆயுதங்களும் தாய்மார்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணக் கூடியவை; அவர்கள் உயிரைக் காப்பாற்ற உபயோகமான ஆயுதங்களுக்கே அங்கீகாரம் அளிப்பார்கள்.

தான் போர்த்து இருந்த போர்வைக்குள்ளே விலை மதிக்க முடியாத ஒரு சிறு குடுக்கை நிறையத் தண்ணீர் கொண்டு போவதைப் போலவும், அதிலிருந்து ஒரு சொட்டுக்கூடத் தெறித்துவிடக் கூடாது என்று பயப்படுவதைப் போலவும் அவள் நடந்து சென்றாள். தன் வழியிலே செல்லச் செல்ல அவளுடைய உருவம் சுவரின்மேல் இருந்தவர்களுக்குச் சிறிது சிறிதாகிக்கொண்டே வந்தது. அவர்களுக்கு இருந்த சோர்வும், அவநம்பிக்கையும் அவளோடு சேர்ந்து போய்விட்டதைப் போல இருந்தது.

அவள் பாதி வழியில் நின்று தன் போர்வையின் முக்காட்டை விலக்கி, தன்னுடைய நகரத்தை வெகு தூரத்தில் இருந்து காண்பதை அவர்கள் பார்த்தார்கள். போர்க்களத்தில் எதிரியின் முகாமிலே அவள் தனியாக இருப்பதையும், அவளைப் போலவே இருந்த இருண்ட உருவங்கள் ஜாக்கிரதையாக அவளை அணுகி வருவதையும் கண்டார்கள். அவளை அணுகி அவள் யார், எங்கிருந்து வருகிறாள் என்று கேட்டன அந்த உருவங்கள்.

"உங்கள் தலைவன் என் மகன்" என்று அவள் சொன்னாள். சோல்ஜர்களில் எவனுமே சந்தேகம் கொள்ளவில்லை. அவர்கள் உடனே அவளுக்கு இரண்டு பக்கத்திலும் பிரிந்து நின்று அவனுடைய பெருமைகளைப் பாடிக்கொண்டும், அவன் எவ்வளவு திறமைசாலி, எவ்வளவு கெட்டிக்காரன் என்றெல்லாம் சொல்லிக்கொண்டும் வந்தார்கள். அவளோ, தன் மகன் இப்படிப்பட்ட உயர்ந்த நிலைமை தவிர வேறு எந்த நிலைமையிலும் இருக்கமாட்டான் என்ற பாவத்தில், ஆச்சரியம் காட்டிக்கொள்ளாமல் பெருமையோடு தலையை நிமிர்த்தி அவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டு வந்தாள்.

இதோ, கடைசியாக இப்போது, அவள் அவன் பிறப்பதற்கு ஒன்பது மாசங்களுக்கு முன்பே தான் தெரிந்துகொண்ட மனிதனுக்கு முன்பாக நின்றாள். தன் இருதயத்தைத் தவிர வேறல்ல என்று எப்போதுமே அவள் கருதிவந்த அவனுக்கு முன்பாக நின்றாள். அவன் பட்டுப் பீதாம்பர ஆடையணிந்து, விலையுயர்ந்த மாணிக்கக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட ஆயுதங்கள் தரித்து அவள் முன்பாக நின்றான். செல்வந்தனாகவும், கீர்த்திவானாகவும், புகழ் மிக்கவனாகவும் அவனை அநேகத் தடவைகள்

தன் கனவிலே கண்டிருந்ததைப் போலவே அவன் இருந்தான்.

"அம்மா!" என்றான் அவளுடைய கரங்களை முத்தமிட்டுக் கொண்டே. "நீங்கள் என்னிடம் வந்துவிட்டீர்கள்; என்னை அறிந்துகொண்டுவிட்டீர்கள்; நாளையே வெறுக்கத்தக்க அந்த நகரத்தைக் கைப்பற்றுவேன்!"

"நீ பிறந்த நகரம்" என்று அவனுக்கு ஞாபக மூட்டினாள்.

தன் வீர வெறி தலைக்கேறி, தான் மேலும் கீர்த்திபெற வேண்டும் என்ற ஆவலில் மதி மயங்கியவனாய்க் கர்வமிக்க இளங்கொதிப்போடு அவளுக்குப் பதில் அளித்தான் அவன்.

"நான் உலகத்திலே பிறந்தேன்; உலகத்திற்காகப் பிறந்தேன். உலகையே கிடுகிடுக்கச் செய்வேன்! உன் பொருட்டு இந்த நகரத்தை அழிக்காமல் விட்டு வைத்தேன். அது என் காலடியில் என் பாதத்தைக் குத்திக்கொண்டிருந்த முள்ளாக இருந்தது. விரைவாக நான் கீர்த்தியின் சிகரத்தை அடைவதைத் தடுத்து வந்தது. ஆனால், இப்போது, நாளையே, சரணடையாத முட்டாள்கள் நிறைந்த இந்த நகரத்தை நிர்மூலமாக்குவேன்!"

"அங்கே ஒவ்வொரு கல்லும் உன்னைச் சிறு குழந்தை முதலே அறியும்; ஞாபகத்திலும் வைத்திருக்கிறதே!" என்று சொன்னாள் அவள்.

"மனிதன் அவைகளைப் பேசும்படி செய்கிறவரை அந்தக் கற்கள் ஊமைகளே. மலைகள் என்னைப் பற்றி பேசட்டும்; நான் விரும்புவது அதுதான்!"

"மனிதர்கள்?" என்று கேட்டாள்.

"ஆம், ஆம்; நான் அவர்களை மறக்கவில்லை, அம்மா! அவர்கள் எனக்கு மிகவும் தேவை. ஏனெனில், மனிதர்களின் ஞாபகத்தில்தான் வீரர்கள் எல்லோரும் சிரஞ்சீவிகள்!"

அவள் கூறினாள்:

"மரணத்தையும் லட்சியஞ் செய்யாமல் வாழ்க்கையைச் சிருஷ்டிப்பவனே வீரன்! மரணத்தை எதிர்த்து வெல்பவனே வீரன்.........!"

"இல்லை" என்று அவன் மறுத்தான். "நகரத்தைக் கட்டுபவனைப் போல அதை அழிப்பவனும் கீர்த்தி வாய்ந்தவனே. இதோ பார், ரோம், அனீஸ், ரோமுலூஸ் நகரங்களை உண்டு பண்ணியவர்கள் யார் என்று நமக்குத் தெரியாது. ஆனால், அந்த நகரத்தை அழித்த அலாரிக்கையும், இன்னும் மற்ற வீரர்களையும் நாம் நன்றாக அறிவோம்..."

"எது சிரஞ்சீவியானது?" என்று மீண்டும் அவனுக்கு நினைவுறுத்தினாள் தாய்.

சூரியன் ஓய்வெடுத்துக் கொள்ளச் செல்கிற வரையிலும் அவர்கள் இப்படிச் சம்பாஷித்துக்கொண்டேயிருந்தார்கள். அவள் கடுமை நிறைந்த நிர்மானுஷ்யமான அவன் பேச்சுக்களில் இடைமறித்துப் பேசுவது குறைந்துகொண்டே வந்தது; பெருமையோடிருந்த அவளுடைய தலை தாழ்ந்துகொண்டே வந்தது.

தாய் சிருஷ்டி கர்த்தா; அவள் பாதுகாப்பவள்; அவளிடம் நாசத்தைப் பற்றிப் பேசுவதென்றால் அவளுக்கு விரோதமாகவே பேசுவதாகும். ஆனால், அவன் அதை அறியவில்லை;

யதார்த்தமான உண்மை நிலையை அவள் எடுத்துச் சொல்வதை நிராகரிக்கிறோம் என்பதை அவன் உணரவில்லை.

மரணத்தை எப்போதுமே எதிர்ப்பவள் தாய். மனிதர்களின் வாசஸ்தலங்களுக்கு மரணத்தைக் கொண்டு வருகிற கரம், தாய்க்கு வெறுப்பானது; பகையாளி. ஆனால், மகனோ இதை உணரவில்லை. கீர்த்தி வேண்டும் என்ற மாயத் திரை அவன் கண்களை மறைத்தது; அவன் இருதயத்தை ஜீவனற்றுப் போகச் செய்தது.

தான் சிருஷ்டித்த ஜீவனே அநாவசியம் என்று வந்துவிட்ட பிறகு, ஒரு தாய் மிருகத்தைப் போலவே தந்திரமாகவும் ஈவிரக்க மற்றும் இருப்பாள் என்பதையும் அவன் அறியவில்லை.

தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள். இப்போது அந்த நகரத்தையே அழிக்க முற்பட்டுவிட்ட இந்தக் குழந்தையின் ஜனனத்தின்போது, அவள் முதல் முதலாகப் பதற்றத்தோடு இன்பக் கணவுகளையும், வேதனையையும், வலியையும் அநுபவித்தது அந்த நகரத்தில்தான்; மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திற்குள் இருந்தபடியே அதன் வாசற்புறமாக அந்த நகரத்தைப் பார்த்தாள் அவள்.

சூரியனின் செந்நிறக் கிரணங்கள் நகரத்தின் சுவர்களையும், உச்சிக் கோபுரங்களையும் ரத்தச் சிவப்பாகக் காட்சியளிக்கச் செய்தன; ஜன்னல்களில் பட்ட அந்தக் கிரணங்களின் ஒளி, நகரம் முழுவதையுமே புண்கள் நிரம்பியதாகக் காட்சி யளிக்கும்படி செய்தது; ஒவ்வொரு வெட்டுக் காயத்திலிருந்தும் பிராணனின் செங்குருதி வெளியே ஓடுவதைப் போல் பிரகாசித்தது. பிணத்தைப் போல் கறுப்பாக மாற ஆரம்பித்தது அந்த நகரம். மரண தீபத்தைப் போல அந்த நகரத்தின் மேல் தோன்றிப் பிரகாசித்தன நட்சத்திரங்கள். எதிரியின் கவனத்தைகவராமல் இருப்பதற்காக ஜனங்கள் விளக்கேற்றி வைப்பதிற்குப் பயப்பட்டுக்கொண்டிருந்த இருண்ட வீடுகள், இருள் கவிந்திருந்த தெருக்கள், மூக்கைத் துளைக்கும் பிண நாற்றம், மரணத்தை நோக்கிக் காத்திருந்த மக்களின் மிக மெதுவான முனகல்கள்—எல்லாவற்றையும் அவள் பார்த்தாள்; காதால் கேட்டாள்; பழக்கமானதும், உயிருக்குயிரானதுமான அந்த நகரம் அவள் முன் தோன்றி எழுந்தது; தன் முடிவை மௌனமாக எதிர்பார்ப்பதுபோல் நின்றது. தன் நகரத்தில் இருந்த எல்லா மக்களுக்கும் தான் தாய் என்று அவள் கருதினாள். அந்த உணர்ச்சி அதிகரித்தது.

மேகங்கள் மலைகளின் கருநிற உச்சியி லிருந்து இறங்கி வந்து, இறக்கை முளைத்த குதிரையைப் போலப் பறந்து சென்று நாசமடைந்திருந்த நகரத்தை அரவணைத்துக்கொண்டன.

"போதுமான இருட்டு இருந்தால் ஒருவேளை இன்றிரவே அந்த நகரத்தைத் தாக்குவோம்! ஏனெனில், சூரியன் நம் கண்களுக் கெதிரே பிரகாசிக்கும் போது, கொல்வது கடினம்; ஆயுதங்களின் பளபளப்பு நம் கண்களைக் குருடாக்கி அநேகத் தடவைகள் நமது தாக்குதல் தப்பிப் போகிறது" என்று தன் வாளைச் சோதித்துக்கொண்டே அவன் சொன்னான்.

தாய் அவனிடம் கூறினுள் :

"மகனே இங்கு வா! என் மார்பின்மீது உன் தலையை வைத்து அமைதிகொள். நீ குழந்தையாக இருக்கும்போது எவ்வளவு சந்தோஷமாகவும், அன்பாகவும் இருந்தாய்! ஒவ்வொருவரும் எவ்வளவு அன்போடு உன்னை நேசித்தார்கள்!''

அவள் சொன்னபடியே செய்தான்; தன் தலையை அவளுடைய மார்பில் வைத்துக் கண்களை மூடிக்கொண்டே சொன்னுன்:

"நான் கீர்த்தியையும்,என்னைப் பெற்ற உன்னையும் மட்டுமே நேசிக்கிறேன்.''

"பெண்களை?'' அவன் மீது சாய்ந்துகொண்டே கேட்டாள்.

"அவர்கள் அநேகர். எல்லாம் இனிப்பாய் இருந்தால் எப்படிச் சலிப்பு ஏற்படுமோ அதைப் போலவே அவர்களும்.''

"உனக்குக் குழந்தைகள் பிறக்க நீ விரும்பவில்லையா?'' என்று கடைசி முறையாகக் கேட்டாள்.

"எதற்கு? கொல்லப்படுவதற்கா? என்னைப் போல் வேறெவராவது அவர்களைக் கொன்றுவிடலாம்; அது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கும். அப்போது அதற்குள் நான் கிழவனுகிவிடுவேன்; பழி தீர்ப்பதற்குச் சக்தியற்றவனுகிவிடுவேன்.''

"நீ எவ்வளவு அழகானவன்! ஆனுல், மின்னொளியைப் போல் வீணுக இருக்கிருய்'' என்று மிக வருத்தத்தோடு பெருமூச்சு விட்டுச் சொன்னுள்.

"ஆம், மின்னலைப் போல்தான்...'' என்று அவன் சிரித்துக் கொண்டே சொன்னுன்.

சிறு குழந்தையைப் போல் தாயாரின் மார்பில் உறங்கினுன்.

அவள், தன் கறுப்புப் போர்வையினுல் அவனை மூடிவிட்டு, கத்தியை எடுத்து அவனுடைய நெஞ்சில் ஆழமாகச் செலுத்தினுள். தன் மகனுடைய இதயம் எங்கே துடிக்கிறது என்பதைத் தாயைக் காட்டிலும் வேறு யாருக்குத்தான் நன்ருகத் தெரியும்! அவன் உடல் குலுங்கியது; அவன் இறந்து போனுன். ஆச்சரியத்தினுல் ஸ்தம்பித்து நின்ற காவலாளிகளின் காலடியில் அவன் பிணத்தைப் போட்டுவிட்டு, அந்த நகரத்தை நோக்கிக் கூறினுள் அவள்:

"ஒரு பிரஜை என்ற முறையில் நான் என் தேசத்திற்கு என்னுல் செய்ய வேண்டியதை எல்லாம் செய்துவிட்டேன். தாய் என்ற முறையில் நான் என்னுடைய மகனுடனேயே இருக்க விரும்புகிறேன்; மற்ருெரு குழந்தையைப் பெற எனக்கு வயசாகிவிட்டது. என் வாழ்க்கையினுல் இனி யாருக்குமே பிரயோஜனமில்லை.''

அவனுடைய ரத்தத்தில் தோய்ந்து, இன்னும் வெப்பமாயிருந்த அதே கத்தியைப் பலமாகப் பிடித்துத் தன்னுடைய மார்பிலே ஆழமாகச் செலுத்திக்கொண்டாள். மீண்டும் அவள் உண்மையை நிலைநிறுத்தினுள்; மகன் மீதுள்ள பாசத்தினுல் வேதனைப் பட்ட இருதயத்தைப் பார்ப்பது கஷ்டமல்லவே?

✲

சட்டம்

அநீதிக்கும் நீதிக்கும் இடைமார்க்கமாக இருப்பதுதான் சட்டம்.

—ஸ்ளாக்கோன்

எவ்விதமான
வேலைக்கும்
ஈடு கொடுக்கக்
கூடியவை

கட்டிட வேலையிலோ, சுரங்கத்திலோ ரயில் பாதைகளைச் செப்பனிடவோ, எவ்வித வேலைக்கும் சுளகுப்பாரை ஈடு கொடுக்க வேண்டும்.

பிரத்தியேகமான முறையில் உயர்ந்த இரும்பிலிருந்து உண்டு பண்ணப்பட்ட எங்கள் சுளகுப் பாரைகள் எத்தகைய கடுமையான வேலையிலும் நன்கு உழைக்கக் கூடியவை

வெஸ்ட்கோஸ்ட், வட சர்க்கார் நீங்கலாக சென்னை மாகாணத்திற்கு வினியோகஸ்தர்கள் :

மெஸர்ஸ். வி. கனகய்ய செட்டி அண்ட் கம்பெனி
105, நமினியப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. சென்னை

மெஸர்ஸ். டி. வி. மதன் அண்ட் கம்பெனி
39, சகண்ட் லேன் பீச், ஜி. டி. சென்னை

டாட்டா அக்ரிகோ
கருவிகளையே வாங்குங்கள்

தி டாட்டா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

சிலோன் ஏஜண்டுகள் : M. C. A. ஹமீதா அண்ட் கோ., 20. டாம் தெரு : : கொழும்பு

மார்க்ஸீயப் பொருளாதாரம்

ரா. ஹாலாஸ்யநாதன்

vii

தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியும் ஒரு விற்பனைப் பண்டமாகத் திகழ்கிறது. தொழிலாளர்கள் இந்தப் பண்டத்தை விற்கிறார்கள்; முதலாளிகள் வாங்குகிறார்கள். ஆனால், இந்தப் பண்டத்தின் உண்மையான மதிப்பைத் தொழிலாளர்கள் பெறவில்லை. தொழிலாளர்களின் தேவைகள் என்ன, அவர்கள் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்பன போன்ற விஷயங்களை முதலாளிகள் கவனிப்பதே கிடையாது. மேலும், எப்படிக் கூலியைக் குறைத்து, அதிக லாபத்தைத் திரட்டலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

முதலாளித்துவப் பிரசார யந்திரம் தொழிலாளர்களை முதலாளிகள் எப்படிச் சுரண்டுகிறார்கள் என்பதை அப்படியே மூடி மறைக்கிறது. "சும்மாவா வேலை வாங்குகிறோம்? கூலி கொடுக்கிறோமே!..." என்று முதலாளிகள் கூறுகிறார்கள். ஆம். கூலி கொடுக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், தொழிலாளர்களிடமிருந்து பெறும் உழைப்புச் சக்திக்குச் சமமான மதிப்புள்ள கூலி கொடுக்கப்படவில்லை என்பதை முன்பு தெரிந்துகொண்டோம்.

முதலாளித்துவ சமூகத்தில், தொழிலாளர்களுக்குப் பல்வேறு முறைகளில் கூலி கொடுக்கப்படுகிறது. வெளிப்படையாகப் பார்க்கும் பொழுது, உழைப்புக்குத் தகுந்த கூலி கொடுக்கப்படுவதாகத் தோன்றும். ஆனால், உண்மையில், முதலாளித்துவச் சுரண்டலை இவை மூடி மறைக்கின்றன.

உதாரணமாக, இவ்வளவு மணி நேரத்திற்கு, அல்லது ஒரு வாரத்திற்கு, அல்லது ஒரு மாசத்திற்கு இவ்வளவு சம்பளம் என்று கொடுக்கப்படுகிறது. இதற்கு "மணிக் கணக்குக் கூலி" என்று பெயர். சில சமயங்களில், சில இடங்களில், எவ்வளவு வேலை செய்தார்களோ அதற்குத் தகுந்தபடி கூலி கொடுக்கப்படுகிறது. அதாவது, பத்து கெஜம் துணி நெய்தால் இவ்வளவு கூலி, அல்லது இவ்வளவு டன், மண் வெட்டினால் இவ்வளவு கூலி என்று சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதற்கு "வேலைக்குத் தகுந்த கூலி" என்று பெயர்.

மணிக் கணக்குக் கூலி: ஏதேனும் ஒரு தொழிலில் தொழிலாளர்களை அதிகமாகப் பொருள்களை உற்பத்தி செய்யும்படி முதலாளிகள் நிர்ப்பந்திக்க வேண்டிய அவசியமில்லையென்றால், இந்த முறை கையாளப்படுகிறது. ஏனென்றால், ஒரு தொழிலாளி குறிப்பிட்ட நேரத்தில் எவ்வளவு பண்டங்களை உற்பத்தி செய்கிறான் என்பதிலல்ல, எவ்வளவு திறமையாகப் பண்டத்தை உற்பத்தி செய்கிறான் என்பதிலேயே முதலாளிகள் கவனம் செலுத்துகிறார்கள். மேலும், சில நவீன

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள தொடர்பை இக் கட்டுரை விவரிக்கிறது. அடுத்த இதழில் பொருளாதார நெருக்கடி எப்படி ஏற்படுகிறது என்பதைப் பற்றி எழுதப்படும்.

யந்திரங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பண்டங்களை உற்பத்தி செய்வதின் அளவு, யந்திரங்களின் வேகத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, முதலாளிகள் மணிக் கணக்குக் கூலியையே கொடுக்கிறார்கள்.

பீஸ் வேலை: அதிகமாகப் பண்டங்களை உற்பத்தி செய்யும்படி தொழிலாளர்களை நிர்ப்பந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், முதலாளிகள் இந்த முறையைப் பின்பற்றுகிறார்கள். தொழிலாளர்கள் வேலை செய்யும் பொழுது, அவர்களைக் கண்காணிப்பதற்காகப் பிரத்தியேகமாக ஒருவரையும் நியமிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இது முதலாளிகளின் செலவைக் குறைக்கிறது. அதிகமாகப் பண்டங்களை உற்பத்தி செய்து, அதிகமாகக் கூலியைப் பெற வேண்டுமென்ற எண்ணத்துடன் தொழிலாளர்கள் அதிகமாக உடலை வருத்தி உழைத்து, விரைவில் சோர்ந்து போகிறார்கள். இந்த முறை தொழிலாளர்களைக் கொடுமையாகச் சுரண்டுவதாகும். அதிகமாகக் கஷ்டப்பட்டுச சிறிது அதிகக் கூலியை வாங்கத் துவங்கினல், திரும்பவும் கூலியைக் குறைத்து விடுவார்கள் முதலாளிகள்.

மேல் பார்வைக்கு இந்த இரு முறைகளுக்கும் இடையே சம்பந்தமே இல்லாததுபோல் தோன்றலாம். ஆனல், வாஸ்தவத்தில் வித்தியாசமே கிடையாது. ஒரு வாரத்திற்கு, அல்லது 10 மணி நேரத்திற்கு இவ்வளவு சம்பளம் என்று முதலாளிகள் நிர்ணயிக்கும் பொழுது, அந்தக் காலக் கட்டத்துக்குள் எவ்வளவு பண்டங்களைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்வார்கள் என்பதைக் கணக்கிட்டு,கூலியை நிர்ணயிக்கிறார்கள். பீஸ் வேலையில் இதே முறை வேறு வடிவத்தில் தோன்றுகிறது. பீஸ் வேலை கொடுத்தால், தொழிலாளர்கள் ஒரு மணி நேரத்தில், ஒரு வாரத்தில் எவ்வளவு பண்டங்களைச் செய்து முடிக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டுக் கூலியை நிர்ணயிக்கிறார்கள். அதனலேதான், பீஸ் வேலை செய்யும் தொழிலாளர்களும் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தகுந்த ஊதியத்தைப் பெறுவதே கிடையாது.

போனஸ்: லாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுக்கிறோம் என்று கூறி, முதலாளிகள் தொழிலாளர்களுக்கு ஒரு மாசம், இரண்டு மாசம் போனஸ் கொடுக்கிறார்கள். தொழிலாளர்களின் கூலியைக் குறைத்து, அதிகமாக உழைத்து அதிகப் பண்டங்களை உற்பத்தி செய்தால் லாபத்தில் பங்கு தருகிறோம் என்று கூறி, தொழிலாளர்களை அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைக்கும்படி தூண்டுவதற்கு இந்தப் போனஸ் முறை முதலாளிகளுக்கு உதவுகிறது. இந்த முறையின் மூலமாக, தொழிலாளர்களின் உழைப்பின் வேகத்தை அதிகப்படுத்துவதோடு, வர்க்க உணர்ச்சி பெறாத தொழிலாளர்களைத் தொழிற் சங்கங்களில் சேராமலிருக்கச் சூழ்ச்சி செய்யவும் உதவுகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் ஊசி செய்தல், தையல் வேலை செய்தல் முதலிய தொழில்களில் வீட்டிலேயும் வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். நமது நாட்டில் பீடி, சுருட்டுத் தொழிலாளர்களும் இதே மாதிரியாகத்தொழிற் சாலையில் மாத்திரமின்றி, வீட்டி

லேயும் வேலை செய்கிறார்கள். அதாவது, பட்டினிப் பிணியைத் தவிர்ப்பதற்காக இரவு பகலாக வேலை செய்ய வேண்டி யிருக்கிறது. இதற்கு "ஸ்வெட்டிங் முறை" (ஸ்வெட்டிங் சிஸ்டம்) என்று பெயர்.

டேலர் என்ற ஓர் அமெரிக்க என்ஜினியர் தொழிலாளர்கள் இடைவிடாது வேலை செய்யும் முறையைக் கண்டுபிடித்தார். இதற்கு டேலர் முறை என்று பெயர். அதாவது, ஒரு தொழிலாளி வேலை செய்யு மிடத்திற்குப் பல உப கருவிகள் யந்திரங்கள் மூலமாக வந்துகொண்டே இருக்கும். ஒரு நிமிடங்கூடத் தாமதிக்காமல் உடனுக்குடன் வேலையை முடிக்க வேண்டும். இல்லையானால், சீட்டுக் கிழிக்கப்படும். இந்த முறை மூலமாக முதலாளிகள் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியைப் பன்மடங்கு அதிகமாகச் சுரண்டுகிறார்கள். குறைந்த கூலிக்கு, ஓய்வு ஒழிச்சலின்றித் தொடர்ச்சியாகத் தொழிலாளர்கள் உழைப்பதன் விளைவாக வறுமையில் ஆழ்ந்துவிடுவதோடு, விரைவில் பல நோய்களுக்கும் ஆளாகிறார்கள்.

ஆகவே, எந்த வடிவத்தில் கூலி கொடுத்தாலும் சரி, தொழிலாளர்கள் விற்ற உழைப்புச் சக்திக்குத் தகுந்த கூலி கிடைக்காதென்பதே முக்கியமான பிரச்னை. முதலாளிகள் கொடுக்கும் பணத்தினால், வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வாங்க முடியுமா என்பதையும் கவனிக்க வேண்டும். இப்பொழுது கூலியைச் சிறிது கூட்டியிருந்தாலும், பஞ்சப் படி கொடுத்திருந்தாலும் எந்தத் தொழிலாளியாவது குபேரனாகிவிட்டதாகச் சொல்ல முடியுமா? விலைவாசிகள் ஏறியிருப்பதால், சிறிது கூலியைக் கூட்டினாலும்கூட இன்னும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வாங்க முடியாத நிலைமையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு மாசத்திற்கு 30 ரூபாய் சம்பளம் என்றால், அந்த ரூபாய் மூலமாக வாழ்க்கைக்குத் தேவையான எவ்வளவு பொருள்களை வாங்க முடியும் என்பதைக் கவனிக்க வேண்டும். முதலாளித்துவ சமூகத்தில் ஒரு தொழிலாளியும் தனது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலைமையி லிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

முதலாளித்துவ சமூகத்தில் யந்திரம் வளர்ச்சி யடையக் கைத்தொழில்கள் அழிந்து போகின்றன. சுதந்தரமாகத் தொழில் செய்து வந்தவர்கள் நகரங்களில் தொழிற்சாலைகளைச் சுற்றத் துவங்குகிறார்கள். இவ்வாறு தொழிலாளர்கள் பட்டாளம் தினே தினே பெருகி வருகிறது. மற்றொரு புறம் யந்திரங்களில் அபிவிருத்தி செய்யும் போதெல்லாம் தொழிலாளர்கள் வேலையி லிருந்து நீக்கப்படுகிறார்கள். ஆகவே, வேலையில்லாதவர்களின் பட்டாளம் தினே தினே பெருகி வருகிறது.

வியாபாரம் பெருகினால், உடனே முதலாளிகள் அதிகமாகத் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். வியாபார பந்தம் ஏற்பட்டால்—தொடர்ச்சியாக இது ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது—உடனே வீதியில் தள்ளிவிடுகிறார்கள். முதலாளித்துவ நாடுகளில் இந்தக் கோரக் காட்சியை நாம் தினசரி பார்க்கிறோம்.

முதலாளித்துவ முறையில் இந்தப் பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கவே முடியாது. புதிய சோஷலிஸ்டுச் சமூகத்தில் தான் யாவருக்கும் வேலை என்ற நியதியை நிலை நாட்ட முடியும். இந்த லட்சியத்தை அடைவதற்காகவும், கூலியை அதிகரிப்பதற்காகவும் தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட வேண்டியது மிக மிக அவசியம். இல்லையானல், உதிரியாக இருந்தால், தொழிலாளர்கள் வெற்றியைக் காண முடியாது. முதலாளிகள் தொழிலாளர்களை எப்படிச் சுரண்டுகிறார்கள் என்பதைப் பற்றிக் கூறினேம். இனி, நிலச் சுவான்தார்கள் எப்படி விவசாயிகளைச் சுரண்டுகிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

முதலாளித்துவம் விவசாயிகளை நிலப் பிரபுக்களின் பிடியிலிருந்து விடுவித்த போதிலும், நகரங்களில் மாத்திரம் அபிவிருத்தியைச் செய்து கிராமங்களைப் பிற்போக்குப் படுகுழியில் தள்ளி யிருக்கிறது.

நிலத்தில் பெரும் பாகம் ஒரு சில நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தம். இவர்களும் உழுது பயிர் செய்யாமல், விவசாயிகளின் உழைப்பை அட்டை போல் உறிஞ்சி வாழ்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிலத்தை விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கிறார்கள். இவ்வாறு விவசாயிகளின் உழைப்பை "நில வாடகை" என்ற வடிவத்தில் சுரண்டுகிறார்கள்.

இரண்டுவித நில வாடகை இருக்கின்றன. பயிர் செய்யும் சில நிலங்கள் செழிப்பானவை யல்ல. சிறிது மேடாகவோ, அல்லது, வாய்க்காலில் வேண்டிய அளவு தண்ணீர் வராததாகவோ இருக்கலாம். இத்தகைய மட்ட ரகமான நிலத்தின் வாடகை சிறிது குறைவாகவே இருக்கும். இதற்கு, "அடிப்படையான வாடகை" என்று பெயர். அதே சமயத்தில், போக்கு வரத்துச் சாதனங்களுக்குச் சமீபமாகவும், சுலபமாகத் தண்ணீர் பாயக் கூடியதாகவும், செழிப்பாகவும் இருக்கும் நிலத்துக்கு வாடகை உயர்த்தப்படுகிறது. செழிப்புக்குத் தகுந்த நில வாடகையை உயர்த்துவதற்கு "வித்தியாசப்படும் நில வாடகை" என்று பெயர்.

இந்த நில வாடகை என்பது என்ன? முதலாளிகளின் லாபம், தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய தொகைதான் என்று முன்பு கூறினேம். அதே மாதிரியாக விவசாயிகளுக்குச் சேர வேண்டிய தொகைதான், "நில வாடகை". அதாவது, விவசாயியின் உழைப்புச் சக்தியை நிலச் சுவான்தார்கள் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

"நில வாடகை என்பது அதிக மதிப்பு. விவசாயிகள் உழைத்த அதிக உழைப்பு" என்று கார்ல் மார்க்ஸ் கூறுகிறார்.

ஸ்தாபன ரீதியாக ஒன்றுபடாத விவசாயிகளின் ரத்தத்தை நிலச் சுவான்தார்கள் அட்டை போல் உறிஞ்சி வருகிறார்கள். நமது தமிழ் நாட்டில் சில இடங்களில், கண்டு முதலில் ஐந்தில் ஒரு பாகம், இரண்டு பாகம்தான் உழுது பயிர் செய்த உழவனுக்குச் சொந்தம். நிலச்சுவான்தாரி முறையை அடியோடு ஒழிக்காத வரையிலும் விவசாயிகள் முன்னேற்ற மடைய முடியாது; தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் முடியாது.

✲

தீப்பெட்டி

●

எம். ராமானந்த ஹவேரி

இந்தக் காலத்தில் தீப்பெட்டியும் மனிதருக்கு இன்றியமையாத பொருள்களில் ஒன்ருக ஆகிவிட்டது. தேவை அதிகமாகவே, தீப்பெட்டி செய்தல் ஒரு பெரிய லாபகரமான கைத்தொழிலாகக் கருதப்படுகிறது.

இக் கைத்தொழில், பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில்தான் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுதுகூடத் தீக்குச்சிக்குத் தேவையான குச்சிகள் இங்கே கிடைக்காததால், பிற நாடுகளிலிருந்து மரங்களை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று.

எங்கே பொருதினலும் தீப்பற்றிக்கொள்ளும் தீக்குச்சிதான் முதலில் செய்யப்பட்டது. ஆனல், அது மிகவும் அபாயகரமானதாக இருந்ததால், தீங்கிழைக்காத தீக்குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் குச்சிகளை யாரும்—குழந்தைகள் கூட—தாராளமாக உபயோகப்படுத்தலாம்.

தீக்குச்சி உற்பத்திக்குத் தொழிற்சாலைகள் அவசியம் என்பதில்லை. இதைக் குடிசைத் தொழிலாகவும் நடத்தலாம். இந்த எளிய முறையினல் பிற நாடுகளுக்கு — தொழிற்சாலைக்குத் தேவையான யந்திர சாதனங்கள் வாங்குவதன் மூலம்— நம்முடைய பணம் வெளியே செல்வதைத் தடுக்கலாம். இது, வருஷத்தில் நான்கு மாசங்களுக்குமேல் தொழிலின்றிச் சோம்பித் திரியும் கிராம வாசிகளுக்கு வேலை கொடுத்து, பொருள் தேட வழி கோலுகிறது. தீக்குச்சித் தொழிற்சாலைக்குத் தேவையான பிரம்மாண்டமான கட்டடங்களும், உயர்ந்த யந்திரச் சாதனங்களும் குடிசைத் தொழிலுக்கு அவசியம் இல்லை. தீக்குச்சிக்கு வேண்டிய சிறு சிம்புகளுக்கு அந்நிய நாட்டுக்காட்டு மரங்கள் வேண்டும் என்பதும் அவசியமில்லை. நம் நாட்டில் எங்கே பார்த்தாலும் பயிராகிற மூங்கில் மரங்களையே உபயோகப்படுத்தலாம். மூங்கிலையும், தீக்குச்சியின் அளவுக்கு வெட்டிச் சேகரிக்க நிறையப் பணமோ, அதற்கென்றே தயார் செய்யப்பட்ட யந்திரமோ தேவையில்லை. சாதாரணமாக உபயோகத்தில் இருக்கும் அரம், வீட்டில் சமையல் அறையில் உபயோகப்படும் கத்தி இவை இரண்டுமே மூங்கிலைத் தீக்குச்சியின் அளவுக்கு வெட்டியெடுக்கப் போதுமானவை.

அளவாக நறுக்கிச் சேர்த்த மூங்கில் சிம்புகள் பாஸ்பரஸ் அமிலத்தில் தோய்த் தெடுத்த பிறகு, பாராஃபினை எளிதில் உறிஞ்சுகின்றன. மூங்கில் இயற்கையிலேயே பலம் பொருந்திய மரமாதலின், சிறிது நேரம் நன்ருய் நின்று எரிகிறது. மேலும், முனையில் தோய்க்கப்பட் டிருக்கும் மருந்தையும் கெட்டியாக, எளிதில் விடாமல் பிடித்துக்கொள்ளும் குணம்

கள்ளச் சந்தையில் தீப்பெட்டி தலைமை வகிக்க ஆரம்பித்துவிட்டது. இப் பஞ்சத்தை நீக்கத் தீப்பெட்டியைக் குடிசைத் தொழிலாகக் கொண்டுவர வேண்டும். யோசனைகள் கட்டுரையில் இருக்கின்றன. பாரத் ஜோதியி லிருந்து.

அதற்கு உண்டு. இம்மாதிரி, குடிசைத் தொழில் மூலம் உற்பத்தி செய்த தீக்குச்சி, குணத்திலும் உபயோகத்திலும், தொழிற்சாலைகள் விநாடிக்கு ஆயிரக் கணக்கில் உற்பத்தி செய்யும் தீக்குச்சிகளுக்கு எந்த விதத்திலும் குறைந்த தல்ல.

தீப்பெட்டிகள் செய்வதற்கு என்று வீணுக மரத்தை உபயோகிக்க வேண்டியதில்லை. குறைந்த செலவிலேயே பழைய செய்தித் தாள்களை உபயோகிக்கலாம். நான்கு மடிப்புகளாக ஒட்டி நன்ருக உலரவைக்கப்பட்ட தாள்கள் தீப்பெட்டி செய்ய உபயோகப்படுகின்றன. பழைய செய்தித் தாள்கள் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகம் வேண்டாம். அவை ஏராளமாக, குறைந்த விலையில் கிடைக்கின்றன.

சிறுவர்களும், சிறுமிகளும் கூடத் தீப்பெட்டி செய்யும் தொழிலை மேற்கொள்ளலாம்.

நம் நாடு முழுவதும் இம்மாதிரி, தீப்பெட்டி செய்வதைக் குடிசைத்தொழிலாக்கினுல், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஓர் அளவு குறையும் என்பது திண்ணம். இம் முறையினுல் குறைந்தது பத்து லட்சம் பேர்களுக்காவது வேலை கிடைக்கும். ஆனுல், தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் எண்ணிக்கை பதினுயிரத்துக்கு மேல் இராது.

மாகாண அரசாங்கத்தாரும், சமஸ்தானுதிபதிகளும் தீப்பெட்டி செய்வதைக் குடிசைத் தொழிலாக்குவதில் கவனம் செலுத்துவதோடு மட்டும் நில்லாமல், ஊக்கமளிக்கவும் வேண்டும். பலருக்குத் தொழில் தேடித் தருவது மட்டுமின்றி, மற்றக் குடிசைத் தொழில்களை வளர்க்கவும் உபயோகமாக இருக்கிறது. தீக்குச்சிகள் வெட்டி எடுக்கப்பட்ட பிறகு வீணுக்கப்படும் மூங்கிலைக் காகிதத் தொழிலுக்கு உபயோகப்படுத்தலாம். மேலும், பாய் பின்னல், கூடைகள் முடைதல், நாற்காலி செய்தல், விசிறி செய்தல் போன்ற உப கைத் தொழில்களும் இதனுல் பெருகும்.

✲

தத்துவ விசாரணை!

திபெத்தி லுள்ள ஒரு சத்திரத்தில் இரண்டு லாமாக்கள் உட்கார்ந்திருந்தனர். நாள் கணக்காக அவர்களிடையே பேச்சே இல்லை. இரண்டு பேரும் ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்தார்கள்.

பிப்ரவரி மசாம் 14-ம்தேதி ஒரு லாமா, தன் தாடியை வருடுவதை விட்டுவிட்டு, மெதுவாகத் திருவாய் மலர்ந்தார்: "மகனே! வாழ்க்கை ஒரு கிணற்றைப் போன்றது".

மற்றவர் மார்ச் மாசம் 8-ம் தேதி வரை வாயையே திறக்கவில்லை. 9-ம் தேதியன்று "ஏனப்பா! என் வாழ்க்கை கிணறுபோல இருக்கிறது?" என்று கேட்டார்.

ஏப்ரல் 22-ம் தேதி, முதல் லாமா மறுபடியும் வாயைத் திறந்தார்: "அப்பனே! அதுவே உன் சித்தமானுல், உன் இஷ்டப்படியே இருக்கட்டும். வாழ்க்கை கிணறு போன்ற தல்ல!"

—நேஷன்

சீனுவில் இலக்கியப் புரட்சி

லின்யூடாங்

இலக்கியப் புரட்சி கட்டாயம் தேவை. 1917-ல் இத்தகைய இலக்கியப் புரட்சி உண்டாயிற்று. டாக்டர் ஹூஷியும் செட்டுஷியவும் இதைத் தலைமை தாங்கி நடத்தியவர்கள். பேசுகிறபடியே எழுதவேண்டுமென்பதே இவர்களது வாதம். இதற்கு முந்தியே இன்னும் பல புரட்சிகள் கிளம்பியிருந்தன. டாங் பரம்பரைக் காலத்திலே ஹான்யு என்பவர் 5-ம், 6-ம் நூற்றுண்டின் மரபான அலங்கார நடையை எதிர்த்துக் கிளம்பினுர். எளிய நடையிலே எழுதவேண்டுமென்று அவர் வாதாடினுர்; இலக்கிய அளவுகோலை நிதானமான நிலைக்குக் கொண்டுவர வேண்டும்; உரை நடை, படிப்பதற்குச் சரளமாயிருக்க வேண்டும். இதற்கு வழி, சௌ பரம்பரைக் காலத்தின் ஆரம்ப இலக்கியங்களைப் பின்பற்றுவதுதான். இலக்கிய மதிப்பீட்டின்படி பார்த்தால், இத்தகைய இலக்கியமும் பழைய பெரு நூல்களென்றே ஆகும். பழங்காலத்து ஆசிரியர்களை முறையாய்ப் பின்பற்றினுல்தான் இத்தகைய நடைகை வரும். அது எளிதல்ல. ஹான்யுவுக்குப் பிறகு, இலக்கியப் போக்குகள் பல மாதிரியாக மாறின. ஒரு சமயம் சௌ காலத்தையும், மற்றச் சமயம் ச்சின்ஹான் காலத்தையும் மாறி மாறிப் பின்பற்றி வந்தனர். ஹான்யுவே போதுமானபடி பழமையிற் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஆசிரியனைதும், டாங் காலத்தையும் வெவ்வேறு காலங்களிலே பின்பற்றிவருவாராயினர் சூங் ஜனங்கள் டாங் காலத்தவரைப் பின்பற்றினர். மிங், ச்சிங் காலத்து எழுத்தாளர், டாங்களையும், சூங்களையும் பின்பற்றினர். இலக்கியப் போக்கு என்பது யாரைப் பின்பற்றி எழுதுவது என்பதைப் பொறுத்த ஒன்ருகி விட்டது.

கடைசியாகப் பதினுரும் நூற்ருண்டிலேதான் ஒரு மனிதர் கிளம்பி, "தற்காலத்து மக்கள் தற்காலத்துப் பாஷையிலேதான் எழுதியாக வேண்டும்" என்று சொல்ல ஆரம்பித்தார். இவர் சரித்திரக் கண்கொண்டு சரியான போக்கைக் கடைப்பிடித்தார். இவர்தான் யுவான் ச்சுங்-வாங் என்பவர். இவரது இரு சகோதரர்களும் இவரது சகாக்களாக இருந்து முயற்சி செய்து வந்தார்கள். சாதாரண வழக்கிலுள்ள சொற்களையும், கொச்சை மொழிகளையுங் கூட, யுவான் தமது வசனத்தில் தைரியமாகக் கையாண்டு வந்தார். கொஞ்ச நாளைக்கு இவர் பெயர் எங்கும் பிரபலமாக அடிபட்டு வந்தது. குங் ஆன் (குங் ஆன் என்பது யுவான் பிறந்த ஜில்லாவின் பெயர்.) கட்சி என்று சொல்லுகிற ஒரு கட்சியே உண்டாகி, அதில் சேர்ந்தவர்கள் எல்லாம் யுவானுடைய நடையைப் பிரபலப்படுத்தி வந்தனர். வசன நடையிலே தேவையற்ற கட்டுப்பாடு

காலப் போக்குக்கு ஏற்றவாறு மாறிவந்து, ஒரு மகத்தான எதிர்காலத்தைக் கொண்டிருக்கிறது சீன இலக்கியம். இதை விவரிக்கும் இந்தக் கட்டுரை, புதுமைப் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள சீன மக்களும் சீனமும் என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

களும் வரையறைகளும் இருக்கக் கூடாதென்று வாதாடியவரும் இவர்தான். கட்சியை எழுதும்போது, சொற்கள் நம்மையறியாது கை வழியே, அதாவது பேனு வழியே, வந்து விழுகிற படியே தங்குதடையின்றி உபயோகிக்க வேண்டு மென்று சொன்னவரும் இவரே. நடையில் எழுத்தாளனின் தனியியல்பு இருக்க வேண்டும்; தனி மனப் போக்குக்கு இடமிருக்க வேண்டும்; இலக்கியம் என்ருல், ஒருவனுடைய சொந்த இயல்பின் வெளிப்பாடல்லாது (ஷில்லிங்) வேறென்ன? இதைத் தடைப் படுத்தலாமா? — என்றெல்லாம் வாதமிட்டவரும் இவரே.

ஆனல், சாதாரணக் கொச்சை மொழிகளை உபயோகிப்பதை ராஜ சபை விமர்சகர்கள் விரைவில் எதிர்க்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த ஆசிரியரை அவர்கள் தமது இலக்கிய வரலாறுகளெல்லா வற்றையும் 'ஆழமின்மை', 'அழகின்மை', 'மரபு அழிப்பு முயற்சி' என்ற அடைமொழிகளாலேகுறிக்கலாயினர். இவ்வளவு காலத்துக்கப்புறம், 1934-லிலேதான், நபர் நடையின் கர்த்தாவாகிய இந்த ஆசிரியரது பெயர் அடியோடோ ஒருவாருே அழிந்து போகாவண்ணம் காப்பாற்றப்பட்டது. யுவான் கூடப் பேச்சு வழக்கிலுள்ள பெஹ்ஹூவா என்கிற பாஷையை எழுத்தில் கொண்டுவர வில்லை. இதற்கு வேண்டிய துணிச்சலோ, தூரதிருஷ்டியோ அவரிட மில்லை. இன்று உயிர்த் துடிப்போடு வழங்கி வரும் பாஷையின் தளவரிசைகளை நிர்மாணித்தது, பொது மக்கள் பிரியமாய்ப் படித்து வந்த பிரபல நாவல்களை எழுதிய ஆசிரியர் கூட்டமே. இந்த ஆசிரியர்கட்கு இலக்கியப் புகழ் லட்சிய மல்ல. பொது ஜனங்களுக்குப் புரியும்படி எழுதுவதற்கு, அவர்கள் பேசும் நடைமுறை பாஷையிலேதான் எழுதியாக வேண்டும். அதனல், இவர்கள் தமது நாவல்களைப் (பெஹ்ஹூவா) பேசும் பாஷையிலேயே எழுதி வந்தனர். எனவே, இந்தப் பாஷையையே மக்கள் கையாள வேண்டுமென்று டாக்டர் ஹூஷி விடாது பிரசாரம் செய்தபோது, அவர் புதிதாக ஒன்றும் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியிராமல் போயிற்று. கிட்டத்தட்ட ஓர் ஆயிரம் வருஷமாகவேதான் மேலே சொன்ன நாவலாசிரியர்கள் வழியைச் செப்பனிட்டு வைத்துவிட்டார்களே? புதுப் பாஷையிலே எழுதிப் பழகுவதற்கும் முதல்தரமான முன் மாதிரி நூல்கள் இருக்கின்றன. ஆதலேதான், மூன்று நான்கு வருஷ காலத்துக் குள்ளேயே இந்த முயற்சி மகத்தான வெற்றி பெற்றுவிட்டது.

இலக்கியப் புரட்சியைத் தொடர்ந்தாற்போல இரண்டு முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன. ஒன்று, சரளமான, நபர் இயல்பு கொண்ட நடையை வளர்க்கும் முறை; இதில், ச்செள சகோதரர்களான ச்செள ட்ஸோஜென்னும், ச்செள ஹூஜென்னும் (லூசின்) முன்னணியில் நின்றனர். யுவான் ச்சுவாங் கொள்கைகளை ச்செள ட்ஸோஜென் பின்பற்றி வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது மாறுதல், 'சீனத்தை ஐரோப்பிய மயமாக்குதல்' என்று சொல்லுகிருேமே, அது. இந்த மாறுதல் பதச் சேர்க்கையிலும் சரி, பதப் பொருளிலும்

ரெக்ஸோனுவினுல் சரும ஆரோக்கியமேற்படுகிறது ... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோககிய முடையதாக இருககாவிட்டால் அழகு ஏறபடாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனுவின் உதவியை பயன படுத்திககொள்ளுங்கள். இந்த, ஆன்டிஸெப்டிககும் குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரேகஸோனுவின நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டு சேர்த்து, மலினங்களை அகற்றி சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சரும சுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனுவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்யமேறபட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

ஆடவருக்கு ரெக்ஸோனு: ரெக்ஸோனு பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப்பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனுவிலிருக்கும் கேடில் ஆன்டிஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதவால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்திஞலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப் பெருமையைக கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ரெக்ஸோனு: ரெக்ஸோனுவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவையவங்களை எரிசசல் அரிப்பு முதலானவைகளிலிருநது காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனுவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோககியத்திற்கு மிகவும் அவசியமானது.

RP. 30-50 TM

REXONA PROPRIETARY LIMITED

குளிர்ச்சி வாய்ந்தது-களைப்பாற்றுவது

நறுமணம் கமழ்வது

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

வெப்பம் மிகுந்த நாட்களில், டாடாஸ் ஓடி கொலோன் கொஞ்சமெடுத்து நெற்றியிலும், கழுத்திலும், கைகளிலும் பூசிக்கொள்ளுங்கள். வாஸனை பொருந்திய அதன் குளிர் ஸ்பரிசம் வெப்பத்தைத் தணித்து, களைப்பையும் போக்குகிறது. ஏனெனில் அதன் நுண்ணிய நறுமணம் குன்றுகளினின்று வீசும் குளிர்த் தென்றல் போன்றது.

கடுமையான கோடையில் உடல்வாடி வதங்கிச் சோர்வுறுது, குளிர்மையாகவும் உற்சாகம் ததும்பவுமிருக்க அது உங்களுக்குதவி புரிகிறது. எப்பொழுதும் ஒரு பாட்டில் கைவசம் வைத்துக் கொண்டு அதை தினசரி உபயோகியுங்கள்.

டாடாஸ் ஓடி கொலோன்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

சரி ஏற்படலாயிற்று. பதப் பொருளில் ஏற்படுவது நல்லது, தடுக்க முடியாதது; பதச்சேர்க்கையில் ஏற்படுவது சுத்த அபத்தமே. அரும் பொருள்களுக்கு மேலைநாட்டுச் சொற்களை உபயோகிப்பது இயல்புதான்; இன்றைய கருத்துக்களையும் எண்ணங்களையும் பழைய சொற்களாலே சரியாய்ச் சொல்ல முடியாததுதான். இந்த மாறுதல் 1890-ல் லியாங் சிச்சாவோவால் தொடங்கப் பெற்றது. 1917-க்கப்புறம் இதன் வேகம் அதிகரித்தது; மிதமிஞ்சிப் போயிற்று என்றுகூடச் சொல்லலாம். மேலைநாட்டு விஷயங்களிலே பைத்தியம் பிடித்துவிட்டபடியால், சீனத்தை ஐரோப்பிய மயமாக்கிய முயற்சி மிதமிஞ்சிப் போய்விட்டது என்று சொல்லுவதிலே தப்பில்லை. புதிதாக உண்டுபண்ணிய நடையோ சீனப் பாஷைக்கு ஏற்றதேயல்ல; நீடித்து நிற்கக்கூடியதுமல்ல. இந்தச் சங்கடம் மேலைநாட்டு நூல்களை மொழிபெயர்க்கும்போதுதான் சரியாய்ப் புலனாகும். இந்த மொழிபெயர்ப்புகள் ஒரே அபத்தக் களஞ்சியமாயிருப்பதோடு சராசரிச் சீனனுக்குப் புரியவும் மாட்டா.

உண்மையில், இத்தகைய மொழிக் கொலைக்குக் காரணம் மொழி பெயர்க்கிறவர்க்குப் பிறமொழியிலே போதிய பயிற்சி இல்லாததுதான். இதனாலே, ஒரு சொற்றொடரிலுள்ள மொத்தக் கருத்தை உணர்ந்து கொள்ளாமல், எழுத்துக்கு எழுத்து மொழிபெயர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்கட்கு ஏற்பட்டுவிடுகிறது. (கொத்ரே-தேம் தபரீ என்பதைப் பச்சையாய் 'எனது பாரிஸ் மனைவி' என்று ஒருவர் மொழிபெயர்த்துப் போட்டுவிட்டார்.) ஆங்கிலத்திலே, சங்கிலிப் பின்னல்போல் பல வாக்கியங்கள் இணைந்து வரும். இவற்றை அப்படியே ஆங்கில அமைப்புப்படியே மொழிபெயர்த்தால், எவ்வளவு விகாரமாயிருக்கும்? (சீனத்திலே இப்படிப்பட்ட பின்னல் வாக்கியங்களுக்கு இடமில்லை.) ஆங்கிலத்திலே, பல வாக்கியங்களைக் கொண்ட பல வரிகள் முக்கிய வினை நிகழ்ச்சியைப் பற்றிப் பலவிதமாக விவரித்துக் கொண்டே போய்க் கடைசியில் வினைமுற்றாக வந்து முடியும். இவற்றை அப்படியே அமைப்பு முறை மாறாமல் சீனத்தில் கொண்டு வருவதென்றால் முடிகிற காரியமா? முடிந்தாலும், படிக்கத்தான் என்னவாவது புரி

சர்வ சாதாரணப் பொய்கள்

நாவிதன்: இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன், சார்!

பல் வைத்தியர்: பயப்படாதீர்கள், சார்! கொஞ்சம்கூட வலிக்காது.

ரேடியோ அறிவிப்பாளர்: உங்களுக்கு மிக மிகப் பிடித்தமான ஓர் இசை நிகழ்ச்சி இப்போது நடைபெறும்......

பஸ்ஸில் அம்மாள்: இல்லையப்பா, கண்டக்டர்! குழந்தைக்கு இன்னும் மூன்று வயசுகூட ஆகவில்லை.

கோர்ட்டில் வக்கீல்: என் கட்சிக்காரன் நிரபராதி என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால், நான் இங்கே அவனுக்காகப் பேச வந்திருப்பேனா?

பத்திரிகை ஆசிரியர்: உங்கள் கட்டுரையை ஏற்றுக்கொள்ள இயலாம விருப்பதற்கு நிரம்பவும் வருந்துகிறோம்.

டெர் ஸ்வெர்ஷனிக்

யுமா? சில மாறுதல் வேண்டியவைதான்; சரளமாய்ப் பிரித்துப்பிரித்து வாக்கியங்களை அமைப்பது நல்ல அபிவிருத்திதான். முதன்மையான வாக்கியத்தைச் சேர்த்துப்போடுவது முந்தியெல்லாம் முடியாது. நான் போகமாட்டேன், மழை பெய்யுமானுல்—என்ற மாதிரி) இப்போதோ முடியும். [மொழிக்கு மொழி சொல்லமைப்பு வேற்றுமை காரணமாகத் தமிழில் நிபந்தனை வேற்றுமையாகிய 'சூல்' கொண்ட உபவாக்கியம், முதன்மை வாக்கியத்துக்கு முன்னுலேயே சாதாரணமாக வரும். அதாவது, மழை பெய்யுமானுல் நான் போகமாட்டேன் என்று: மொழிபெயர்ப்பாளர்.] இதனுல், வசன நடையில் சரளமும், லாகவமும் உண்டாகின்றன.

சீனவசனத்துக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது. அழகிலும், ஆற்றலிலும், காலப் போக்கிலே, அது எந்தத் தேசிய பாஷையோடும் போட்டிக்கு நிற்க முடியும். சிறந்த நவீன ஆங்கில உரைநடையின் தனிச்சிறப்பு என்னவென்ருல், கற்பனைச் சித்திரங்களைத் தீட்டும் திடமான சொற்களும், கச்சிதமான வியாக்கியானம் செய்து, இலக்கியப் பொருள் தருகிற நுணுக்கமான சொற்களும் நல்லபடியாகக் கலந்திருப்பதே. சித்திரச் சொற்கள் நாட்டு நடையில் உள்ள ஆங்கில பாஷையி லிருந்து எடுக்கப் பட்டவை. நுணுக்கச் சொற்கள் ரோமானியர்களிடமிருந்து (லத்தீன்) கிடைத்த பரம்பரைச் சொத்துக்கள். ஆங்கிலத்திலே மிகச் சரளமான சொல்லமைப்பு இருப்பதனுலேயே அது சக்தியுள்ள இலக்கியக் கருவியாக இருந்து வருகிறது. 'செய்தி மோப்பம்,' 'அறிவு நாலம்படை' 'மொழிப் பிரவாகம்,' வெற்றி அலைப் பெருக்கில் சவாரி 'கன்சர் வேடிவ் கட்சியோடு லாயிட்ஜியார் லீலைகள், என்ற தோரணையில் எழுதுவதை ஆங்கிலத்தில் நயமான பாஷை என்று மதிப்பார்கள். தப்பான இலக்கிய மதிப்பீடு செய்யும் பாஷையிலே இப்படிப்பட்ட சொற்களைக்களைந் தெறிந்து விடுவார்கள். மோப்பம், நாலம்படை, அலைப் பெருக்கு, பிரவாகம் முதலிய சொற்களுக்குப் பதில், நயமுணர்தல், செறிவுகள், போக்கு, முன்னேறுதல் என்ற சொற்களைப் போட்டால் வேகம் போய்விடுகிறது. ஒன்றுக்கு ஒன்று துணையான திடச் சொற்களும் நுணுக்கச் சொற்களும் சீனப் பாஷையிலே நிறைய உண்டு. சீனப் பாஷையின் அடிப்படை அமைப்பு நெடுகலுமே திடமானது. ஆங்கிலோ சாக்ஸன் சொற்களும் இப்படித்தான். சீனத்துச் சங்க இலக்கியங்கள் விட்டுச் சென்ற இலக்கியப் பரம்பரைச் சொத்திலே நயமான பொருளும் எழிலும் உள்ள சொற்கள் ஏராளமாக உண்டு. ஆங்கிலத்தில் ரோமானியச்(லத்தீன்)சொற்கள் இப்படித்தான். இப்படி, இந்த இரு இயல்புகளையும் செம்மையாகக் கையாளும் இலக்கிய கர்த்தா சிருஷ்டிக்கும் உரைநடையில் இன்னும் அருமையான பொலிவும் சக்தியும் மிளிரும்.

*

காலம் வரும்

வெளி நாடுகளில் உள்ள இந்திய மக்களின் நலனைப் பாதுகாக்க, இந்தியா தன் வலிவுள்ள கரத்தை நீட்டும் காலம் வரும்.

—பண்டித நேரு.

எண்ணெய் நெய்யாகுமா?

●

ப. வெ. வேங்கடசுப்பிரமணியன்

எண்ணெய்யில் என்னதான் வித்தை செய்தாலும் அது நெய்யாகுமா? வெளிப் பார்வைக்கு வேண்டுமானால், வனஸ்பதி, நெய் போல் தோற்ற மளிக்கலாம். உண்மையில் நெய்க்கு உள்ள சில முக்கியமான தன்மைகள் வனஸ்பதிக்குக் கிடையா. மனிதன் எளிதில் சீரணித்துக்கொள்ளக் கூடிய சில காடி வகைகள் நெய்யில் அதிகம். ஆனால், வனஸ்பதியிலோ சீரணிக்க மிகவும் கடினமான சில காடி வகைகள் உண்டாகிவிடுகின்றன.

பருத்திக்கொட்டை மனிதன் உணவா? 'இல்லை' என்று உடனே தயங்காமல் சொல்லுவோம். பருத்திக் கொட்டை எண்ணெய்யை நம்மில் அநேகர் உணவாகக் கொள்கிறோம் என்றால், என்னை நம்ப மாட்டீர்கள். பருத்திக் கொட்டை எண்ணெய்யில் ஹைட்ரொஜன் அணுக்களைப் புகுத்தி வனஸ்பதி என்ற அழகான பெயரையும் சூட்டி, தகரடப்பிகளில் அடைத்து, கண்ணைக் கவரும் லேபில்களை ஒட்டி, கடைகளில் விற்பனைக்கு வந்தால் அதை நாம் போட்டி போட்டுக் கொண்டு வீட்டுக்கு வாங்கிப் போகிறோம். தினசரிகளிலோ இதைப் பற்றிப் பிரமாதமான முழுப் பக்க விளம்பரம். "பெண்கள் எங்கள் வனஸ்பதியையே சமையலுக்கு விரும்புகின்றனர். உங்கள் வீட்டிற்கும் உடனே இரண்டு டின்கள் வாங்கிப் போங்கள்" என்று நமக்குப் புத்தி சொல்லுகிறது ஒரு விளம்பரம்.

"சீனச் சட்டி எங்கள் வனஸ்பதியே வேண்டு மென்று படபட வென்று வெடிக்கிறது" என்கிறது மற்றொரு விளம்பரம். சீனச் சட்டி பேசும் பாஷையைக் கூட இந்த விளம்பரம் தெரிந்து கொண் டிருக்கிறது! "எங்கள் வனஸ்பதி உங்களுக்காகவே கை படாமல், ஏ. பி. ஸி. டி. முதலிய வைடமின்களுடன் தயார் செய்யப்பட் டிருக்கிறது" என்கிறது மற்றொரு விளம்பரம். இந்த விளம்பரங்களை யெல்லாம் படித்து விட்டு ஒவ்வொன்றிலும் ஒரு டின் வனஸ்பதி வாங்கி நம் வீட்டுக் கிழவருக்குச் சமையல் செய்து போட்டால், அவரும் எங்கே துள்ளிக் குதித்து விளையாட ஆரம்பித்துவிடுவாரோ என்ற சந்தேகம்கூட நமக்குத் தோன்றும். வனஸ்பதி என்பது எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது? தேவையான நெய் கிடைக்காத காரணத்தைக்கொண்டு முயற்சி செய்த தன் பலன் என்று சொல்லிவிட முடியாது. எண்ணற்ற தாவர எண்ணெய்களும் இன்னும் பல மிருக எண்ணெய்களும் திரவ ரூபமா யிருக்கின்றன. இவை கெட்டியாக இருந்தால் எவ்வளவோ சௌகரியமாக இருக்கும் என்ற எண்ணம்தான் முதலில் தோன்றியது. மெழுகு வர்த்திகள் செய்வதற்கும் சோப்பு முதலியன செய்வதற்கும் கெட்டியான எண்ணெய்யாக இருந்தால் மிகவும் நல்லது. எண்ணெய்யை எப்படி இறுகச்

எண்ணெய்க்கும் வனஸ்பதிக்கும் உள்ள சில முக்கியமான வித்தியாசங்களைப் பற்றிக் கூறும் இந்தக் கட்டுரை எண்ணெய்யைப் பற்றிய கட்டுரை வரிசையில் நான்காவது. அடுத்த கட்டுரை "வனஸ்பதி".

செய்வது? சரி, எப்படியோ கஷ்டப்பட்டுச் சிற்சில முறைப்படி எண்ணெய்யைக் கெட்டியாக்கிவிட்டார்கள். அடாடா, அதிகமாக இறுகிவிட்டதே! கொஞ்சம் மிருதுவாக, அதுவும் மணல் மணலாக இருந்தால் அசல் நெய் மாதிரி இருக்குமே என்ற எண்ணம் வந்தது. சரி, ஹைட்ரோஜனை வேண்டிய அளவு புகுத்தி நிறுத்திக் கொண்டால் எண்ணெய் நமக்குத் தேவையான அளவு கட்டியாகிறது. சென்டிகிரேட் 36 டிகிரி உஷ்ணத்தில் உருக வேண்டுமா? சரி; ஹைட்ரோஜனை இரண்டேகால் மணிநேரம் உள்ளே செலுத்து. சென்டிகிரேட் 37 டிகிரி உஷ்ணத்தில் உருகவேண்டுமா? சரி ஹைட்ரோஜனைக் கூடப் பத்து நிமிஷம் உள்ளே செலுத்து. இவ்வளவுதான். கிடைக்கும் பதார்த்தத்தை 'வனஸ்பதி நெய்' என்று பெயர் சூட்டவேண்டியதுதான். நெய்மணம் ஒன்றுதான் பாக்கி. அதற்கும் எதையோ ஒன்றைச் சேர்த்தால் அதுவும் வந்துவிடுகிறது. இப்படித்தான் வனஸ்பதி செய்யும் முறை வளர்ச்சி பெற்றது. இதையே இறுகின எண்ணெய், அல்லது தாவர நெய் என்பர். மிகவும் சுத்தமாக, பார்ப்பதற்கு நெய் போன்றிருக்கும். நெய்யின் மணத்தையும் கொண்டிருக்கும், ஆனல், நெய்யின் தன்மைகள் இதற்குக் கிடையா.

தாவர எண்ணெய்களும் மிருக எண்ணெய்களும் பெரும்பான்மை திரவமாகவே இருக்கின்றன. முன் சொன்னபடி கெட்டியாக இருந்தால் அவைகளுக்குக் கிராக்கி அதிகமாக இருக்கும். சோப்புச் செய்வதற்கும், மெழுகுவர்த்திகள் செய்வதற்கும் கெட்டியான கொழுப்புகளே தேவை. வெகு காலமாக அநேக விஞ்ஞானிகள் திரவ எண்ணெய்யைக் கெட்டிக் கொழுப்பாக மாற்றுவது எப்படி என்பது பற்றி ஆராய்ச்சி செய்தனர். 'ஸபேடீர்' என்பவர் 1897-ம் வருஷத்தில் இதற்கு ஒரு வழி கண்டுபிடித்தார். பிளாட்டினம், பலேடியம் என்பவை இரண்டு அபூர்வ உலோகங்கள். இவை மிகவும் கனமானவை. விலையும் மிக அதிகம். இந்த உலோகப் பொடிகளின் உதவியைக்கொண்டு எண்ணெய்யிலுள்ள சில குறை—கொழுகாடிகளில், ஹைட்ரோஜனைப் புகுத்தி நிறை கொழுகாடிகளாக்கி எண்ணெய்யை இறுகச் செய்தார். இதில் பிளாட்டினமும் பலேடியமும் ஒரு மாறுதலும் அடைவதில்லை. தம் தன்மை சிறிதும் மாருமல் இவை எண்ணெய்யை இறுகச்செய்கின்றன. ஒரு தடவை உபயோகப் படுத்திய பிளாட்டினத்தையும் பலேடியத்தையும், எண்ணெய்யினின்றும் பிரித்தெடுத்து, சுத்தப்படுத்தி மேலும் மேலும் உபயோகிக்க முடியும். இவ்வாறு தம் தன்மை மாருமல் வேறு ரசாயன மாறுதலை அதிகப்படுத்த உதவும் பொருள்களுக்கு ஆங்கிலத்தில் 'கேடலிடிக் ஏஜென்ட்ஸ்' என்பர். தமிழில் நாம் அவைகளை 'உந்து வஸ்து' என்று கொள்ளலாம்.

பிளாட்டினமும் பலேடியமும் தங்கத்தைவிட விலை அதிகம். அதனல், இவைகளை உபயோகப்படுத்தி வனஸ்பதி செய்தால் அந்த நெய்யைச் சாதாரணஜனங்கள் விலை கொடுத்து வாங்க இயலாது. வேறொரு விஞ்ஞானி

இதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தார். நார்மன் என்பவர் 1902-ம் வருஷத்தில் நிக்கெல் என்ற உலோகத்தின் உதவியைக் கொண்டு எண்ணெய்யில் ஹைட்ரொஜனைப் புகுத்தி இறுக்க முடியும் என்று கண்டார். அவர் இதைக் கண்டுபிடித்துச் சில வருஷங்களுக்குள் அநேக முதலாளிகள் வனஸ்பதி செய்யும் தொழிலை மேற்கொண்டனர். நாள் ஆக ஆக, செய்யும் முறைகளும் விருத்தியடைந்தன.

இந்தியாவில் வனஸ்பதி உற்பத்தியானது கடந்த 25 ஆண்டுகளுக்குள்தான் வளர்ச்சி பெற்றது. தற்பொழுது வனஸ்பதித் தொழிற்சாலைகள் தேசமெங்கும் ஏற்பட்டுள்ளன.

வனஸ்பதியை உபயோகிப்பதனல் தேகத்துக்கு ஏதாவது கெடுதல் நேருமா என்பதை நாம் சிறிது ஆராய வேண்டும். இதைப்பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் உண்டு. வனஸ்பதி பார்ப்பதற்கு நெய்யைப்போல் தோற்றமளிக்கிறது. வெண்ணையை விலை கொடுத்து வாங்க முடியாத ஜனங்கள் இதை அதிகமாக வாங்கி உபயோகிக்கிருர்கள். வனஸ்பதி திடமாகத் தேகத்துக்குக் கெடுதல் செய்யக் கூடியது என்று இதுவரை ஒருவரும் நிரூபிக்கவில்லை என்றே சொல்லலாம். கெடுதல் செய்யுமோ என்ற பலத்த சந்தேகம் பல அறிஞர்களுக்கு உண்டு. அதற்குச் சான்றுகளும் உள்ளன.

ஒரு சாரார் வனஸ்பதி சாதாரண எண்ணெய்யை விடச் சிறந்தது என்பார்கள். வேறொரு சாரார் வனஸ்பதி எண்ணெய்யைவிட உயர்வா யில்லாவிட்டாலும், எண்ணெய்க்கு வனஸ்பதி எவ்விதத்திலும் தாழ்ந்த தல்ல என்பார்கள்.

சிலர், "வனஸ்பதி உண்பதினல் நிக்கெல் விஷம் தேகத்தில் புகுந்து கெடுதல் பண்ணும்" என்பார்கள். வேறு சிலர், "ஒரு மனிதன் ஒரு கெடுதியும் நேரிடாமல் நாளொன்றுக்குச் சுமார் அரைக் கிராம் நிக்கெலைச் சீரணிக்க முடியும். அதனல் வனஸ்பதியின் மூலம் தேகத்தினுட் செல்லும் மிக மிக நுட்பமான அளவு நிக்கெல் ஒருவிதக் கெடுதியும் செய்யாது. வனஸ்பதியை எண்ணெய்க்குப் பதில் தாராளமாக உபயோகிக்கலாம்" என்பர்.

இன்னும் இதைப்பற்றி எத்தனையோ வித அபிப்பிராயங்கள் உண்டு. அபிப்பிராயங்கள் எப்படி யிருந்தாலும் ஒவ்வொருவருக்கும் வனஸ்பதி உபயோகிப்பதனல் கெடுதல் இருக்குமோ என்ற பெருத்த சந்தேகம் இருப்பது தெளிவு. வனஸ்பதி உடம்புக்கு ஒன்றும் செய்யாது என்று மிகவும் சிரமப்பட்டு நிரூபிப்பதில் அநேகர் முனைந்துள்ளனர். ஆகவே, வனஸ்பதியைப் பற்றிய அபிப்பிராயங்கள் இரு விதத்திலும் இருக்கின்றன.

இந்த இடத்தில் என் சொந்த அநுபவம் ஒன்றைச் சொன்னல் மிகவும் பொருந்தும். ஒரு விசேஷ தினத்தை ஒட்டி எங்கள் சாப்பாட்டுவிடுதியில் விருந்து ஏற்பாடு செய்திருந்தோம். என் நண்பர் ஒருவர் அவருக்குத் தெரிந்த வட நாட்டு நண்பர் ஒருவரை விருந்தாளியாக அழைத்திருந்தார். என் நண்பர் அந்த வட நாட்டு நண்பரை எங்கள் எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்து, எங்களிடம் "இவருக்கு நம் நாட்டுச்

சாப்பாடு மிகவும் பிடிக்கும் அதனால்தான் இவரை நான் அழைத்து வந்திருக்கிறேன்'' என்றார். பலவிதப் பட்சணங்களும் பரிமாறப்பட்டபின் நாங்கள் அதை உண்ண ஆரம்பித்தோம். வட நாட்டு நண்பர் மாத்திரம் பட்சணங்களை ருசிபார்த்துவிட்டு அப்படியே வைத்துவிட்டார். "பட்சணங்கள் எதில் பொரிக்கப் பட்டன?'' என்று சமையல் காரனைப் பார்த்து ஹிந்துஸ்தானியில் கேட்டார். "நல்ல நெய்யில் செய்ததுதான்'' என்று சொல்லிக்கொண்டே அவன் சமையலறையி லிருந்து ஒரு வனஸ்பதி டப்பியைக் கொண்டுவந்து காட்டினான். நண்பர் பட்சண வகைகளைக் கையால் தொடக்கூட மறுத்துவிட்டார். "ஏன், உங்களுக்கு வனஸ்பதி பிடிக்காதோ?'' என்று நான் கேட்டேன். அதற்கு அவர், "உடம்புக்குக் கெடுதி செய்யு மென்று என் நம்பிக்கை'' என்றார். நான் உடனே என் கையி லிருந்த தினசரி ஒன்றைப் பிரித்து ஒரு வனஸ்பதியைப் பற்றி அன்று வந்திருந்த விளம்பர மொன்றைப் படித்துக் காண்பித்தேன். விளம்பரத்தில் அந்தக் குறிப்பிட்ட வனஸ்பதியைப் பற்றி ஒரு புராணமே கண் டிருந்தது. அந்த வனஸ்பதியில் பலவித வைடமின் களும் இன்னும் தேகத்திற்குப் புஷ்டியைக் கொடுக்கக் கூடிய பலவிதப் பொருள்களும் சேர்க்கப்பட் டிருப்பதாகவும், லட்சக் கணக்கான ஜனங்கள் அதை வாங்கி உபயோகித்து நல்ல பலன் பெறுவதாகவும் கண் டிருந்தது.

"அதற்கென்ன, எங்கள் விளம்பரம்தான் அது. அந்த விளம்பரமும் படமும் உங்கள் மனத்தைக் கவர வில்லையா? விளம்பரத்துக்கென்று ஆயிரக்கணக்கான ரூபாய் நாங்கள் செலவழிக்கிறோமே!'' என்றார் அவர். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு நண்பரேதாம் புரியவைத்தார். அந்தக் குறிப்பிட்ட வனஸ்பதி செய்யும் கம்பெனியின் பங்காளிகளில் அந்த நண்பரின் தகப்பனார் மிகவும் முக்கியமானவர். அவர்கள் தாங்களே உற்பத்தி செய்யும் வனஸ்பதியைக்கூட உபயோகிப்ப தில்லை. அவர் வீட்டில் வனஸ்பதி டின் ஒன்றைக்கூடப் பார்க்க முடியாதாம். நெய் கிடைக்காவிட்டால், தனி எண்ணெய்தான் உபயோகிப்பார்களாம். டன் கணக்கில் உற்பத்தி செய்து தினசரிகளில் விளம்பரம் செய்து, லட்சக்கணக்கான ஜனங்களின் வயிற்றினுள் செலுத்திப் பணம்குவிப்பதே அவர் தொழில்.

வனஸ்பதி செய்யும்பொழுது நிக்கெல் ஆக்ஸைடோ அல்லது தனி நிக்கலோ உபயோகிக்கப்படுகிறது. எண்ணெயில் வேண்டிய அளவு ஹைட்ரோஜனை உட்செலுத்திய பிறகு எண்ணெய்யி லிருந்து நிக்கெலை நன்றாக வடிகட்டி எடுத்து விடுகிறார்கள். வடிகட்டின எண்ணெய்யை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்துப் பார்த்தால், சுத்த ஜலத்தைப்போல் அப்பழுக்குச் சிறிதும் இல்லாமல் மிகவும் தெளிவா யிருப்பது தெரியும். ஆனால், நிக்கெல் எண்ணெய்யிலுள்ள தனிக்கொழுக்காடியுடன் கலந்து நிக்கெல் சோப்பாக மாறி எண்ணெய்யில் மிக மிக நுட்பமான அளவில் இருக்கக்கூடும். இதை வடிகட்டியின் மூலம் எடுக்க முடியாது.

'போயேமர்' என்னும் ஜெர்மன் தேசத்திய விஞ்ஞானி ஒரு

வர் ஹைட்ரோஜன் மூலம் இறுக்கப்பட்ட நல்லெண்ணெய்யை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் 2·5 சதவிகிதம் தனிக் கொழுக் காடியும், 0·01 சத விகிதம் சாம்பலும் 00 06 சத விகிதம் நிக்கெலும் இருக்கக் கண்டார்.

ஜெர்மனி முதலிய ஐரோப்பிய தேசங்களில் இறுக்கப்பட்ட எண்ணெய் நம் தேசத்தைக் காட்டிலும், அதிகமாக உணவாகக் கொள்ளப்படுகிறது. அத் தேசங்களில் உண்டாக்கப்படும் வனஸ்பதி நெய்யில் ஒரு குறிப்பிட்ட அளவு நிக்கெலுக்கு மேல் இருக்கக் கூடாதென்று அரசாங்கத்தார் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். நம் தேசத்தில் அவ்விதமான கட்டுப்பா டொன்றும் கிடையாது.

டாக்டர் என். என். காட்போலே என்னும் நம் நாட்டு நிபுணர் ஒருவர் பின்வருமாறு அபிப்பிராயம் கொண்டுள்ளார்: உடம்பின் உஷ்ணம் பாரன்ஹீட் 98·6° அல்லது சென்டிகிரேட் 37°. நாம் உட்கொள்ளும் கொழுப்பின் உருகுநிலை இந்த உஷ்ணத்தில் அல்லது இதற்குக் குறைவாக இருந்தால் அந்தக் கொழுப்பை நாம் எளிதாகச் சீரணித்துக் கொள்ள முடியும். ஏனென்றால், இந்த உஷ்ணத்தில் உருகும் கொழுப்பு உடம்பின் உஷ்ணத்தினால் வயிற்றில் கட்டியாக இராமல் உருகியே இருப்பதால், சீரணிக்க எளிது. சாதாரண சீரண சக்தி உள்ள மனிதன் ஒருவன் சென்டிகிரேட் 36 அல்லது 37 டிகிரியில் உருகும் கொழுப்பில் பெரும் பகுதியை, அதாவது 97 அல்லது 98 சத விகிதத்தைச் சீரணித்துக்கொள்ள முடியும். ஸ்டீரின் என்ற காடியின் உருகும் உஷ்ணம் 71 டி. செ.க்குமேல் இருப்பதால் இதைச் சீரணிப்பது மிகவும் கடினம். இந்த ஸ்டீரிக் காடி வனஸ்பதியில் அதிகமாக இருப்பதால் வனஸ்பதி உபயோகிப்பது உசித மல்ல.

அவர் மேலும் சொல்லுவது: "வனஸ்பதி பார்ப்பதற்கு நெய் போன்று இருப்பதைத் தவிர வேறு ஒரு குணமும் இல்லை. வனஸ்பதியில் ஒரு புதுக் காடி ஒன்று உண்டாகிவிடுகிறது. இதற்கு ஐஸோ ஒலீக் காடி என்று பெயர். இந்தக் காடி இயற்கையில் கிடைக்கும் எந்த எண்ணெயிலும் கொழுப்பிலும் கிடையாது.

இயற்கையாயுள்ள எண்ணெய்யில் காணப்படும் பல வேறு காடிகளே மனிதனுடைய கொழுப்பில் காணப்படுகின்றன. சாதாரண தாவர எண்ணெய்களிலிருந்தும், நெய்யிலிருந்தும் எளிதாக மனிதனுக்கு வேண்டிய கொழுக்காடிகள் கிடைக்கின்றன. வனஸ்பதி வயிற்றைநிரப்புவதைத் தவிர வேறு எவ்விதப் பயனும் தருவதில்லை. நாம் உட்கொள்ளும் வனஸ்பதியில் பெரும்பாகம் நம் தேகத்தில் சேராமல் வெளியே போய்விடுகிறது. நம் தேசத்துச் சுகாதார நிபுணர்கள் இதைக் கவனிக்க வேண்டிய தவசியம்''.

இந்தியாவில் சராசரி தினம் ஒன்றுக்கு 300 டன் வனஸ்பதி செய்கிறார்கள். இது வருஷம் ஒன்றுக்குச் சுமார் 1,00,000 டன் ஆகிறது. இன்னும் சில வருஷங்களில் வனஸ்பதி உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்துவருகின்றன.

✲

ஒரே வழி

சக்கரவர்த்தி
ராஜகோபாலாச்சாரியார்

நம்முடைய தேசிய, சமூக வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயங்களெல்லாம், அவைகள் நல்லதோ, கெட்டதோ எதுவாயிருந்தாலும் சரி, நம் மனத்திலே ஆழப் பதிந்திருக்கின்றன. இவைகளைத் திருத்திவிடலாமென்றோ, அடக்கிவிடலாமென்றோ நாம் நம்புகிறோம். புற வளர்ச்சிகளெல்லாம், இயற்கைச் சட்டங்களின் படி நடக்கின்றன. இவைகளை நாம் மாற்ற முடியாது. மனிதனின் மனத்தைத்தான் நம் சக்திக்குள் அடக்க முடியும்; இதைச் செய்துவிட்டோமானால், மற்றவை தாமாகவே சரியாகிவிடும்.

மனிதனின் நடத்தை அவனுடைய மனத்தை அநுசரித்தே இருக்கிறது. மனம் ஒரு குறிப்பிட்ட போக்கில் சென்றாலோ, அல்லது மாறுபாடு அடைந்தாலோ, நடத்தையின் போக்கை மாற்ற எதாலுமே முடியாது. இயற்கைக்கு முரண்பட்டவைகளைப் பெறச் செய்கிற பிரயத்தனங்கள் எல்லாம் தோல்வியில் தான் முடியும். வற்புறுத்திச் சொன்னால், இதை யாரும் ஒப்புக்கொள்வார்கள்; ஆனாலும், அதே சமயத்தில் நாம் தினந்தோறும் நியதியை மீற முயன்று கொண்டுதான் இருக்கிறோம். பலாத்காரத்தையே சிந்திக்கிறோம்; விரோதிகள், நண்பர்கள் இருவரையும் உள்ளிட்ட மற்றவர்களையும், பலாத்காரத்தைச் சிந்திக்க வழி காட்டுகிறோம்; அதே சமயத்தில், ஒழுங்கும் சமாதானமும் நிலவ வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். ஒழுங்கின்மை தலைகாட்டும்போது, நமக்குப் பெருத்த விசனமும், ஏமாற்றமும் ஏற்படுகின்றன; ஆனால், இந்த ஒழுங்கின்மைக்குக் காரணம் நம் தவறுகள்தாம்.

அப்போது, எதுதான் மனிதனுடைய மனத்திற்கு நாம் விரும்புகிற உருவையும், போக்கையும் அளிக்க முடியும்? நம்முடைய முன்னேற்றத்துக்கு ஒரே ஒரு விஷயம்தான் தேவையாயிருக்கிறது; அது அறிவன்றி வேறில்லை. மேலும், மனிதனுடைய மனம் உருவாகிக் கொண்டிருக்கும் சமயத்தில் அறிவுப் பயிற்சி வேண்டும்; அதற்குப் பின்னர், சற்றுக் குறைந்த அளவில் வாழ்க்கை முழுவதிலும் அறிவுப் பயிர்சி தேவை.

பாலர்களுக்கோ, முதியவர்களுக்கோ, எழுதப் படிக்கத் தெரிந்துவிடுவது அறிவு ஆகிவிடாது. பள்ளிக்கூடத்தில் வாசிப்பதன் மூலம் எழுத்தறிவைப் பெற்றுவிடலாம்; ஆனால், எழுத்தறிவு உள்ள மனிதனுக்குக்கூட உண்மையான அறிவு தேவையாயிருப்பது உண்டு; அநேகமாக அப்படித்தான் இருக்கிறது. விஷய ஞானம் என்பதும் அறிவு ஆகாது; நேர்மையாகச் சிந்தனை செய்வ

> *"ராமாயணத்தையும், மகா பாரதத்தையும் திரும்பத் திரும்பப் படியுங்கள்; அல்லது யாரையேனும் படிக்கச் சொல்லிக் கேளுங்கள். நம் நடத்தையிலும், குணத்திலும் இருக்கும் கெடுதலான அம்சத்திற்கு இது தான் தலைசிறந்த மருந்து."*

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்கு விசுவாசத்துடன் சேவைபுரிந்து நம்பிக்கையுள்ள கர்பாசய ரோகநிவாரணி என்று புகழையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

EASTCRNS 378

கேஸரி குட்டீரம் லிமிட்டெட், மதருஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல்ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை

வாழையடி வாழையாக வந்த நம் கூந்தல் வளர்ப்புக் கலையின் பொக்கிஷம்

ஜாப்கோ

ஹேர் குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கி, உதிரும் கேசத்தை நிறுத்தி கூந்தலை நீண்டு வளரச் செய்யும்

ஜயபாரதம் கம்பெனி

மல்லேஸ்வரம் • பெங்களூர்

ஸ்ரீவிஸ்-அம்லா ஹேர் ஆயில்

உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. குளுர்ச்சியாயும் புத்துணர்ச்சி அளிப்பதாயுமிருக்கிறது.

ஸ்ரீவிஸ் பர்பியூமரி ஒர்க்ஸ்

பூரண உரிமையாளர்கள் :

S. விஸ்வநாதம் & கம்பெனி

44, பந்தர் தெரு : மதராஸ்-1

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர் சில்க்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-1078

தும், உண்மையைப் பேணிப் போற்றுவதும்தாம் அறிவு. இந்த விதமான அறிவையும் அளிக்கக் கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும் முயலுகின்றன. ஆனால், நம் நாட்டின் நாற்பது கோடி ஆண், பெண் மக்களுக்கு இந்த அறிவை வழங்குவதில் அதிக சிரத்தை காட்டுவது மதம்தான். இந்தக் கோடிக் கணக்கான ஆண் பெண் அனைவரும், சரியாகச் சிந்தித்து, விஷயங்களின் தராதரத்தைச் சரியாக மதிப்பிடுகிறார்கள். அநேகம் பேர்கள் இதை அறியவோ, ஒப்புக்கொள்ளவோ முன்வருவதில்லை.

கலாசாலைகளும், கல்லூரிகளும் நமக்குப் பல நன்மைகள் புரிந்திருக்கின்றன. ஆயினும், நம் மனம் பண்பட்டுச் சீரிய முறையில் அமைவதற்குக் கல்லூரிப் புத்தகங்களையும் ஆசிரியர்களையும் விட, நம்முடைய மதமே பெரிதும் துணை புரிகிறது.

மதத்தின் பெயரில், நம்மிடையே எவ்வளவோ கோட்பாடுகளும், கர்வமும், அசூயையும் நிலவுகின்றன. ஆனால், நான் குறிப்பிடுவது இதை அல்ல. மதத்தினுடைய உண்மையான அர்த்தத்தை நாம் தெரிந்து கொள்ளவில்லை.

நமக்கிருக்கும் தொந்தரவுகளுக் கெல்லாம் காரணம் மதம் தான் என்று சிலர் சொல்வார்கள்.

இந்த முடிவு, அசுத்த நீரை வயிய உட்கொண்டு உடல் நலம் குன்றினால், அந்த நீரையே குறை கூறுவதை ஒக்கும்.

தண்ணீரிலுள்ள அசுத்தம் தான் எல்லா நோய்களுக்கும் காரணமாயிருக்கிறது. ஆனால், இந்தக் காரணத்திற்காக, மனிதன் தண்ணீரையே ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? இதே போல், பொருள்களின் தராதரத்தைப் பகுத்தறியும் நிலையான உணர்வு தவிர்க்க முடியாத ஒன்று. அது யாதெனில், தனி மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலக மக்களிடம் நடந்துகொள்ளும் முறையும், அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமான, புலனறிவுக்குப் புலப்படாத ஆண்டவனிடத்தில் காட்டும் பக்தியும் தான். இதற்குத்தான் மதம் என்ற பெயரைக் கொடுத்துத் தத்துவ விசாரதர்களும்—அவர்களைக் காட்டிலும் அதிகமாக, ஞானிகளும், பக்தர்களும்— வெவ்வேறு உருவங்களிலும் வழிகளிலும் வளர்த்துவிட்டிருக்கிறார்கள். குணத்தைக் கொடுப்பது மதம்தான்; புத்தகம் அல்ல.

முக்கியமாக, ஹிந்துக்களை, நம்முடைய மத சம்பந்தமான புராணங்களைப் படித்தோ, அல்லது கேட்டோ தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ராமாயணத்தையும், மகா பாரதத்தையும் திரும்பத் திரும்பப் படியுங்கள், அல்லது யாரையேனும் படிக்கச் சொல்லிக் கேளுங்கள். நம் நடத்தையிலும், குணத்திலும் இருக்கும் கெடுதலான அம்சத்திற்கு இதுதான் தலை சிறந்த மருந்து. அதன்மூலமாக நாம் நம்மை நல்ல மனிதர்களாக ஆக்கிக்கொள்வோம். நம்முடைய நாட்டில் மகிழ்ச்சியும், சுபிட்சமும் நிறையச் செய்ய இந்த ஒரு வழிதான் உண்டு.

ரிஷிகளை நம்முடன் வாழ அழையுங்கள்; பிறகு எல்லாம் சரியாக நடக்கும்.

*

புத்தக உலகம்

பட உலகில் கடவுள்கள்: [ஆசிரியர்: கோரநாதன். எரிமலைப் பதிப்பக வெளியீடு, துறையூர், திருச்சி. விலை 4 அணா.]

சினிமா உலகில் நமது தெய்வங்களைத் தப்பான முறையில் சித்திரிக்கும் போக்கைக் காரசாரமாய்க் கண்டிக்கும் பயனுள்ள நூல்.

புதுக் குரல்: [ஆசிரியர்: கம்பதாசன். வெளியிட்டோர்: நிழல் காரியாலயம், திருவல்லிக்கேணி, சென்னை—5. விலை 12 அணா].

கவிஞர் கம்பதாசன் இந்தக் கவிதைத் தொகுப்புகளின் மூலம் புதுக் குரல் எழுப்பி நம்மை மகிழ்விக்கிறார். "புதுக் குரல்" நன்றாய் இருக்கிறது. இரண்டொன்றைத் தவிர மற்றவைகளும் நன்றாய் இருக்கின்றன. பாராட்ட வேண்டிய முயற்சி.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

இந்தியத் தேசியக் காங்கிரஸ்: [ஆசிரியர்: ஆச்சார்ய கிருபாளனி: தமிழாக்கம்: கா. திரவியம். நவயுகப் பிரசுராலயம், சென்னை—5. விலை. ரூ.1-4-0.]

காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகள் வளர்ந்த விதமும், இவைகளுக்கு ஆட்சேபணை கூறுகிறவர்களுக்குத் தகுந்த பதிலும் நல்ல முறையில் சொல்லப்பெற்றுள்ளன.

இந்தியச் சிறு கதைகள்: [தொகுப்பாசிரியர்: சு. குருசாமி. வெளியிட்டோர்: அருணோதய நிலையம், வேலூர் (சேலம்). விலை ரூ. 2—8—0.]

இதில் ஒன்பது இந்தியப் பாஷைகளிலிருந்து எடுத்த அழகான பத்துச் சிறு கதைகள் உள்ளன.

தென்றல்: [ஐந்தாவது புத்தகம். பதிப்பாசிரியர்: குயிலன். விநியோக உரிமை: இலக்கிய மன்றம், தியாகராய நகர், சென்னை—17. விலை 4 அணா.]

ம. பொ. சிவஞான கிராமணியார், மு. வரதராஜனார் முதலிய அறிஞர்களின் கதை, கட்டுரைகளைக் கொண்ட நேர்த்தியான புத்தகம். 'வாழைக் குலை' என்ற பாட்டு மூல ஆசிரியராகிய கேரள சங்கம்புழை கிருஷ்ணப் பிள்ளைக்கும், குயிலனுக்கும் சிறப்புத் தரக்கூடியது.

மிருதங்க ஸ்வபோதினி: [ஆசிரியர்: எம். ஆர். துரைராஜ். பிரசுரம்: பி. கே. மூர்த்தி. சென்னை. விலை ரூ. 1—8—0.]

மூன்று பாகத்தில், மிருதங்க வாத்தியத்தின் உயிர்ச் சொற்கள் தொடங்கி, தாள லட்சணம், வாசிக்கும் முறை ஆகியவைகள் விளக்கப்பெற்றுள்ளன. அப்பியாசங்களும், விளக்கப் படங்களும் உள்ளன. நயமான நூல்.

ஸ்ரீ காமதேனு கானாம்ருதம்: (முதல் பாகம்) [இயற்றியவர்: கேசவபல்லி சேதுராமையா. கிடைக்குமிடம்: ஜோதி பிரஸ், 93. ஜி. சி. ரோட், தூத்துக்குடி; 9, தெப்பக்குளம் சந்து, தூத்துக்குடி. விலை ரூ. 1—0—0.]

47 தெலுங்குக் கீர்த்தனைகள் ராக தாள விவரத்துடனும், தமிழ்க் கருத்துரையுடனும் உள்ளன.

கர்னாடக சங்கீதம் (மூன்றாம் பாகம்) [ஆசிரியர்: சங்கீத வித்துவான் எஸ். ஆர். குப்புசாமி, பி. ஏ., எம். மியூஸ்., கோயம்புத்தூர். விலை 8 அணா.]

கட்டாயம் படித்துப் பயின்று பயனடைய வேண்டிய புத்தகம்.

அல்லாமா இக்பால்: [ஆசிரியர்: ர. பா. மு. கனி, 33, எர்ரபாலு செட்டித் தெரு, சென்னை. விலை ரூ. 1—10—0.]

சிறந்த உருதுக் கவிஞராகிய அல்லாமா முகம்மது இக்பால் அவர்களைப் பற்றிய அழகான, உணர்ச்சி செறிந்த புத்தகம். கவிஞரின் வரலாறும், அவரது கவிதைகளின் மொழிபெயர்ப்பும் உள்ளன. வரவேற்க வேண்டிய புத்தகம்.

வாழ்க்கை நாடகம்: [ஆசிரியர்: நாகர்கோவில் கே. மகாதேவன். கவிக்குயில் வெளியீடு, கோட்டாறு, தென் திருவிதாங்கூர். விலை ரூ. 1—8—0.]

எட்டுக் கதைகள் உள்ளன. சரளமாய், நன்றாய்ச் சொல்லப்பெற்றிருக்கின்றன.

நமஸ்காரம்: [ஆசிரியர்: சுகி. கார்த்திகேயினி பிரசுரம், புதுக்கோட்டை, விலை ரூ. 2—8—0.]

இருபத்தொரு நகைச்சுவைக் கட்டுரைகள் உள்ளன. விஷயங்கள் நன்று யிருக்கின்றன.

— நாரா

ஆசா: [ஆசிரியர்: நா. ஸீ. பட்கே. தமிழாக்கம்: கோ. ரா. புணதாம்பேகர். வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 5—0—0].

இந் நூலின் மூல ஆசிரியரும், மொழிபெயர்ப்பு ஆசிரியரும் 'சிங்க மராட்டியர்'கள்.

ஒரு பக்கத்தைக் கூடத் தள்ளாமல் 451 பக்கத்தையும் அலுப்படையாமல் படிக்க முடிகிறது. நாகரிக வாழ்க்கையையும், அரசியல் போராட்ட வாழ்க்கையையும் இழை போட்டுப் பின்னி நெய்திருக்கிறார் ஆசிரியர் இந் நூலை. கதையில் நல்ல ஓட்டம் இருக்கிறது. நாம் நினைக்கிற படியே கதை முடிகிறது. விரசமான கற்பனைகள் இல்லை. கதையைப் படித்து முடித்துவிட்டு வாதப் பிரதிவாதம் செய்ய வரிந்துகட்டிக் கொண்டு முனைந்து நிற்கும் வாசகர்களுக்குப் பதில் சொல்வதற்காக, ஆசிரியர் தனிக் கதா பாத்திரம் ஒன்றை இதில் சிருஷ்டித்து விட்டிருக்கிறார்.

ஒரு வாலிபனை இரண்டு மூன்று பெண்கள் காதலித்து ஏமாறுகிறார்கள் என்பது மட்டும் சற்று ரசக் குறைவாக இருக்கிறது. இந்தக் கற்பனையை ஒதுக்கிவிட்டே இந் நூலை நன்கு ரசிக்க முடியும். மற்றப்படி எக்குறையும் சொல்வதற் கில்லை. சஞ்சீவினி, வானவில் இவற்றோடு—இந்த ரகத்தோடு—இதையும் கண்ணை மூடிக்கொண்டு தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

நம் இதயத்தில் உறைந்து புரையோடிப் போன எண்ணங்களை நொங்கும் நுரையுமாக மேலே மேலே கிளப்பி விட்டுவிட்டு விஷமமாகச் சிரிக்கும் ஆசா, என்றைக்கும் மறக்க முடியாத சிருஷ்டி.

மொழிபெயர்ப்பு மிகவும் நன்றாக இருக்கிறது.

புதுயுகம் (மாத வெளியீடு): [ஆசிரியர்: தி. சி. சிவஸ்வாமி. புதுயுகம் காரியாலயம், ஆதனக்கோட்டை P. O., புதுக்கோட்டை ஸ்டேட். விலை 4 அணா]

புது முறை. புது முயற்சி. விஷயங்கள் கார சாரமாக இருக்கின்றன. முழுக்க முழுக்க அரசியலாகவே இருக்க வேண்டுமென்ற நோக்கத்தால் ரசம் குறைகிறது. அமைப்பு முறையில் மாறுதல் அவசியம்.

அமுதம்: [பதிப்பாசிரியர்: கே. சி. எஸ். அருணாசலம். புதுமலர் நிலைய வெளியீடு. அமுதம் காரியாலயம், திருச்சி ரோடு, கோயம்புத்தூர். விலை 8 அணா]

சில நல்ல கதைகளும் கவிதைகளும் இருக்கின்றன. 'சுகி' கதையும் 'தூரன்' கவிதையும் முதலிடம் பெறுகின்றன.

கிராம சேவை: [மாத வெளியீடு. ஆசிரியர்: எம். கே. சுப்பிரமணியன்.

கிராம சேவை காரியாலயம், 27, தம்பியா ரெட்டித் தெரு, மாம்பலம். விலை 2 அண.]

இது மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது. இன்னும் நன்ருக வளர வேண்டும். விஷயங்கள் நன்று. உருவில் கவர்ச்சி தேவை.

சேரநாடு: [மாத மிரு முறை. ஆசிரியர்: வித்வான் G. சதானந்தம் சேரநாடு காரியாலயம், னெம்மாரா, கொச்சி சமஸ்தானம். விலை 4 அண.]

நல்ல தமிழ்ப் பத்திரிகை. இலக்கியம் பரந்துகிடக்கிறது. இதில் இலக்கியக் கட்டுரைகள்தாம் முதலிடம் பெறுகின்றன. வரவேற்க வேண்டிய சீரிய முயற்சிதான்.

மௌலாஞ ஜௌஹர் மலர்: [வெளியிட்டோர்: இஸ்லாமியக் கலைக் கழகம் (கதிர் காரியாலயம்), 59, பிராட்வே, சென்னை. விலை 8 அண.]

மௌலாஞ முகமதலி உரிமை இந்தியாவிற்காகப் போராடிய இடியேறு. ஆனல், அவர் ஆவி இங்கிலாந்தில் உரிமை இந்தியாவைக் காணமலே அகன்றது. அவர் நினைவாகப் பிறந்திருக்கிறது இம் மலர். இதை இன்னும் முயற்சியோடு நன்ருக வெளியிட் டிருக்கலாம். இம் மலர் பிறந்த கதையை முகப்பில் அழகாகச் சொல்லுகிருர் ர. பா. மு. கனி. இதில் உள்ள கட்டுரைகள் அனைத்திலும் 'சிங்கம் வீழ்ந்தது' என்ற அறிஞர் திரு. வி. க. வின் கட்டுரை ஒப்பற்றது.

வருகின்ருர் நேத்தாஜி: [ஆசிரியர்: எஸ். டி. சுந்தரம். வெளியிட்டோர்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை 12 அண.]

புத்தகம் சிறிதுதான். ஆனலும் ஒரு முறைக்கு இரண்டு முறை படிக்க வேண்டிய புத்தகமே.

கர்னல் லெட்சுமி: [ஆசிரியர்: சு. ரா. வெளியிட்டோர். முத்தமிழ் நிலையம், சென்னை 1. விலை 6 அண.]

பயனில்லாத புத்தகம். ஆசிரியர் இந்தப் புத்தகத்தை எழுதுவதாக நினைத்துக்கொண்டு தொகுத்திருக்கிருர்! வெளியிட்டோரும் படித்துப் பார்த்து வெளியிட் டிருக்கலாம்.

விஜயலக்ஷ்மியின் வெற்றி: [ஆசிரியர்: ரா. ஹாலாஸ்யநாதன். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், சென்னை—மதுரை—கோயம்புத்தூர் திருநெல்வேலி. விலை 8 அண.]

தென்னுப்பிரிக்க இந்தியர் பிரச்னை உலக கவனத்தை இழுத்தது. இப் பிரச்னையில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் உலகை வியப்பில் ஆழ்த்தி, பீல்ட் மார்ஷல் ஸ்மட்சைத் தோற்கடித்து வெற்றிகொண்ட விவரங்கள் அடங்கிய நூல்.

வீயட்-நாம் குடியரசு: [ஆசிரியர்: ஆர். ராமநாதன். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், சென்னை —மதுரை — கோயம்புத்தூர் — திருநெல்வேலி. விலை 6 அண.]

வீயட்-நாமின் சுதந்தரத்தைத் தொடாதே, தொட்டால் கையை முறித்துவிடுவோம் என்று முழக்கம் செய்தனர் நம் தலைவர்கள். வீயட்-நாம் எப்படிப் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடியது என்ற விவரங்கள் அடங்கிய நூல்.

கவிதைக் கதம்பம்: [ஆசிரியர்: 'ஜீவன்'. கிடைக்குமிடம்: இந்திரா நிலையம், புதுவயல், ராமனதபுரம் ஜில்லா. விலை ரூ. 1-6-0.]

இந்தக் கவிதைத் தொகுதி இதுவரை தமிழர் கண்களுக்குப் படாமலிருப்பது பெரும் வியப்பு! இதைப் படித்து முடித்த பிறகு, உயர் வானத்தில் இருக்கும் சில 'பெரிய கை'களுடைய கவிதைக ளெல்லாம் தரம் குறைந்து பொல பொல வென்று கீழே உதிர்வதுபோல் இருக்கிறது.

கவிதைகளில் வேகம் தெறிக்கிறது, பொருள் வழிகிறது. ஜீவன் பேசுகிறது. சொல்வளம் தனியாட்சி புரிகிறது. பவுண்டன் பேனவும், சிட்டுக்குருவி பற்றிய கற்பனைகளும், புதிய பாணியில் பிறந்திருக்கும் தேசிங்கு ராஜனும் இப் புத்தக இமயத்தின் 'எவரெஸ்ட்டு'கள்.

—ராமையா

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப் படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா :—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், நமக் கோளாறு, தூக்கமின்மை, ன, தேகச் சோர்வு முதலியவற்றுக் த் தலை சிறந்த மருந்து. நரை மயிரை ம் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7-0-0

குஷ்டம், வெண்குஷ்டம் :—இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைதியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3-0-0

நரை மயிர் நிவாரணி :—ஆயுர் வேத முறையால் தயார் செய்யப் பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. ரை மயிர் கொஞ்சமாக இருந்தால் . 2-8-0 அதற்கு மேற்பட்டிருந்தால் . 3-8-0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ. 5-0-0

N. B. பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லா விட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார் :

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்கு கிறது. குளித்த பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. தைப் போன்ற தைலத்தை நான் ர்த்ததே இல்லை. நரை மயிருக்கு து மிகவும் உபயோகமானது.

SHRi AYURVEDIC PHARMACY,
P. O. No: 36, Katrisari
(Gaya), India

பொன் விழா வரும்போது

பண்டிட். டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

நாட்டில் தேக சுகத்தையும் சுபீட்சத்தையும் பரவச் செய்வதில் தொடர்ந்து ஐம்பது வருஷங்களாக நிலையான ஊழியம் புரிந்து வந்திருப்பதில் பெருமை யடைகின்றோம்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர்.... மதராஸ்.

EASTERNS 379.

THE UNITED COMMERCIAL BANK LIMITED

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 4-கோடி
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 2-கோடி
ரிசர்வு நிதி	ரூ. 17½-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

ஸ்ரீ. எம். ஏ. இஸ்பஹானி
(வைஸ்-சேர்மன்)

ஸ்ரீ. ரமன்லால் ஜி. ஸரய்யா
(வைஸ்-சேர்மன்)

எல்லா விதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன

பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளன

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

சென்னை கிளைகள் :

310-311, லிங்க செட்டி தெரு
கே. ஆர். கே. ஐயங்கார்
கிளை மானேஜர்

சௌகார்பேட்டை
ஆர். வேணுகோபால்
கிளை மானேஜர்

UCB 3

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய **காரிக்கன் நூல்கள்**, இயந்திர நெசவுக் கேற்ற **வார்ப்பு நூல்கள்**, கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற **மடக்கு இரட்டை நூல்கள்**, மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பெண்களின்
புத்தகம்

•

மங்கை

பதிப்பாசிரியர் :
'குகப்ரியை'

•

குடும்ப வாழ்க்கை
குழந்தை வளர்ப்பு,
வீட்டுவேலே சமையல்,
தையல், எம்ராய்டரி
கதை, கட்டுரை, கவிதை
முதலியன அடங்கியது

•

தனிப் புத்தகம் ரூ. 1
தபால் செலவுடன் ரூ. 1-4

தொடர்ந்து வெளிவரும்
12 புத்தகங்களுக்கும்
தபால் செலவுடன் ரூ. 12

புத்தகங்கள்
தயாராகிறது

•

ஐந்தாவது சுதந்திரம்

லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி எழுதியது

14 கட்டுரைகள் அடங்கியன. ஒவ்வொரு கட்டுரையும் தனித் தன்மை வாய்ந்தது. விஷயங்கள் புதுமையானவை.

•

லெனின்

ஆர். ராமனுதன் எழுதியது

ருஷ்யாவுக்கு அடுத்தபடியாக எங்கு புரட்சி தோன்றும் என்று கேட்டதற்கு, 'இந்தியாவில் தான்' என்று சொல்லிய வீர புருஷர் லெனினின் சரித்திரமும் அவரது கொள்கையும் அடங்கியது இந் நூல்.

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை, சென்னை - 14

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd.,
(Shanti Press) 115 - E, Mowbrays Road, Royapettah, Madras - 14


அசோகா
சுருட்டுகள்
ASOKA CIGAR
25 CIGARS
25
CIGARS
CORONA MEDIUM
ASOKA CIGAR FACTORY COIMBAT
கொரானா பிராண்ட்

உடலுக்கும் உள்ளத்திற்கும் இனி[illegible]

நீங்கள் உயர்ந்த நகைகளால் உங்கள் உடலை அலங்கரித்துக் கொண்டு அழகு பார்க்கும் பொழுது உங்கள் மனம் இன்புறுகிறது

நல்ல அதிர்ஷ்டமும் மனச் சாந்தியும் அளிக்கக்கூடிய நகைகளையே விற்பவர்கள் எப்பொழுதும் அவர்கள் வியாபாரம் பெருந்தன்மையும் நேர்மையும் நிறைந்தது

வீண் டம்பம்

சிலர் இக்கலியுகத்தில் கூந்தலழகுதான் முக்கியம் எனக் கருதுகிருர்கள். நிரந்தரமில்லாத அற்பப்போலி ஆபரணங்களால் அவர்கள் மனம் கவரப்பட்டிருக்கலாம் மேலும் இயற்கையாகவே நிரந்தர ஐச்வரியங்களான தங்கமும் ரத்தினங்களும் காலக்ரமத்தில் மறைந்துவிடும் என அபிப்பிராயப் படுகிருர்கள்.

புத்திமான்களே உண்மையாக நீடித்திருக்கும் பொருள்களை வாங்குகிருர்கள். வைரங்களே என்றும் அழியாத நன்மதிப்புடன் நீடித்திருக்கக்கூடியவை.

313, எஸ்பிளனேட்
மதராஸ்